# தலைவன்

## கவிஞர் வெள்ளியங் காட்டான்

வே. இரா நளினி
1/52 அரசமரம் வீதி
ஆவாரம் பாளையம்
கோவை -6

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

***

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

***

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

உயர்திரு தமிழ்த்துறைத் தலைவர் அவர்களுக்கு,

வணக்கம்.

கண்டதைக் கற்றுக் கசடற்றோன் காசினியில்
பண்டிதன்கா ' ணென்னும் பழமொழியோன் — கண்டதிலே
சேர்ந்தவன்தான் நானுமெனைச் செப்புகிறேன், செந்தமிழை
யோர்ந்தவர்தா மோர வுணர்ந்து.

அறமறிந்தே னாராய்ந் தறிஞரின்பா லாங்கே
புறமறிந்தேன் போதம் பொருந்தத் — திறமறிந்தேன்;
தன்மைத்தா னாரும் தலைவனையும் தந்தேன்மற்
றென்னையா னாள விருந்து.

தூய வுணர்வொன்றித் தூய்வுரை — யொன்றித்
தூய செயலொன்றித் தொல்லுலகில் — தீயவைக
ளஞ்சி யகல மறிவுநிலை யாமதுநம்
நெஞ்சுரமாய் நிற்கும் நிலை.

வான முளமாகி வாய்மை யிளங்கதிராய்
ஞானமே நாம்வாழும் நாளாயின் — ஊனம்தான்
தங்குமிட மாகாது தாரணிமா யின்பமது
பொங்குமிட மாகும் புலன்.

பூரணமாய் ஞானம் புரியவைக் காதவொரு
காரணமாய் வந்த கருத்துயரம் — நேரணுகி
ஆராய்ந்தோ ரொன்றி யறிவிக்கும் போதன்றிப்
பேராது தாமிப் பிணி.

தேசுக்கு வாழ்வது தேராது தேசத்தில்
காசுக்கு வாழ்வது கற்பித்தார் — நேசிக்கும்
உள்ளமே யில்லாதா ருண்மைக்கு நேர்மாறாய்
எள்ளவே கல்லா யிருந்து.

மட்டுமீறு மற்ற மனமகிழ்ச்சி மானமொடு
மட்டுமீறு மற்ற மனமுருக்கம் — மட்டுமீறு
மற்ற மனத்தளர்வு மன்னுமெனின் மட்டுமீறு
மற்று மடியும் மனம்.

காசே குறியான காரணத்தால் கல்வியந்தான்
மாசே குறியாகி மாறியதோ — சேசேசே
செந்தமிழ் நாட்டின் சிறப்பனைத்தும் சீரழிக்கும்
சொந்தசுகச் சூழ்ச்சிச் சுழல்.

அழிவுக் குரியவை யாய்ந்தகற்றக் கற்கின்
இழிவுக் குரியவர்க ளாவோம் — மறவரென
வாழ்ந்தோரும் வார்த்தை வலுவிழந்து வையத்தில்
தாழ்ந்தோராய்த் தீர்வர் தளர்ந்து.

கள்ளச்சா ராயம் கழுத்தறுப்பு கற்பழிப்பு
என்னலழ லின்ன இழிவுகளால் — வெள்ளமெனக்
கண்ணீர் பெருக்கிக் கவல்வார்தம் கைநெறிக்கும்
புண்ணாற வேண்டும் புவி.

"எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை
வாழிய நிலனே" என்னும் புறநானூற்றுப்
பொன்மொழியை நினைவுறுத்திக் கொண்டு 'தலைவன்' எனும்
இந்நூலைப் பற்றிய தங்கள் மேலான மனோநிலையை அன்புடன்
அறிவிக்கக் கோரும் ——

## காப்பு

"யாம்மெய்யாய்க் கண்டவற்று ளில்லை, யெனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற' என்னும் — தூய்மையுரை
மக்கள்வாய் மல்கி மலராதேல் மல்குமலச்
சிக்கலினால் மல்கும், செயிர்!

# அறிமுகம்

உள்ளத்தால் பொய்யா தொழுகி உலகத்து
நின்றத்து எல்லா முன்னின்ற — வள்ளுவரின்
சொற்றைக் குறள்பாவை நுண்மையெனக் கொண்டொழுகப்
பெற்றதால் பெற்றதிப் பேறு.

எள்ளவிட்டுச் செல்ல இறைவன் கேட்கு பிள்ளை
தள்ளவிட்டுப் புல்லித் தருக்கன் — புள்ளைவைபட்டும்!
வாலிபன்பால் மென்மை வண்ணத்தமிழும் கண்டுண்ணும்
காலமிது வென்று கணித்து.

நாவொன்றி நின்றும் குறியொன்றி நட்டும்
செவியொன்றிச் சென்றார் விளம்ப — நாவொன்றி
மொழி விருந்தோ டென்றுஞ் சென்று நீப்
பாலிலிருந் தய்யப் பரிந்து.

நட்டார் பிரிந்து நெஞ்சுபுரம் நெண்ணிடினும்
மட்டாமோ, அன்போ, கதவிப்பவோ — கட்டார்ந்த
வெளிச்சுழ்ந் தெங்கனது வீட்டுக்குள் தோட்டத்தில்
காவிகள் நுன்று கவித்து.

உழைத்திளைத்து வாழும் உடுக்கைநட என்றித்
தழைத்திழைந்து வாழும் தமிழன் — அழைத்தாலும்
வேறு தொழில் செய்ய விரும்பா வளைவித்தது
கூறுவதுண் டோரில் பலா.

தந்தை தவம்புரியத் தாயே தவறியெனத்
திந்தை திருத்து தெப்பமுடன் — சிந்தைத்
திகழாது சென்றார் சிறையுண்ணைய் செய்தா
ரிகழாது செய்த நிறை!

உழவுத் தொழிலே உயர்வென உன்னி
உழவர்கள் நாடு முழுதுக்காய் — அழைவகைப்
பணிகளைப் பயிர்ப்பண்ணையும் பண்ணியதும் பார்த்தொரு
தென்னவரின் புதுவளைவன் தாய்!

வாழ்வாங்கு வையத்துள் வாழ்ந்தார் வரலாறு
தாழ்வாங்கு வைத்தால் தகர்த்திடுவர் — வீழ்வாங்கு
நோக்கோ நோக்காது; நினைத்தில் வேண்டிப்
பாடுவேங்கும் பாடும், படித்து.

தன்னை மறந்து தனையுயர்த்தித் தன்னாற்றால்
தானையாட் கொள்வதுதான் நம்பிக்கை; — என்னை,
புலரும் பொழுதில் புலன்களைப் பூத்த
மலரின் மணமதன் மாண்பு!

மலர்விரிந்து தூய மணம்பரவ மாறுப்
பலர்பரிந்து வாய்மை பரப்பின் — புவியில்
சூழ்ந்தவரேன் நீதித் தடைத்தோன்றி யாருநாம்
தாழ்ந்தமரேன் பேரும் தவத்து!

தொக்கி யிருக்கும் அதிர்ந்திரத் தேர்வொருளே
அக்கறையா மாய்ந்தறியோ மாயின்நாம் — எக்காலும்
துக்கம் தொடர்பாகித் தொல்லைகட் காட்படுவோம்
முக்காலும் உண்மை மொழி!

அறிவை அறியாதான் ஆண்டவனை வேண்டிப்
பெறுவதொன் றில்லை; நாம் பெற்ற — திறமை
மணிகள் மணமாய் மனத்திற்பர வித்தாற்
குணமெலாம் தானென் றுணர்!

பொய்யிற் பிறந்த புனைகதைகள் போற்றிடவே
மெய்யிற் பிறந்த தெளிவிழந்து — ஐயில்புல்
நாற்று நடுதலை நம்மனத்தில் நட்டதனை
பெற்றுவலி இன்றே நிறுத்து.

தத்துவமே தெய்வமெனத் தோற்றுவித்தால் தத்துவமா
யித்தரையும் மெல்லத் துறைவதுகாண்; — பத்தர்கள்
தெய்வ மறியாது தெய்வத்தைத் தேடித்தும்,
உய்வதறி யாத உலப்பு!

தன்னையே தான்தெய் வமாக்கத் தகவென்பர்;
தன்னையே தான்தெய்வ மாக்கானேல் — தன்னையே
தானிழந்தோ னாவான்; தலைகீழாய்த் தாழ்ந்தான்; பின்
வானிழந்தோ னாவான்!

அம்மையுடன் அப்பன் அகம்புகமுன் ஒருவனாய்த்
தம்மை மகவாய்த் தாம்பயத்தல் — இம்மை;
மறுமை: மலர்ந்து மணங்கமழ்ந்து மன்னல்;
வெறுமையிற் பாதல் விதி!

ஆட்டுநிலம் கோணா அவனியில் வாழ்பவர்
கேட்டுநிலம் காணா வியலாது; — மீட்டுநிலம்,
[illegible] மேலிருந் தொன்றி

# அறிவெண்ணவை

காலம் கழியுமேனைக் காத்துக்கொண் டுள்ளவைதாம்
ஞாலம்நீர், தீ,காற்று நான்கினொடு — நீலநிற
வானமென ஐந்தென்று, வாழ்வுக் கடிப்படையாம்;
ஞானியறி வித்தான் நோக்கு!

உடல்மண்ணீ ராகி உயிர்தீக் காற்றாய்
உடல்,வாய்,கண் மூக்குசெவி யோடும் — உடலாய்
மனம் வாக்கு காயமென மன்னுயிர் மேன்மின்
கனம் காக்கும் வாழ்வில் கலந்து.

தன்னை யறிந்தோன் தலைவனையும் தக்கோர்களும்
உன்னை யறிந்துபார் உய்வுதான் — என்னை
உடல்காத் துயிர்காத் துலங்காத் தொழுகி
இடல்காத் திசைகாத் திருந்து!

ஏற்றுமன்று வாழாமை விட்டொன்று வாழுமைதே
ஆற்றத் தகுந்த அறமென்பர்; — தூற்றின்
போற்றுமிறை தெய்வம் புனிதமனத் தூய்மைதனை
போற்றிநிற்று கொண்டொழுகும் நூல்!

வாழப் பிறந்தவன் வாழ்வை யறியாமல்
தாழும் தவறுகளைத் தான்செய்தான் — கேடும்
கொடுத்துக் கெடா புடவியுயிர் போகும்
இழுத்துவே றின்றி யிருந்து.

விதைத்ததே பிறர் விளைந்ததென் றெண்ணுர்
இரைத்துத் திரும் தீமை கொடுக்கிட — பதைத்தழுது
கண்ணீராய்ப் பெய்வார், கதறுவார் காதடைக்க —
மண்ணீரம் ஆய்வார் மறந்து.

பொன்போல் ஒளிர்கின்ற புத்திநோ டம்தனிலே
மின்போல் ஒளிர்கின்ற மெய்த்தெய்வம் — என்போன்றே
நான்வேறு தெய்வம்வே றென்றெனல் மெய்; தான்வேறு
நான்வேறென் றெய்தா நடப்பு.

மனம்வாக்கு காயமென மன்னும் மனிதன்
இனம்நோக்கு நேயமென வென்றும் — தனையேதான்
நாதாந்தம்; ஆதமதை நன்கு விளக்கிடுதல்
வேதாந்த மென்பார், விதந்து.

# உளத்தூய்மை

இதயமிழ் செல்வத்தைத் தின்றுகளித் துளங்கித்தாய்
கல்வியும் கற்றுக் கெடுத்தாரே — நல்வினைகள்
காலம் கணித்துக் கவின்கொள் போல் செய்துவக்கும்
இளைஞரே! என்பார் இவர்!

சதிராய்நின் றென்னை பிழைப்பின்றோ ஏற்பேன்;
புதிராய்நின் றென்னைப் புகழின் — கதிராய்நின்
றுள்ளத்து ஈடுசெய் துணர்த்தாமை துணைமையென
வெள்ளாது கொள்வேன் விடை!

கன்னித் தமிழ்க்கடலில் கண்டெடுத்த நல்முத்து
மின்னும் கதிரோன் ஒளிவாண்மை — நன்னெறி
விலையின்றித் தருகவென் றியின்றான் வேண்டார்
கவலையின்றி நெடுநோர், காண்!

அறிவதனிற் தூயார் அகத்தூய்மை தோயார்
உறுவதனிற் தீயோர் வெறுத்தார் — மறுவலது
வளர்ச்சியில் தோய்ந்துறும் வல்லோர்வாய்த் தூல்துறைதே
நெஞ்சினில் தோய்ந்து நிலைத்து.

இனம்பற்றிக் கொள்ளக் குறைகற்றுக் கொண்டதனால்,
மனம்பற்றி மக்கள் மகிழப் — பணம்பற்றிப்
பற்றதில் வைக்காமல் பண்புகளில் வைத்ததனை
மற்றவர்க் கீவேன், மகிழ்ந்து.

இருட்டு ஒழுக்கவினைக் கொற்றதிலே என்ன
மிரட்டும் திருட்டும் மிகுந்த — தெருட்டும்
அறிவினைப் பூண வருகுவோர்க் கொற்றாய்
குறைவினைப் பேண அமைப்பு.

காதலின் செய்தாம் காலமின் செய்தாம்
கோதுமை யென்றோர் மொழிந்ததை — மாசுமாய்
நெஞ்சில் பதித்து நிலைத்தேன் இனியவர்க்கும்
தஞ்சமெனத் தாழ்த்தேன் தலை!

உளத்தூய்மை யில்லாதார் ஞானபட்டம் பாலதன்
வளத்தினை வளர்த்திடும் வாய்ப்பாகும்; — குளத்தில்
குளிக்கப் போய்ச் சேறப்பிக் கொண்டோர் வானத்
துளிக்குக் காத் தான்போல் துயர்!

இத்தனையும் பார்த்து நான் நினைக்கக் கொடுத்தது:
பத்திரம், பொன் பார்வையிலே தோற்றம் — சித்திரமாய்ப்
பக்கப் படுத்தது; பாடலாய்ப் போய் காதிலது;
இக்கதையை எழுதினேன் நான்!

ஒற்றை ஒருநாள் உதிர்ந்த துளைகொண்டும்
தீர்த்தம் விளங்காமல் நிறுத்தப்பெண்! — மற்றதைச்
உற்றதனை யோசி வரையறுத்தே சொல்லும்
பற்றியதை யாப்பு படுத்து.

முத்துதிர்க்கும் ஒய்ய மொழியாது முன்னர்
சித்தத்தில் மொழிந்தாங்கு செதுக்க — தத்துவத்
தூய நினைவுகள் தோன்றத் துணிந்து நான்
ஆய முனைவு மகிழ்."

பணம் சேர்த்துக் கொன்று படைத்திடும் பாவி பாவாய்ச்
குணம் சேர்த்துக் கொன்று குறைந்து மனம் சேர்த்த
ஏமாளி யென்றுவக் கேலி மிகுந்துண்டாகுந் தொழிலினை
கோமாளி யென்று சிரித்து.

முன்மாதிரித் தேடுமன முல்லைமலர்த் துள்ள மெல்ல
கொண்மையின் கொய்து கொள்வான்கொல் — உண்மையின்
நல்லதையே நாட நயந்துகொடு தாழ்மையுடன்
புல்லனைக் கொள்ளான் புரிந்து!

காலத்தை வீணாய்க் கழிப்போர் கடையரென
ஞாலத்தில் நல்லோர் நவில்வதால் — காலத்தைக்
கண்ணாகக் காத்துக் கடைத்தேற வேண்டுமென
எண்ணமென எழுந்த நினைத்து.

தனிமைக்கிடம் தேர்ந்து தகவமைத்துக் கொண்டே
இனிமையாய் ஏதோ செய்ய — நினைவும் நான்
புனைந்தால் கற்பப் பொருந்து கழித்திடுவேன்
மனத்தினை வேண்டி மகிழ்ந்து."

.ளமேடு

17.03.90

பேரன்புடையீர்

தங்கள் மேலான புலமைக்கும், அருள் சார்ந்த தகுதிக்கும் என் பணிவன்புடைய வணக்கமும் வாழ்த்தும்.

தலைவனைப் பற்றிய தங்கள் கருத்துரை கிடைக்கப்பெற்றேன். மூன்று அக்னிகள் என்பது மட்டும் நீங்க, மற்ற அனைத்துக் கருத்துக்களும் சரிவர ஆய்ந்து புலப்படத்தியுள்ளீர்கள். தங்களுடைய பல்வேறு அலுவல்களுக்கிடையே தலைவனை ஒரு பொருட்டாக மதித்து படித்துப்பார்த்து என் வேண்டுதலை நிறைவு- செய்தமைக்கு நான் பெரிதும் நன்றிக்கடப்பாடுடையவனாகிறேன் . நிற்க

இனி என்னை நானே அறிமுகப்படுத்திக் கொள்ள அனுமதிப்பீர் என எண்ணுகிறேன் புலிப்பாற்பட்ட ஆமாக் குழவிக்குச் சினங்கழி மூதாக் கன்றுமடுத்தூட்டும் கானத்ததுவே பான பரிசிலர்க்குள்ளியது சுரக்கும் ஒம்பா வீகை வெள்வேல் ஆவ மாயின் ஒள்வாள் கறையடி யானைக் கல்லது – உறைகழிப்பறியா வேலோ னூரே.

இந்த ஊரின் பெயர் வெளியம். ஊர் காடு சூழந்திருந்தது . இந்த ஊரை உறைவிடமாகக் கொண்ட குறுநில மன்னன் பெயர் ஆய் எழினி. களங்காய்க் கன்னி நார் முடிச் சோவின் படைத்தளபதியாக இருந்தவன். இந்த வெளியங்காடு எனும் ஊர் தான் என் சொந்த ஊர் .

களிறு பொரக்கலங்கும் கழல்- முள் வேலி அரிதுன் கூவல் அங்குடிச்சீறூர் ஒலிமென் கூந்தல் ஒன்னுதல் அரிவை – நடுகல் கைதொழுது பரவு மொடியாது

விருந்தெதிர் பெறுகதில் யானே எவ்வையும் ஒருவாப் பொருள் நசை வேந்தனோடு நாடுதரு விழுப்பகை யெய்துக வெனவே.

இது தான் நான் கற்ற அறநெறி இலக்கியம்

அடலருந்துப்பின் கெடலரும் படப்பை – கோங்கு வேங்கை குருந்தே முல்லையென் றின்நான் கல்லது பூவுமில்லை- கருங்கால்வரகே யிருங்கதிர் தினையே சிறுகொடிக் கொள்ளே- பொறிகிவ ரவரையோ- டின்னான் கல்லது உணவுமில்லை ஒன்னாத் தெவ்வா் முன்னின்று விலங்கி ஒளிறேந்து மருப்பின் களிறெறிந்து விழ்ந்தெனக் கல்லே பரவி னல்லது நெல்லுகுத்துப்பரவும் கடவுளருமிலரே.

இதுதான் நான் கற்றறிந்த தமிழக வரலாறு.

ஈன்று புறந் தருத வென்றலைக் கடனே எனும் முறையில் தலைவனை நான் பெற்றுத் தந்துவிட்டேன். மேலும் சான்றோனுக்குத் தந்தையும், வேல்வடித்துக்கொடுக்கும் கொல்லனும் நன்னடை நல்கும் வேந்தனும் என் தலைவனுக்கு வாய்த்தால் அவன் நிச்சயம் களிறெறிந்து பெயா்வான் என்ற நம்பிக்கை தங்களது அறிவு சால் கருத்துப் பேருரையால் நிறைவுறும். நாடும் நலம் பெறும் என்று தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்

தங்கள் நன்றிமறவாத

வெள்ளியங்காட்டான்

பேராசிரியர் மா. இராமலிங்கம்
("எழில்முதல்வன்")
தலைவர், தமிழியல்துறை.

பாரதிதாசன் பல்கலைக்கழ[கம்]
பல்கலைப்பேரூர்
திருச்சிராப்பள்ளி - 620 024
தமிழ்நாடு
தொலைபேசி : 29031

நாள் : 13.3.90.

கவிஞர் வெள்ளியங்காட்டான் அவர்கட்கு,

வணக்கம்.

தாங்கள் இரு மாதங்களுக்கு முன் பதிவஞ்சலில் அனுப்பி வைத்த "தலைவன்" என்னும் காவியத்தின் படி கிடைத்தது.

மிக்க மகிழ்ச்சி.

என் கருத்தினை இத்துடன் இணைத்துள்ளேன்.
பெற்றுக்கொண்டமைக்கு ஒரு வரி எழுதுக.

அன்புடன்,

13/3

(மா. இராமலிங்கம்)

பெறுநர்

கவிஞர் வெள்ளியங்காட்டான்,
98, துரைசாமி நாயுடு லே அவுட்,
ஆவாரம்பாளையம் சாலை,
பிளைமேடு,
கோயம்புத்தூர் – 641 004.

# தலைவன் – ஒரு மதிப்பீடு

டாக்டர் மா. இராமலிங்கம்,
பேரா. & தலைவர்,
தமிழியல்துறை,
பாரதிதாசன் பல்கலைக்கழகம்
திருச்சிராப்பள்ளி – 620 02

கவிஞர் வெள்ளியங்காட்டானின் தலைவன் என்னும் பாவியம் இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் எழுதப்பெற்றுள்ள வெண்பா யாப்பிலான இனியநூல். மிகச் சிறந்த மரபுக்கவிஞரான வெள்ளியங்காட்டான் தன் வாழ்வின் பட்டறிவினையும் கல்வியறிவினையும் இணைத்து இந்நூலை யாத்துள்ளார். நாட்டை நன்னெறிக்குய்விக்கும் நூல்கள் அண்மைக்காலத்தே தோன்றாத குறையினைப் போக்கி நிறைவு செய்ய வல்லது, தலைவன் என்னும் இந்நூல். அறநெறிச் சிந்தனைகளையும் ஆன்மீகச் செய்திகளையும் ஆய்ந்து தெளிந்து எளிய வெண்பாவின் வாயிலாக வெளியிட்டுள்ள கவிஞரின் சமுதாயப் பணி போற்றுதற்குரியது.

அரசியல், பொருளியல் நோக்கில் தடம்புரண்டுவிட்ட இன்றைய உலகை நெறிப்படுத்த வேண்டும் என்ற கவிஞரின் உள்ள வேட்கையை இந்நூல் தெள்ளத் தெளிவாகப் படம் பிடித்துக் காட்டுகிறது.

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே"

என்னும் புறநானூற்றுப் பொன்மொழியை நெஞ்சில் கொண்டு நோக்கின் தலைவனின் சிறப்பும் பண்பும் தெற்றெனப் புலப்படும். இந்நூல் சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் என்னும் மூன்று பெரும் பிரிவுகளைக் கொண்டிலங்குகிறது. ஒவ்வொரு பிரிவும் இருபது உட்தலைப்புக்களையும் ஒவ்வொரு தலைப்பும் பன்னிரண்டு வெண்பாக்களைக் கொண்டும் நூல் சிறப்புற்றுள்ளது. நூல் முழுமையும் பல்வேறு வகையான சுவைகளைக் கொண்ட வெண்பாக்களைக் கொண்டிருந்தாலும் அவற்றிலெல்லாம் சமுதாயத்திற்குத் தேவையான நல்வழிச் சிந்தனை உயிரோட்டமாகத் திகழக் காணலாம். கொள்ளுவார் கொள்ளும் வண்ணம் நல்ல நடைநலம் சிறக்க இந்நூலைக் கவிஞர் யாத்துள்ளார். உபநிடக் கருத்துக்களும் ஆன்மீகக் கருத்துக்களும் திருக்குறட் சிந்தனைகளும் இடையிடையே இந்நூலில் பயின்று வரக் காணலாம். இதற்கு இன்றைய ஆரவாரமிக்க உலகு அமைதியை இழந்துவிடக் கூடாது என்ற கவிஞரின் ஆர்வப்போக்கே காரணமாகும்.

உபநிடதக் கருத்துக்களை எளிமையாக்கி ஆசிரியர் எடுத்தாண்டுள்ளமைக்கு

வேதத்தைக் கற்று விரித்து விளக்கிடினும்
பூதத்தைப் பற்றிப் புகல்வது; - சாரத்துக்
காணதொரு தந்திரமே; ஆத்மிகமன் றெங்கிறது
கே[redacted]னோ வுபநிசத் து

இந்தஎன் ஆத்மாவே ஈசனெனும் வேதாந்த
விந்தைக் கருத்து விளக்கமுற - வந்துமற்
றோமெனும் ஒற்றை ஒருசொல்; உணர்வேநா
[redacted]மெனும் பற்றை யறிந்து 28: 6

ஆற்றற் கரியவொரு ஆம்மீக வாழ்வில்நாம்
போற்றக் கருதல் புகழொன்றே - சாற்றின்
அதுவே அமிழ்தம்; அறிவின்மை; ஆயின்
அதுவேநா மாவ தறிந்து.

ஆகிய வெண்பாக்கள் காட்டுக்களாகின்றன. இறைவனைப் பற்றியும் உயிர்களைப் பற்றியும் உபநிடதங்கள் சாத்திரங்கள் கூறும் கருத்துக்களைத் தெளிந்து கவிஞர் விளக்கியுள்ள திறம் சிந்தித்தற்குரியது. தத்துவச் சாரச் செய்திகளைத் தொகுத்து விளக்கியுள்ளார். நான் என்னும் தன்முனைப்[redacted]யடக்கி நலம்பெற வேண்டும் எனவும் அறிவுமுடலைக் கொண்டு அறிவற்ற புகழைத் தேடவேண்டும் எனவும் உயிர் ஊக்கச் செயல்களைக் கவிஞர் உலகுக்களித்துள்ளார். வாழ்வுக்குறுதி பயக்கும் நல்லொழுக்கமும் நற்செயல்களும் நல்சிந்தனைகளும் மனிதகுலம் முழுமையும் ஏற்றுப் போற்றிக் கடைபிடிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் பாங்கில் இந்நூல் அமையக் காணலாம்.

இவரது பாடல்களில் சித்தர்களின் சிந்தனைகளும் இடையிடையே விரவிக் காணப்படுகின்றன.

அன்றே அறிஞர் அறிவித்தார்; அக்னிகள்
ஒன்றா யுடலின்மூன் றுண்டெனவே - ஒன்றால்
உணவு செரித்தல்; உயிர்காத்த லொன்றால்
குணம் கூட்டவொன்றால் குறித்து (29:2)

இப்பாடலில் சித்தர்களின் கருத்து உட்புதைந்துள்ளமையை உணரலாம். ான்றோர் தங்களது வாழ்வில் கண்டு தெளிந்ததை இலக்கியமாகவும், வாழ்விக் - கணமாகவும் வகுத்தும் தொகுத்தும் பல்வேறு வடிவங்களில் விட்டுச் சென்றுள்ளனர்.

அவற்றைக் கற்றோர் கற்றுணர்ந்தோர் கலைத்திறற்கேற்ப மீண்டும் வழங்க வேண்டுதல் சமுதாயக் கடப்பாடாகக் கொள்ளலாம். அவ்வகையில் கவிஞர் வெள்ளியங்காட்டான் திருக்குறட் கருத்துக்களையும் உரிய இடங்களில் இணைத்துள்ளார்.

ஊமனும் கூட உளமுவந்து கொண்டொழுக
ஓமெனும் சொல்லுக் கொருகுறள்பா — வாமெனவே
வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு (29:6)

மேற்கண்ட வெண்பா திருக்குறளை நூலாசிரியர் எடுத்தாண்டுள்ள திறத்தினை விளக்கும் சான்றாகிறது. குறளையோ, தொடரையோ, கருத்துக்களையோ அப்படியே எடுத்தாண்டுள்ளார்.

திருக்குறள் கற்றுத் தெளியாதான் சிந்தை
செருக்கிருள் பற்றிச் செறிந்து — கருக்கிருளாய்
வீடெங்கும் வெட்கம் விளைவித்து விட்டுளதால்
நாடெங்கும் நட்பு நசித்து (47:2)

இவ்வெண்பா கவிஞர் திருக்குறள் மீது கொண்டிருந்த பற்றினை விளக்கும் சான்றாகிறது. இவரது நோக்கம் குறட்கருத்துக்களை மக்கள் அறிந்து தெளிய வேண்டும் என்பதே-யாகும். தலைவன் எனும் இப்பாவியத்தில் இழையோடிச் செல்லும் இப்பண்பு விளைவிக்கும் பயன் சமுதாயத்தின் கடைத்தேற்றம் என்ற ஒன்றேயாகுமெனில் மிகையில்லை. இவற்றோடன்றி இந்நூலில் அணியிலக்கணம் கூறும் உவமை, உருவகம் முதலான அணிகளும் பயின்று சிறந்துள்ளன. இலக்கிய இன்பம் காணவிழைவோர்க்கும் இன்பப்புதையலாகுந் தன்மைக்குச் சில காட்டுக்களைக் காணலாம்.

காலைக் கமலம் கதிரோன் வரவேற்கச்
சோலைக் குயில்வாழ்த்தச் சூக்குமமாய் மாலைக்
கலையைத்தன் காதலிக்குக் கற்பித்தான் கண்கள்
தொலையாய்த் தொலைக்கும் துயில்.

இவ்வெண்பா உருவக அணி பொதிந்து சிறந்துள்ளது.

மாதர்கண் மாந்தி மகிழுமெழில் மார்புக்குள்,
தீதரும் பாத திருக்கமலப் — போதரும்பிப்
பூத்துப் பொலிதலைப் பொன்னிதயம் பூத்தபுகழ்
மூத்துப் பொலியும் முகம் (22:3)

இவ்வெண்பா உவமையணிக்குக் காட்டாகின்றது. இதைப் போன்று பல்வேறு அணிகளும் பாங்கீட்டன் பொதிந்து பொலிவு பெற்றுவிளங்குகின்றன.

நூலாசிரியர் உலகியல் தன்மைகளை மிகவும் நுணுக்கமாக நோக்கி விளக்கியுள்ள திறமும் போற்றத்தக்கதாகவுள்ளது.

சோறுகா ணாதான் சுதந்திரமும் சோறிருந்தும்
பேறுகா ணாதான் பெருமிதமும் – பேறிருந்தும்
வீறுகா ணாதான் விகசிதமும் வீறிருந்தும்
ஆறுகா ணாதான் அவம் (12:3)

குடல்பசியை யாற்றிக் கொள்ளக்கூடும்; கூடின்
உடல்பசியை யாற்றிக் கொள்ளக்கூடும் – கடல்பசிபோல்
போதுமெனக் கூறாப் பொருள்பசியை யாற்றுவது
நீதமெனக் கூறும் நிலை (12:9)

மேற்கண்ட வெண்பாக்கள் உலகியல் சிந்தனை வயப்பட்ட செய்திகளை விளக்கும் தன்மையுடைய இவரது பாக்களுக்கோர் காட்டுக்களாம்.

கவிஞரின் தமிழ்ப் பற்றினை இந்நூலில் காணலாகும் பல பாடல்கள் பறைசாற்றுகின்றன.

"அமிழ்ததனை யாராதா ரென்ன, அருமைத்
தமிழ்திறனை யோராது தாழ்ந்தார்" (43:1)

என்ற அடிகள் அவர் தமிழின்பால் கொண்டுள்ள காதலைப் புலப்படுத்த வல்லன. உரிய இடங்களில் பழமொழிகளையும் கதைக் குறிப்புக்களையும் பயன்படுத்தி வெண்பாக்களை யாத்துள்ளார். தான் எடுத்துக்கொண்ட கதைக்கேற்ற வகையில் நிகழ்ச்சிகளை அமைத்து எளிமையான தெளிந்த நீரோட்டமாகத் தலைவன் எனும் இப்பாவியத்தை நடத்திச் செல்கிறார்.

முடிவாகக் கூறுவமாயின் தலைவன் எனும் இந்நூல்வழி இன்றைய உலகுக்குத் தேவையான கருத்துக்களான சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் எனும் மூன்று நிலைகளை மக்கள் உள்ளபடியே துய்த்திட வேண்டுமாயின் சமுதாயத்தில் அமைதி நிலவ வேண்டும். அந்த ~~அந்த~~ அமைதி நிலவிட ஊறுவிளைவிக்கும் சக்திகளைக் களைந்து மக்கள் நன்னெறி நிற்க வேண்டும். அந்த நெறியைப் பற்றிட அவர்களுக்குத் தேவை ஆன்றோர்கள் விட்டுச் சென்ற அரும்பெரும் கருத்துக்கள். அக்கருத்துக்களைத் தொகுத்து கதையோட்டத்துடன் ஆசிரியர் பாவியமாக்கியுள்ளார். இந்நூல் இருபதாம் நூற்றாண்டில் தோன்றியுள்ள வெண்பா இலக்கியங்களில் குறிக்கத்தக்கனவாகத் திகழ்கிறது.

மக்கள் முன்னேற்றத்தினையும் வாழ்க்கைச் சிக்கலையும் சிக்கலுக்கான காரணங்களைப் பற்றியும் கவலைப்படாத இலக்கிய படைப்பாளர்களிடையே கவிஞர் வெள்ளியங்-காட்டானின் தலைவன் உண்மையிலேயே அனைவருக்கும் தலைவனாகும் தகுதியைப் பெறுவான். உண்மையான உழைப்பு நற்சிந்தனை, நல்லொழுக்கம், நற்பண்பு ஆகியவற்றை வலியுறுத்தும் இந்நூலின் ஆசிரியரின் நோக்கமும் முயற்சியும் தமிழ் கூறு நல்லுலகம் போற்றிப் பயன் கொள்ள வேண்டும். பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்ற பொய்யா மொழிக்கேற்ப இந்நூலாசிரியரின் சீரிய நேரிய குறிக்கோளிற்கேற்ப இந்நூல் நின்று நலம் பல நல்கவல்லது.

# 1. சமத்துவம்

## 1. தலைவன்

வானமே! நல்ல வளப்பான வையகமே!
ஈனமே இல்லா இளஞ்சுடரே! — நாளும்
தமிழ்தென்றல் காற்றே! கலைகடலே! கல்வித்
தமிழ்மன்றில் சாற்றத் தகும்!

கொல்லைப் புறத்தில் குழந்தைகூர்ம் பல்லன்ன
முல்லை யரும்பி முகையாகிப் — புல்லவரும்
மாலை 'நுகர்க மணமெ'னுமா றாய்மலரும்
மாலை நுகர்க், துவித்து!

சுவதனை யன்றி யிரப்பதறி யாஇனிய
மாவும், கதலி, பலா, மாதுளையும் — காவின்கண்
குந்தி யருந்தக் கொடுப்பதென வேகொடுக்கும்
சிந்தை யருந்தச் சிறந்து!

காவில் பயிலும் களிவண்டே! காமுறுசீர்ப்
பாவில் பயிலும் பரிபாலன் — நாவில்பே
ரன்பு பயிலும்; அறம்பயிலும்; ஆரமிழ்தா
யின்பம் பயிலும், இணைந்து!

பங்குனியில் தங்கும் பசும்பொழிலாய்ப் பாங்குபடாக்
கங்குலிலே மங்காக் கவின்விளக்காய் — எங்கும்
கவிந்த பனிநாள் கனலாய்க்கார் நாவில்
நிவந்தகுடை யாவான், நிலைத்து.

நீரிருந்தா லன்றி — நிலமிருந்தும் நேர்ந்தமுநல்
லோரிருந்தும் எய்தொன் றியற்றாராய் — ஊரிருந்தோர்
காய்தலைக் காணின், கருணைகூர் கார்முகிலாய்த்
தேய்தலைத் தீர்ப்பான், தெளிந்து.

எச்சிலுக் கேங்கி யெதிர்பார்த்தாங் கீனஞ
குச்சியில் லோங்குநாய்க் கோலத்தோ — டச்சோ!
வறுமைநோ யெய்தி வருவோர்தம் வாழ்வுச்
சிறுமையறச் செய்வதன் சீர்!

காதில் விழுந்தசொல் காதுக் கருத்தாய்ந்து
தீதுநன் றோர்ந்து திருத்தமுறப் — போதில்
நறும்தன்தே வென்ன நவில்வான்காண், பொய்ம்மை
யறிந்துண்மை யாவ தறிந்து!

உண்மை யுளதாயி னுள்ளத்தில் ஒப்பற்ற
திண்மை யுளதாகும் தேகத்தில், — ஒண்மை
உளதாகும் வாக்கில்; ஒழுக லுளதாயின்
உளதாகும், நோக்கி லுயர்வு!

பருதி குடிகொண்ட பார்வை; பண் பட்ட
கருதி குடிகொண்ட சொற்கள்; — கருதின்
புவியாள்வோர் பூணாப் புகழ்பூண்டான்; பூண்டான்,
கவியாள்வோர் காணாக் கவின்!

ஊருயர, உற்றா ருறவுயர, உற்றவொரு
பேருயரப் பெற்றோர்தம் பெட்புயரச் — சீருயர்க்கும்
நாவல்லோன்; ஞானி, நகைமுகத்த னானஅவன்
சாவில்லோ னானான், சகத்து!

சிந்தை தமிழால் தெளிந்து செயலாக்கக்
கந்தம் கமழும் கவியமிழ்தை — வந்தவர்கள்
குந்தி யிருக்கக் குணமுறவென் பாக்கலத்தில்
தந்தருந்த வைக்கும் தகை!

## 2. விடியல்

பூக்கள் மலர்ந்து புலன்கவரும்; பூக்களிலே
ஈக்கள் புகுந்தாங் கிசைபயிலும்; —நோக்கத்
துயிலெழக் கூவும் துணைவனைக் கோழி
அயிலெழக் கூவும் அகம்!

'நீக்கமறப் பூக்கு நிலவுமிருள் நீங்கிடவே
மாக்களொடு மக்கள் மனம்மகிழக் —காக்கைமனப்
போக்கைப் புடைப்பீர் புலவர்கா ளெ'ன் றுகுயில்
பாக்கள் படைக்கும், பரிந்து!

'காசினியிடில் துஞ்சாக் கடுங்குளிரால் கால்கடுக்க
நீசனென அஞ்சி நிலைகுலைந்தேன், —நேசக்
கரம்காட்டி வாராய் கதிரவனே!' என்று
கரம்கூட்டிக் கோரும், அகம்!

'செக்கச் சிவந்ததுவான்; செஞ்சுடரும் சேரஎழுந்
தொக்கப் பரப்பும் ஒளிக்கதிரை; —துக்கஇருள்
ஓடுங்கா ணன்னி யுறுமீனை யும்பிடிக்கக்
கூடுங்கா ணென்னும், குருகு!

மாலைக்குள் வந்து மரங்களில் தங்கியெழில்
காலைக்குக் காத்திருந்த காகங்கள், —சோலைக்குள்
'கா கா கா' வென்று கரையுமொலி காதுகளை
நோகாமல் செய்திடும், நோய்!

'தண்டா மலரயின் தவத்தின் பயனாம்நான்
வண்டாய்ப் பிறந்து வசிக்கின்றேன், —பெண்டீர்காள்!
தேனுண்டு வாழ்வேன், திகழுமென் சங்கீதம்
வாழுண்ட கா'மெனும் வண்டு!

கறவைதன் பேரன்புக் கன்றினைக் காணக்
குறவுணர்ந்து கத்ற வொலியும், —'பொழுதீ'யென
ஆயன் அதட்டொலியும், ஆய்ச்சியர் மத்தொலியில்
தேயத் திகழும், தெரு!

வீடும் வெளியும் விளக்கவரும் வெய்யோனை
மூடிக் குளிர்ந்த முகிலனைத்தும் —கூடி
வருந்தும் பயிர்கட்கு வானமிழ்தாய் மாறிப்
பொருந்தக் குளிரும் புவி!

'வானம் துறந்து வளங்குன்றி னும்வையம்
கானம் துறவாக் கவின்கனைநீர் —நாளும்
கமழவரும் தொய்ய'லெனும் கன்னியர்சொல், காதில்
அமிழவரும் துய்ய அமிழ்து.

பாருழைக்கும், ஓர்மைப் பதமொன்றிப் பார்க்குயிராம்
நீருழைக்கும் நேர்மை நெறிநின்று, —வேரிழைத்துப்
புத்பு டுழைக்கும், பொலியப் பொழிலுழைக்கும்
பொற்பொடுநாம் போற்றப் பொலிந்து!

நெல்லை, பனையின்றித் தீங்கரும்பு, தேன்கதலி
பல்லும் அரிசி, பருப்பின்றி —மல்லிவளர்
உழவா லன்றி அவனிமிசை வாழ்வுண்டோ?
நாவூட்டும் நாளும், நமக்கு!

நல்ல பழுத்த நகைவல் நவப்பன்னைச்
செக்கல் [illegible] சேமிக்கும் —கன்னலிரும்
[illegible]க்குக் காக்கும், அரும்புலகை யாழ்வல்ல
[illegible]க்குக் காக்கும், மருந்து!

# 3. கோமதி

காலையைக் கண்டாள்; கழனியைக் காணப்போய்
மாலையைக் கண்டாள்; மனமொன்றி-வேலையைக்
கண்ணும் கருத்துமாய்க் கண்டாள்கால், ஊர்காவ
எண்ணமே எதிர் நிசைந்து.

'சொல்குறைத்துத் தொல்லைபெலச் சோறா துழைப்பார்க்கு
நெல்குறைத்த தில்லை நிலமென்பாள்,-அல்குறைத்துக்
கொண்டகருங் கூந்தலெழில் கோமதியி லில்புகுந்தாள்
உள்முறங்கித் தீர உவந்து.

அப்பா அகத்தை யணுகுங்கால், அன்புமகள்
துப்பாய் முகத்தைத் துலக்கிக்கொண்-டப்போது
தப்பாது நின்று தலைவாசல் காத்திருந்தாள்,
ஒப்பேது மின்றி யுணர்ந்து!

வண்ணத் திருவடிவு வாணி கடைக்குட்டி
நண்ணிச் சிரிக்க நயந்தணைந்தென்-கண்ணேயென்
'நிச்'சென்று முத்த மிடும்போதே 'எங்கண்ணம்
எச்சி'லெனக் கத்திற் றிரைந்து!

பசியகல வுண்டும் பரிவகலாப் பண்டைக்
குசியகலக் கொண்ட குயிலை-நிசியகலக்
கூடிக் களித்தநாள் கூடாது, கூடிற்றின்
றா டிக் களித்தவொரு நாள்!

ஆவலொடு மன்னும் அரிப்பினா லானவரும்
சேவலொடு முன்னிச் சிரிப்பின்றிக்-காவிருடன்
போவதனை நோக்கிப் புகமோன்பின் போனாள், பொய்
நோவதனை நீக்க, நுவன்று.

மூச்சாட லன்றி முறுவல் முகம்மூசப்
பேச்சாட லொன்றாப் பெருந்தகையை-ஏச்சாட
எண்ணிலா னன்றா விதயத்திற் கேற்கும்சொல்
கண்ணிலா னொன்றிக் களித்து!

'தேகத்துக் கேற்றதை'த் தேர்ந்த நடைப்புரவி,
வேகத்துக் கேற்றதெனும் வில்வண்டி,-ஏகத்தான்
நீண்ட நிழல்சாலை நேர்ந்தும், நடந்துசெலல்
வேண்டி விழையுமிக் கால்!

காலம் கருதிக் கழனியுழு திட்டபயிர்க்
கோலங் கருதிக் குறையகற்றிச்-சீலங்கொண்
டோயா துழைத்தோ ருளங்குளிர வுள்ளதனைக்
காயா தளித்திடும், கை!

காற்றோ மழையோ கடும்வெயிலோ கங்குலிலே
ஆற்றா திழையும் அரும்பனியோ-கூற்றாகித்
தாக்கிலும் தாங்கும் தளராத் திறவன்மை
யூக்கிரம் தேங்கும் உடல்!

குயிலாகிப் பாடிடும் கூர்வேல்கண் கூர்ந்து
மயிலாகி யாடிடும் மாதர்-அயலாயின்
ஏறெடுத்துப் பாரா மலெங்கும் திசைபார்க்கும்
வீறெடுத்துத் தீரும் விழி!

போதவே ஓர்ந்த புலவர்வாய்ச் சொல்லாக,
ஓதவே ஓரார் உரையாகச்-சாதுவாய்த்
தப்பாது வேட்கும் தலைவனைத் தானறிந்து
செப்பாது கேட்கும் செவி!

## 4. உபதேசம்

சிந்தனை செய்து செயலாற்றும் செல்விவாய்
வந்தனை செய்து வழங்கியசொல் —நிந்தனையை
ஊற்றும் அருமருந்தா யன்பை யகத்தூறுத்தி
மாற்றத் திருந்தும், மனம்.

உள்ளார்ந்த வுண்மை யுபசரிப் புள்ளத்தைக்
கள்ளார்ந்த வண்டாய்க் களிப்பிக்கப் —புள்ளோர்ந்து
சோலையுற வெய்திவெயில் சோகம் தணிந்ததென
மாலையுறச் செய்தான் மதிந்து!

"காதலன் கண்மலர்ச்சி காண்பதே கற்புடைய
மாதர் மனமகிழ்ச்சி மன்னவனே! —வேதனையா
யுள்ள முறுத்திக்கொள் முள்ள குறைதவிர்த்துக்
கொள்ளல்நன்" றென்றாள், கொடி!

'உறப்பொத் துயர்த்தி யுரிமையுறத் தொட்டுச்
சிறப்பித்த தற்கிச் சிறப்பென் —றறம்பித்தன்
கட்டி யணைத்துக் 'கனிவாய்க் கொருமுத்தம்
மட்டு'மென் றிட்டான், மகிழ்ந்து!

"வாடும் பயிருக்கு வானம் வழங்கல்போல்
வாடும் மயிலுக் குதவுகிறேன்: —வீடுறவே
உன்னை யுலகத் தொளிர்விக்கும், உள்ளத்தில்
மின்னா யிலங்கிடின், மெய்!..."

"அஞ்சா தலரும் அறிவாற்ற லன்பனைத்தும்
எஞ்சா திலங்கும் இதயமிவி—மஞ்சாகி
மூடி மழையாய் மொழியாய்கொல்", என்றான்மற்
றாடி மொழியா ளுவந்து.

"போதுமடீ! போதும்; புலரும் பொழுதுவரை
ஏதுமிடை யிட்டொன் றியம்பாதே—மேதையெனத்
தீநான் றோர்ந்து தெளிந்து திகழ்ந்திடநாம்
சாயுவாயித் தீர்ந்தால் சரி!

முல்லை மணங்கமழும் முன்றிலென என்றுமனம்
நல்ல, குணங்கமழ நட்புறவுக் —கொல்லவே
இல்லை'யெனச் சொல்லா திரியவே செய்வததன்
எல்லையெனக் கொள்வ திவிது!

உள்ளுவது முண்மை யுரைப்பதுவு முண்மையெனின்
விள்ளுவதற் கொண்மையிவி வேறில்லை —பள்ளியிலே
செந்தா மரைமலரில் செவ்விழகர் வண்டெனவுன்
சிந்தைநலன் துய்ப்பேன், சிரித்து!

வானம் விரிந்துளது; வையம் பரந்துளதால்,
ஊனமொன் றில்லா துதித்துள்ளோம்; —மானிலனாய்
அச்சமற் றொன்றி யமைதியாய் வாழ்ந்தால்நாம்
உச்சமற் றொன்று முயர்வு!

மையொன்றும் கூந்தல் மனைவிமனம் மான்பொன்றிக்
கையொன்றி யட்டுக் கமழ்ந்திடவே — 'நெய்யொன்றப்
பெய்'யென்று கேட்டுப் பிரியமா யுண்டுவக்கச்
'செய்'யென்று செப்புமாம், செய்!

நாள்கண்டும், நாளும் நலந்திகழ நம்வாழ்வில்
கேள்கண்டும், கேளும் கிளையுமென—ஆள்கண்டும்,
ஆளும் அறிவ தறிந்தமைந் தாட்பட்டால்
நீளும்நம் இன்பம், நிலைத்து!

## 5. இரக்கம்

"'இரவுவரி வஞ்சும் இளமகவை யேற்பான்;
பிரிவுவரி வஞ்சிப் பிதற்றும்—பெரியவரை
மன்னித்துக் கொள்ளான் மறவ' னெனும்சொல்லை
முன்னொத்துக் கொள்ளல் முறை!

ஆள்வேண்டு மென்றின் றவதியுறு மாறன்று
கேள்வேண்டு மென்று கிளப்பியதேன்?—தாள்வேண்டி
ஒன்றியுடல் நின்றவுயிர்க் கொப்பான தம்பியைநீர்"
என்றவள், மற் றொன்றி யிருந்து.

"இருள்சூழ்ந்த வீட்டுக் கெழில்விளக்கா யென்றும்
அருள்சூழ்ந்த ஆட்டங்க ளாட்டி—மருள்சூழ்ந்த
மக்கள் மனத்தில் மகிழ்ச்சி மலர்த்துகிற
சொக்கப்பொன் ஒக்கும் சுதன்!

வீடு விளங்க விருப்ப மறிந்துதவக்
கூடப் பிறந்த குணக்குன்று—வாடிடவே
சீர்கெட்ட சிந்தைச் செருக்கனது சேவைக்கு
நேர்கெட்டு நீக்கினீர், நீர்!

அறிவுறுத்திக் கூறும் அருகதைமற் றற்றும்
உறவுறுத்திக் கூறுமென் னுள்ளம்—செறிவுறுத்தி
வீடுவிட்டு வாழ விரும்பாத தம்பியைநீர்
வாடவிட்டு வாழ்தல் வசை!

தூய்ய மலரையுளம் தூயோர் தொடல்போல்நா
மூய்ய மலர்ந்த வொருமகனை—மெய்யுறுத்தித்
தம்பி தழுவித் தழுதழுத்து நின்றநிலை
நம்பவிய லாநல் வினை!

கண்ணையும் காதையும் கல்விக் களித்தவனைப்
பண்ணையைப் பார்க்கப் பயிற்றியொரு—பெண்ணையும்
தேடி வியக்கத் திருமணம் செய்திருந்தால்
நாடு வியக்கும், நயந்து!

கூடப் பிறந்த குலக்கொழுந்தின் கோலமுகம்
வாடத் துறந்து வலுவிழந்தோம்—காடுகரை
பாடற்ற தாகிப் பயனற்ற" தென்றாள், மற்
றீடற்ற கோதை யிளைந்து!

"கங்கையெனக் கண்ணீர் கவிழ்க்குமென் கண்ணன்ன
தங்கைமனப் புண்ணைத் தவிர்த்திட நான்—அங்கவனைச்
சென்றிருந்து வாவென்று செப்பினேன்; சேர்ந்திருந்து,
'நன்றெ'ன் றாய் நீயும், நயந்து!

'போனதைப் பற்றிப் புலம்பவேண் டாமெ'ன்று
நானிதைப் பற்றி நவின்றிருந்தும்,—ஏனதைநீ
யெண்ணாது தம்பி யிசைக்குவகை யேற்றுகிறாய்
கண்ணேயின் றெ"ன்றான், கரைந்து!

'சிற்பக் கலைஞன் செயல்திறனைச் சீர்சாலா
அற்ப ரறிதல் அரிதெ'ன்பர்;—பொற்புடையாய்!
கற்பதனைக் கற்றுக் கலையுணர்க்கும் காணார்சொல்
பிற்பயக்கும் தொற்றாப் பிணி!

'உற்றதனை யுள்ள'மென ஓர்ந்தா ரொருவாது
பெற்றதனை விள்ளின் பெரும்புகழே:—மற்றதனைச்
சிந்தித்துச் சீராய்ச் செயல்படுதல், சீர்சால்பாய்
நிந்தித்தோர் ஓர நினைந்து!

6. சலனம்

பல்குழந்து விண்ணில் முழுமதியை மூடப்
புகல்குழந்து பெண்ணாகிப் புக்கிடு—கவிழ்குழந்த
கூந்தல் முகக்குவளைக் கோலவிழிக் கோமதியின்
காந்தக்கா லெண்ணும் களிப்பு!

'இல்வேறு பாடே'ன் றிங் கில்லா திருந்திடினும்,
'சொல்வேறு பாடே'ன்று சொல்லிவிடும்—கல்வேறு
புத்தமு—மெய்முசப் புனிதவதி புன்னகைக்குக்
காந்தமுகன், பாசங் கலந்து.

"பண்டுநான் செய்த பலத்த தவம்பயந்த
பெண்டுவந்து செய்த பெருமுவவு—கொண்டவுடன்
உண்டுவக்கச் செய்யும்; உளங்கவினை யோயாது
கண்டுவக்கச் செய்திடும், கண்!

தேனைக் கிதமாய்த் தெவிட்டாது தித்திக்கும்
கோவை யிதழ்கரந்து கொண்டமுது சாலைத்
தடுத்துத் தகைமைசால் தாரமெனாய் வாழ
மடுத்துமகிழ் விக்கும் மருந்து!..."

சோறுசொல், தேனாய்ச் சுவைத்திடினும், சோராத
கோமதியும் தானாய்க் குறிப்புரைந்தாள்:—"மாமதியும்
சாய்ந்து மறுநாள் சமைந்தெழல்போல் கண்ணுறங்கி
ஓய்ந்தெழுந்தா லொன்று முவப்பு!

பாலுமதி யுங்கள் பசித்தனத்துக் காளதன்பின்
நாலுமதில் பங்கிடுதல் நன்றன்று;—தேனும்—
அவ்வும் கிட்டும்; அகம்கிட்ட மாட்டா
ததுவும் உபநிசத் து!

'இல்லை'யெனச் சொல்லா தேற்போர்கட் கீந்துதவி
'வல்லை'யென வாழும் வகையறிய—முல்லை
யரும்பாகி வந்தே கைமகிழ்ந்திங் காசைக்
கரும்பாகி முந்துவீர் நீர்!..."

"வேனிற்நாள்; அங்கம் வியர்க்கின்ற வேளையிலே
வானில்வெண் திங்கள் வயங்குங்கால்—தேனெனவே
தென்றலும் எய்ப்பாய்த் திரியுமெனின் தேர்ந்தினைந்து
நன்றென்று வைப்பார், நலன்!

வேனில்நா ளங்கம் வியர்த்து வெதும்பிடவே
வானில் பதங்கன் வருத்துங்கால்—தேனென்ன
வேப்ப மரநிழலில் வீற்றிருந்து வேதனையை
நீப்பவே செய்யும், நினைவு!

அட்டி வருங்கலைகற் றாறவுண வுண்பித்திங்
கொட்டி யுருக வுறவாடித்—தொட்டவுடன்
'வேதாந்தம் வேண்டு'மெனும் வித்தகீ! வேண்டேன்நீ
பேதாந்தம் பூண்டகன் பின்.

மானம், மயக்காமை, மாட்சி,—மகத்தான
ஞானம் நயப்போர், நாயகியை—வானில்
உயிரொன்றித் தென்ன உளமொன்றி வன்றித்
துயரொன்றத் தோய்ந்திடார், தோள்!

ஏடெடுவை யேற்மா விலக்கிடுமோ அத்தகைய
ஆடவரி வாற்றற் கனவில்லை!—போகபோ!
கன்னற்றோர்க் காது கனியவெடுத் தோதிமென்
வண்ணங்கள் காணா ரவர்!

## 7. நிலைபாடு

"உள்ளத்தில் வைத்துள்ளே னும்மையான்; நீரென்னைக்
கள்ளத்தில் வைத்தெள்ளக் காட்டுவீர்; – தெள்ளத்தான்
வீடு வெறுக்க விழிசிரிக்க, வெட்கத்தால்
மூடவே வைக்கும், முகம்.

அறிவுறவே யும்மை அணுகின்நான், நீரென்
உறவுறவே சும்மை உகுப்பீர்; – பெறுவிரெனின்
போற்றுவீர்; பூவாய்ப் பொருந்தேனேல் போடியெனத்
தூற்றுவீர், ஏவாய்த் துளைத்து.

'அத்திப் பழமென்ன, அண்டமனைத் தும்மூரப்
புத்தயிழ்தா யுண்டுமிழ்ந்து போகிறதால் – உத்தான
கால'மெனக் கூறும்நீர் காமத்துக் காட்படுதல்
சீலமெனின் சீறும், சிவம்!

ஞானப் பழந்தின்ற நல்லவனே நாடித்தன்
மானம் தழையால் மறைத்தானாம் – ஈனன்
இதயத்தி லென்றும் இருளென்றால், ஏற்போர்
உதயத்தி லென்றும் ஒளி!

தேங்கா யனைத்தும் தெருவிலே வீழ்த்துகிற
ஓங்கா முடத்தென்னை யொத்துள்ளீர்; – பாங்காய்நீர்
ஊரார்க்குச் செய்வீ ருபதேசம்; உற்றார்க்கு
நேர்ராய் உய்வீர், நிலைத்து!..."

அங்கொன்று மிங்கொன்று மாயன் னுணங்குரைத்த
இங்கிதச்சொ லின்கின் றிதயமுறப் – 'பங்கயத்தை
மங்குல் கவிந்ததெ'ன மாதின் முகந்துடைத்தான்,
நங்கைநலன் காண, நவின்று.

"யானை மிகப்பெரிய தாயினுமென்? ஆற்றலினால்
கானைத் துகள்செய்து காட்டினுமென்? – ஊனில்தன்
ஊசிமுனி யொத்த 'உறஞ்சி' துளைத்திரம்
கூசவியா யாரும், கொசு!

யானை கொசுவை யலைத்தோட்ட மாட்டாமல்
பூனையாய் அஞ்சிப் புகல்தேடும்; – சேனை
முயலனைய கூந்தல் முழுமதியே மூண்டின்
றியலினையச் செய்தா யெனை!

'நுங்குதுரை யாய்ப்பொங்கி நொய்யலனூற் பாவெ'ன்னைத்
தங்குதுரை யுய்யத் தனித்தோடும்; – அங்கைகுவித்
தள்ளிப் பருகியத் தாயாசம் தீர்க்காமல்
உள்ளி யுகுப்பா யுளம்.

சத்வ குணமாகிச் சத்தியத்தைச் சார்ந்தொழுகின்
'தத்வமசி' யாதல் தவறாது; – 'வித்வம்(
இதுவே! இரண்டற் றிதிலிதய மொன்றின்
அதுவேநீ யாவா யமைந்து!...."

"புதியதொன் றோர்ந்து புகன்றிருப்பீ ராயின்
மதியிதென் றார்ந்து மகிழ்வேன்; விதியே!
பழையதே வுள்ளிப் பழையதையே விள்ளல்
பிழையிதே" என்றாள், பிடி!

முல்லைமது வார்ந்து முரன்றவரி வண்டுறங்க
இல்லமது சேர்ந்தஇளங் கன்றுறங்கத் – சில்லுமதி
'நல்லோ னுறங்கி நலிவகற்றல் நல்லதெ'ன
நில்லா திறங்கும், நிலத்து!

## 8. நிலைபாக்

'புத்திரனைப் பெற்றுப் புகழுறச் செய்வ'தெனும்
வித்தகனம் சற்று விசையுற - உத்தமியும்
முற்றாம் முறைபுமொரு மோகியை யிழ்றெடுத்தாள்
நோக்றாள் மறுக, அவற்ற.

கொண்டாள் குறிப்போர்ந்த கோமதியே கூறினள்:"நான்
வண்டார்ந்த பூவாய் வசித்திடுவேன்; - உண்டாகும்
மைந்தனைக் காண மனமகளாய் மற்றொருத்தி
இந்தமனை காணின், இசைந்து!

'இரண்டுமனைக் கேற்ற இடமிறவன்' றென்றால்,
மருண்டமனம் மாற்றி மகிழத் - திரண்டிருக்கும்
சொத்துக் கொருமகனைச் சொந்தத்தில் தத்தெடுத்தல்
உத்தமம்"மற் றென்றாள், உணர்ந்து.

மாமன் மகளாய் மனங்கவர்ந்த கோமதியைச்
சோமன் மணந்து சுகிக்குங்கால் - ஏமமுறப்
பெற்றவை பெண்களெனப் பிள்ளைக் குழமகற்காய்
மற்றொருத்தி வந்தாள், மனைக்கு.

முதல்மனைவி கோமதியே மூலமுதல் மூப்பாய்ப்
புதிய்மனைவி யாய்வந்த பாவை - புதல்வனையும்,
சீராண்டான் கொண்டு சிறப்பாளப் பெற்றளித்தாள்,
ஓராண் டொளிவதற் குள்!

பையன் பிறந்து பரவசமா யையனுமிவ்
வையம் மறந்து வாழ்த்தியதும் - கையுறவே
கோமதியைக் கீந்து, 'குழந்தையின்தாய்நீ' யென்றான்,
மாமதியா னேந்த மகிழ்ந்து!"

மையேந்தும் கண்ணி மலரேந்தும் கார்க்குழலி
கையேந்தி யண்ணலின் காள்முளையை - மெய்யேந்தும்
கோலமுகம் கண்டு குறுநகைகொண் டாள்,கொழுநன்
சீலமகிழ் கொண்டு சிலிர்த்து!

பிணக்கற்ற தென்னும் பெருவாழ்வி லின்பம்
கணக்கற்ற தென்னும் கருத்துக் - கிணக்குற்ற
சோமப்பன் சோகம் சுகமாகிச் சூழ்ந்ததுகொல்
பூமணம்போல் போகம், பொலிந்து!

பற்றுறவே வந்து பரிந்துமக வைப்பைய
வுற்றுவோ ரேந்தி யுவந்துரைத்தார்; - 'மற்றிவனைப்
பெற்றவனே யின்று பிறந்தான்காண் பிள்ளையுமிக்
கொற்றவனே', யென்று குளிர்ந்து -

'வானமதி வந்து வனிதைவடி வான'தெனும்
பானுமதி சிந்தை பரவசமாய் - 'மானமது
தானழிந்தெ'ன் றார்ந்து தளிர்த்தாள்மெய், தன்னடக்கம்
தேனழிந்தென் றோர்ந்து திளைத்து.

'காயும் கயத்திங்கள் கால்வாய் கரைபுரண்டு
பாயப் பரவிப் படிந்தநற் - றாயதிலே
தாமரையும் தங்கிற்று தாயொருசேய்' தாமெனவே
கோமதியைக் கொண்டாடு மூர்!

ஈதம் மலர்ந்தாங் கிசைமலர்ந் தில்லறத்தில்
காதல் மலர்ந்து களிமலரச் - சீத
மதிமலர்ந்த பாங்கில் மனம்மலர்ந்து மைந்தன்
பதிமலர்வான், பாங்கு படைத்து!

# எமறல்

போது மணக்கப் புனைவுற்றுப் பூத்ததும்போய் —
நீதி மணக்க நினைப்பவன்சொல் — சாதுவாய்
உள்ளோரும் கண்டுற் றுளமுவந் தட்கொளல்போல்
கள்ளாரும், வண்டு களித்து !

அரங்கில் காண்பா ருளங்கவரும் ஒப்பனையில்
'சீரக'மென் றெல்லாரும் செப்புமிடம்; — சாரவரின்
அல்லலின் சொல், செயலை ஆறுதலாய்க் கோருபவர்
எவ்விலர்மற் றொல்ல இருந்து.

'எந்தா'யென் றேங்கி யிடம்நாடி எய்தியதும்,
'வந்தா'யென் றாங்கு வரவேற்றுக் — குந்தாது
நொந்தாரின் நோய்தீர்த்து நோற்பா யனுப்புபவன்,
வந்தான், பின் வந்தாள் மனைக்கு.

களவழுக் காயிரவு காத்திருந்தாள், காதல்
தணவுத் துயிர்தொடரத் தாங்காள் — பனிவிருந்தாங்
கெள்ள இயலாளாய் ஏற்க இயலாளாய்
வெள்ளம் பயிலும் விழி!

"பண்ணியது பாழாம்ப் பசிருசியும் பாழாய்மற்
றெண்ணியது பாழா யிரவழுதேன் — கண்ணீரே
மண்ணீரா யொன்ற மனம்மறுகி மாய்ந்தேன்நான்
புண்ணியனே!" என்றாள், புலந்து.

"மூத்தாள் மனைக்கு மொழியாது போனீர்நீர்,
நீத்தாளாய் நொந்து நிலைகுலைந்தேன்; — ஆத்தாவோ!
ஊத்தப்பம், கூட உழுந்துவடை யுண்ணாமல்
காத்தொப்ப வாடுதென் கண்!..."

"ஊத்தப்ப மென்றும், உழுந்துவடை யென்றும்நீ
நாக்கதப்பி நின்று நலியாதே — கூத்தொப்பக்
குஞ்சான் குறுநகையும், கோலமுக மும்காணும்
நெஞ்சோனாய்ச் சென்றேன், நினைத்து!

கால்தவறும், கண்தவறிக்; காசினியை யாள்பவன்கைக்
கோல்தவறின் மண்ணில் குடிதவறும்; — நூல்தவறு
கூடின் குணந்தவறும்; கூறுகெட்டில் வாள்தவறி
யாடின் தவறும், அறம்!"

"பெற்ற மகனோ பிறர்கையில்; பேறுவதற்
குற்ற கொழுநனு ரார்கையில்; — ஏற்றிநான்
ஒற்றைக் கொருத்தியிருந் துள்ள முவந்திடவும்
கற்றறிந்து கொள்ளாக் கசடு!

கன்னங் கரியஇருள்; காவலனில் லாதமனை;
தன்வந் தனியாய்த் தவிதவித்து — மன்னுயிர்
அஞ்சிப் பதுங்கும் அவலநிலை; ஆள்பவனும்
வஞ்சித்தா னன்டோ வழி!

தூண்டில்மீ னொத்துத் துடித்த வுடல்துயிலை
வேண்டிக் கிடக்க, விழிதடுக்க — யாண்டும்
புகலின்றிப் பொங்கிப் பொழியும்கண் ணீர்க்குத்
துகிலொன்றே யிங்கென் துணை!..."

வேதனைக் கூடு வெடித்து வெளியேறும்
சோதனையில் கூடிச் சுடச்சுடவே — நாதனுடன்
நேராக வொட்டியவள் நெஞ்சிறுகி வெஞ்சொற்கள்
போராகி யிட்டாள், பொரிந்து!

## 10. சீர்திருத்தம்

'பெண்ணெனில் பேயும் இரங்குமெ'னும் பேச்சிலும்
மண்ணில்மற் றாய மருங்குளதால்; — எண்ணில்
பிணக்கம் பிறந்த பிழைகளைந்தால், பெண்மை
பிணக்கம் பிறத்த வியல்பு.

அறவுணர் வாற்ற லகத்துறைய, ஆயா
மறவுணர் வாற்றல் மறைய — உறவுணர்வு
மேலாகி, மென்மையாய் மேலாடை யால்துடைத்தான்,
வேலாகும் முன், மை விழி!

காதல் கலைவல்லோன் கண்ணீர் துடைத்திடவே
மோதல் தொலைய, முகம்மலரக் — கோதிலள்தன்
பூம்போது பொன்மார்பு புல்லிப் புளகித்தாங்
கோம்பழுற வொன்றிற் றுளம்!

ஆரணங்கின் றாயவுள மன்புற் றமைந்தவொரு
காரணமாய்ச் சோமனுமின்புற்றுரைத்தான் — "வருணவுப்
போர்புரிந்து கொண்டு புலம்பாது, போதனை
நேர்புரிவோ" மென்று நெகிழ்ந்து!

"பூப்போலும் மேனி புழுங்கிடச் செந்தளைத்
தீப்போலும் நீர்நினைத்துத் தீண்டாமல் — நீப்பாயென்
முன்னவே நொய்தா யுடைந்ததுளம்; ஓர்ந்ததனைத்
முன்னவே செய்தாய், துணிந்து.

'வீட்டுக்கு வேண்டாம் விரித்ததலை' யென்றறிஞர்
நாட்டுக்கு வேண்டி நவிலுஞ்சொல் — கேட்டுன்
முடிதிருத்திப் பார்த்து முழுவலித்தால், நாவிப்
படிதிருத்திப் பார்ப்பேன், பயன்.

வேலையில் லாதாள் விரும்பி யொருமகவைக்
காலையில் பெற்றுக் களிகூர்ந்து — மாலையில்
சாகக் கொடுத்தழுது சாய்கும் பிட்டகதை
யாகக்கூ டாதில் வகத்து.

'அழகொழுங்கு வாய்மையே ஆண்டவனெ'ன் றாய்ந்தோர்
வழிகெழுமித் தூய்மைநம் வாழ்வாய் — விழியொளிர
உன்னைநீ யாள உளத்திரா முற்றிருந்தால்
என்னையும் ஆள லெளிது!

ஆசையே நம்மை யழிப்பதூஉம் ஆக்குவதும்!
ஆசையை ஆன்மாவில் வைக்காதார், — மாசையே
பூசிப் புலனைப் பொலிவிழக்க வைக்கின்றார்,
கூசிநோய் கூடக் குலைந்து.

புறத்தை வெறுத்துப் புறங்கூறல், போற்றும்
மறத்தை யுறுத்தாது மாய்த்தல் — அறத்தைத்
துறவாது நிற்பவரைத் துன்புறுத்தல் செய்யார்க்
கிறவாது நிற்கும், இசை!

உள்ளத்தில் பொய்மை யொழிந்துகொண் டுள்ளதெனின்
வெள்ளத்து நொய்மை விளைவிக்கும்; — கிள்ளாய்நீ
தள்ளுவது தள்ளித் தயங்காது தத்துவத்தில்
கொள்ளுவது கூர்ந்தோர்ந்து கொள்.

'உத்தமி'யென் றுன்னுள்ளம் உன்னை யுயர்த்திடவே
சத்தியமென் றொன்றுளது சஞ்சீவி — புத்தமிழ்தாம்
உள்ளத் துவப்புக் கொளியூட்டும்; ஓம்புமுடல்
கொள்ளத் தவிர்க்காக் குணம்!

# 11. உணர்வு

தாயுமித மாகித் தகைமை தனைவிரும்பு
வாயுமித மாகும் வகையறிந்த — பானுமதி
பற்றறிந்து நின்றாள், பாவாய்க் குளிர்ந்துவர
இற்றிறந்து சென்றா ளிசைந்து.

'பின்புத்திப் பேதை'யெனப் பெண்ணுள்ள மேசுமெனும்
துன்பத்தை மேதையுளந் துன்னிடவே — 'முன்புத்திக்
கேற்ற நினைவையுள மீயவே யில்லை!'யென
ஆற்றிப் புனைந்தா ளகம்.

'இனிமை' யெனவெதுவு மில்லா திதயம்
தனிமை தனைத்தவிர்க்கத் தக்க — நனிமெய்க்
கனவொன்றும் தம்பியைக் காண்பதெனக் காட்சி
நனவொன்றச் செய்தாள், நயந்து.

பச்சைப் பசுங்கிளிக்குப் பால்பழம் தந்துதினம்
கச்சிதமாம் நற்சொற்கள் கற்பித்து — மெச்சிடவே
பேசி மகிழுங்கால் பேணாதான் கைபட்ட
மாசுக் கிகுழும் மனம்!.

பறந்துவிடத் தம்பி மனத்தொளியின் மாண்பு
குறந்துவிட நம்பித் துனிதற் — சிறந்துவிடும்
போதொன்றி னன்றிப் பொலியு முளங்குவிய
யாதொன்று மொன்ற லரிது.

சிற்பக் கலையில் சிறந்தோன் செயல்திறனால்
பொற்பு நிலையில் புறத்துருவா — யற்பமரம்
மாறுவதும் தப்பாது, மக்களகத் தாசைநிறை
வேறுவதும் தப்பா தினி!

மற்றவர்தம் கையில் மரம்மாறும் நாட்டுவிதம்:
உற்றவர்தம் உய்திக் குரமாகும் — கொற்றத்தேர்,
சப்பரம் கட்டில், தூண், சட்டம், சா லாணியெனத்
துப்புமனைக் கொட்டும், தொகை.

தம்பிகைப் பட்டமரம் தன்னிகரில் லாததரம்
தும்பி, புறா, தோகை மயில், குயில்பூங் — கொம்பினிலே
பச்சைக் கிளி, குருகு, பன்றி, முயல், கன்று, பசு,
மெச்சுமமா னாகும், மிளிர்ந்து!

'ஞானியவ னென்று நவில்வோர் சிலர்; சிலபேர்
'மானியவ னென்று மகிழ்ந்திடுவர்; — 'நா னவிந்து
கைதேர்ந்த சிற்பக் கலைஞனெ'னக் கற்றறிந்தோர்
மெய்தேர்ந் துரைப்பதே மெய்!

அம்புவியில் நம்புவதை நம்பும் அறிஞனவன்;
தும்பியும் பம்பித் துணிந்துபோய்க் — கொம்பில்
மலர்காண லொப்ப மரங்கண்டு சிற்பம்
பலர்காண வைப்பான், பதித்து.

வண்ணம், வடிவம், வனப்பினொடு சீவகளை
யெண்ணி யிதயமிழும் பூதெய்த — நண்ணியதை
யுண்டு களிப்பதுபோ லுள்ள முவந்திடவே
கண்டு களித்திடும், கண்!

பாலிருக்கும் போதருந்தப் பாலசனம்; பாவலரின்
நாவிருக்கும் போதிருந்து நோன்று கொவல் — மேலிருக்கக்
காலங் கருதிக் கருத்தூன் றிக் கற்றகலைச்
சீலங் கருதும் செயல்!

## 12. உணவு

சோற்றுக் குணவாகிச் சொத்துக் குணவாகிச்
சுற்றக் குணவாகிக் கொண்டுளரால் — போற்றும்
உயிர்க்குருதி யூட்டும்மெய் யுண்ணார்பொய் யுண்டு
பயிர்க்குருதி யூட்டத் தொடர்ந்து.

சோறுகா ணாதான் சுதந்திரமும், சோறிருந்தும்
பேறுகா ணாதான் பெருமிதமும், — பேறிருந்தும்
வீறுகா ணாதான் விகசிதமும், வீறிருந்தும்
ஆறுகா ணாதான், அவம்!

மாய்ந்து மறுநாள் மலரும் மதியாயன்
றாய்ந்து குளித்துவந் தாவலொடும் — ஓய்ந்திருந்
துள்ளத்தோ டொன்றி யுரையாடு வோருளத்தைக்
கொள்ளத்தான் நின்றாள், கொடி!

"'இலையுங் கிளையுமென்' றிவ்வா றிழிசொல்
கணையெய்ய வேண்டாம்; — கனிவாய் — மனையிலிக்
குந்துங்கள் வந்தென் குடிக்கரசே!" என்றாள்,
செய்யவர்வாய் சிந்தச் சிரிப்பு! —

"உளமொப்பா தூறென் னுடலொப்பா துள்ள
வளமொப்பா வாறாற வைத்தென் — இளமொப்பா
தூத்தப்பம் உண்பித்திவ் வூரொப்பா வாறின்று
மீத்தொப்ப வைத்தல், மிடி!

ஊசவே வுள்ள உழுந்துவடை யுள்ளத்தைக்
கூசவே வைக்கும் கொடுமையடீ! — பேசவே
றிட்டுப் படைப்ப தரிதெனினா லுன்னையினி
விட்டுப் படைப்பேன், விடை!

கஞ்சத் தனம், கனம் காணா துளக்களிப்பை
வஞ்சித்து வாழ்வை, வறுத்தெடுக்கும்; — கெஞ்சினும்
ஈவதற் கஞ்சும்; 'இல்லை'யெனும் சொல்லிதயம்
சாவதற்குச் செய்யும் சதி!

"நச்சுச்சொல் லாடாத நல்லோர்வாய், நாடாத
கொச்சைச் சொல் லாடல் குறும்பென்பர், — அச்சச்சோ!
ஆறுகவந் தின்றும், அறுசுவையோ டுண்டுபசி!
கூறுகபின் பென்றாள், கொடி!

"குடல்பசியை யாற்றிக் கொளக்கூடும்; கூடின்
உடல்பசியை யாற்றிக் கொளக்கூடும், — குடல்பசிபோல்
போதுமெனக் கூறாப் பொருள்பசியை யாற்றுவது
நீதுமெனக் கூறும் நிலை.

அகத்தி லழுக்ககற்றி யான்மிகராய் வாழ்ந்து
முகத்தி லொளியுறா மூடர் — சகத்தில்மற்
றோம்பும் ஊனுக் குயிரோம்ப லொன்றன்றி
வானோம்பக் காணார் வழி!

சூதன், சுயநலமி, 'சுத்தசன் மார்க்க'னெனப்
போதம் புரியும் புவிதனிலே — நீதம்
நெறிதவறி, நிற்கும் நிலைதவறி, நேர்ந்த
குறிதவறிக் குன்றும் குடி!

உண்மைக்கு மாறா யொழுகா துறவினர்தம்
அண்மைக்கு மாறா யழுகாது — திண்மைக்காம்
வண்மை வழுவாது வாழ்வாயேல், வாழ்வினின்
ஒண்மையை யோர்ந்தொழுகு மோர்!"

## 13. சிற்பி

எவ்விதமற்ற தாயிருந்தும், எற்புறவே
கோவில் கதவுநிலைக் கோபுரமும்—சாவிலதாய்ச்
சிற்பப் பணிமுடித்துச் சிற்பியுமவந் திற்புகுந்தான்,
தற்பெருமை யின்றித் தனித்து.

நன்றொன்றி மூத்த மதனி நலந்திகழ
முன்றிலைக் காத்து முகமலர்ந்தின்—'கொன்றப்
பொழுதுவக்க வந்த புகழே!வா' -வென்றான்,
விழுதுவக்கும் ஆல்போல், விழைந்து!

முற்றத்தி லுற்றார் மொழியால் முறுவலொடும்
கொற்றத்தோ டுற்ற குமரன்தன்—சிற்றறிவுப்
பற்றொப்ப வொன்றிப் பரிந்து பரவசமாய்ச்
'சிற்றப்ப' வென்றான், சிரித்து!

அமுதக் குதலைமொழி யாற்றுமரு மந்தத்
தமயன் மகனைத் தழுவிக்—'குமுத
அதழ்வாய்க் குறுநகைக் கன்புப் பரிசெ'ன்
றிதழ்வாய் பதித்தான், எடுத்து!

மக்களாய் ஆய்ந்து மறுபிறவி யெய்தாதார்,
துக்கியாய்த் தேய்ந்து தொலைகின்றார்;—'தக்க'தெனும்
பச்சைமர மொன்று பயனின்றிப் பட்டதென-
எச்சமொன் றின்றி யிகத்து!

'தந்தைதா யென்னத் தமையமகவாய்த் தாம்பயத்தல்
விந்தைத'ா வென்ன வியந்திடவே,—சொந்த
வுரிமையா ளருடலும் ஓருடலா யொன்றும்
அருமையே சீவ அமைப்பு.

பெற்றா ளொருத்தி, பேணுவாள் வேறொருத்தி
இற்றா யிவளிற் கிருந்தாளற்—குற்றான்
முளரிவிழி, மூக்குமுனி, மோகனென முத்தாய்
வளரவொளி தேக்கும், வடிவு!

பற்றப்ப னாகிப் பரிவுநற் றாயாகிச்
சொற்றப்பா துள்ளம் சுருங்காது—கற்றுப்பின்
பட்டமும் பெற்றுப் பதவியும் பெற்றுவந்து
திட்டமுடன் வாழ்ந்தான், திகழ்ந்து!

"மண்ணில் விழுந்த மகத்தான வித்ததனை
விண்ணீர் விழைந்து விளைத்ததென—அண்ணிகை
அன்புசோ றுண்டார். அறிவதறிந் தாருமையால்
இன்பச்சோ றுண்டா ரிகந்து!.."

"இன்சொல் புகல்வ தியல்பா யெவரிடமும்
புன்சொல் புகலாப் புகழோனே!—உன்சொல்தேன்
பாகென்று காது பருகியும், பாழென்று
போகின்ற தாகும், பொழுது!.."

'சுகத்தினில் சொக்கிச் சுயநலத்தில் சிக்கி
யகத்திலிருள் புக்கோர்க ளன்றி—முகத்துதியை
நல்லோர் விரும்பாது நற்செய்ய' ரென்றறிஞர்
சொல்லோர்ந் துரைப்பதிச் சொல்!

தூய்மையைப் புல்லிச் சொல்லாட வல்லவொரு
வாய்மையை வெல்லும் வலிமையைச்—செய்மையிலும்
காணோம்; செறிந்துவரும் காலமதுத் தன்மையிலும்
காணோம்யா மென்பர், களித்து!

## 14. அன்பகம்

தாய்பிறந்த வீடும், தமையன் தமக்கையொடு
தாய்பிறந்த நாடும் தழைத்திடவே —தான்பிறந்த
நொய்யல்நன் நீரை நுகர்ந்துவந்து வாழ்ந்தவரிம்
மெய்யர்தம் பேறை, மிகுத்து.

காலைக் கடனாய்க் கழிக்கத் தவிர்த்ததனை
மாலைக் கடனாய்க் கழித்துமகிழ்ந் —தோலைப்பாய்
வேறா யுறைகொண்டான், விண்மீ னிடைவிளங்கும்
மாறாப் பிறையாய், மலர்ந்து.

சத்துள்ள தக்கதொரு சாப்பாடு; சாருடல்
ஒத்துள்ளத் துக்குமுர மூட்டுவதா —யத்தினத்தில்
அட்டதனை யன்போ டனைவர்க்கும் ஆய்ந்தளவோ
டிட்டனன் பண்ணை யிசைந்து.

நாக்கு நயப்பதாய் நல்கதனை மென்றுண்டால்
நீக்க வியலாநோய் நீக்குவதாய் —மூக்குக்கும்
ஒத்துநலம் கோல உவந்துநனி யுண்டுவக்கும்
புத்தமிழ்து போலும், உணவு!

அடுத லொருகலை, மற் றட்டதனைத் தட்டில்
இடுத லொருகலையா யிட்டுப் —படுதல்
அறிந்துகாத் தன்பா யமர்த்தி விழைந்துண்ணச்
சிறந்த 'தெனு மிப்பச் செயல்!

அன்னமே ஆருயிர்க் காதரவாம்; ஆருயிரே
மன்னும் மனத்துக்கும் ஆதரவாம்; —மன்னுமனம்
விஞ்ஞானத் தாதரவாம்; விஞ்ஞானத் தாதரவு
மெய்ஞ்ஞானப் போதமிது மெய்!

அன்னயிடு மன்னம் ஆற்று முடல்பசியை;
அன்னவிடு மன்னம் ஆற்றுவது —நன்னியே
நூறாறு நூல்கள் நுறுவகியாய்ந் தோதிடினும்
ஆறாத சால்புப் பசி!

வான்முகத் தொன்றும் வளர்மதியாய் வாழ்வுறவே
நான்முகத் தொன்றி நுவலும்சொல் —ஆன்மீகமாய்
ஆராய்ந்து பொற்போ டமைதியகத் துற்றவர்தாம்
நேராய்ந்து நிற்பர், நிலைத்து!

'சோற்றுச் சுகமே சுகமெ'னும் சோம்பல்நோய்
மாற்றும் மகத்தான மந்திரமாய்ச் —சாற்றுகிற
அன்னைருள் வாக்கே அமிழ்தென் றறிந்தேன்மற்
றன்னிலிருள் நீக்கு முளத்தே.

'இங்கேபார் தெய்வமதோ அங்கேபார் தெய்வமென
எங்கேபார்த் தெய்த இயம்பிடினும் —எங்கும்
இருப்ப துருவன்றி யசலஃ தன்றென்
றுரைப்ப துபநிசத் து!

கண்ணதனைக் காணாதாம்; காசினியி லுள்ளதனைக்
கண்ணதனால் கண்டு களிக்கிறதாம், —என்னின்
அதுவேதான் தெய்வம்; அதுவேநம் ஆத்மா!
அதுவேநான், தத்வம் அசி!

இந்தநம் ஆத்மாவே ஏற்குமொரு தெய்வமெனச்
சொந்தமா யாய்ந்து சுகங்காணா —நந்தோ! நாம்
சிற்பத்தைச் சேவித்து சிலையையே வன்செய்தோம்
தற்பரங்கா ணாதல் தவிர்த்து!

# 15. சந்திப்பு

தமயனைத் தாங்காணும் தாபத்தால் தம்பி
இமயத் திங்கலைமா னெல்லச் — சமயத்தை
எப்போக்கா னாகி விரைந்துவிட் டெற்றெழுந்தான்
மாம்பாக்க மாக மகிழ்ந்து.

மனிதன் மகத்தாம் மணங்கமழ்ந்த மல்லப்
புனிதன் புலம்புக்க போதம் — இனிதெனவே
ஒன்றின்பின் ஒன்றுமற் றன்னியுவந் தோர்பவனாய்ச்
சென்றனன்தன் சிற்றன்னை யில்.

அன்ன உருவாய்த்தன் னாருயிரு முள்ளதென
எண்ணி வருவா னெழில்மனையை — நண்ணியதும்
'ஈருடலு மொன்றுயிர்' றெனத்தழுவி யெம்முறவும்
நேரிடா மென்றும், நினைப்பு!

காணாது கண்டு கனிவோடு தன்தம்பி
கோணாது கொண்ட குணத்தோடு — பூணாது
பூண்டான் புகழாரம்; போற்றும் புவியெனவே
ஆண்டான் மகிழ்ந்தா னவன்!

தம்பிமுகத் தாமரையில் தன்விழிவண் டாய்ப்பதிய
"வம்புவழக் 'கோமம்' வளர்த்தாமல் — அம்பிகையின்
கோயில் பணிகள் குறையின்றிக் கூடிற்றோ?
ஆயிடா" னென்றான், நயந்து.

"சிந்தை பொருந்தத் திருத்தமுறச் செய்தபணி
விந்தைக் குரிய விருந்தாயும், — அந்தத்தில்
மன்னன் முகத்தில் மகிழ்ச்சிகா ணேனென்றான்.
தன்னிலையில் தாழா தவன்.

"கலையுணர்வு தாங்கிக் கருத்துணர்வு தாங்காள்
நிலையுணர்ந்தும் நீங்காது நின்று — கலையுணர்
வோங்கிப் பணியை ஒழுங்காய் முடித்தே"னென்
றேங்கித் தணிந்தா னிசைந்து.

"ஒட்டி யுடனிருந் தொன்றிப் பணிமுடித்த
கட்டுறுதி யன்னதின் காரணமாய்ப் — பட்டிமகன்
மூடி தனம்சிதைத்த மூட்டிற்று போல"மென
வேடம் கலைத்தான், விரைந்து!

"உள்ளத்தி லுண்மை யொருமணியு மில்லாதான்,
கள்ளத்தில் கயமை கருதிடுவான், — முள்ளொத்
துறுத்திடுவா னுற்ற வுறவினர்தம் உள்ளம்
வெறுத்திடவே பற்று விடுத்து.

ஆட்சி நலமெய்தி னன்றி யகிலத்தில்
மாட்சி நலமெய்து மாறில்லாக் — காட்சிகளைக்
காணுகிறோ மன்றோநாம்? கண்ணாரக் கண்டுமிது
பேணுகிறோ மென்றால், பிழை!

பொல்லார் பொலியப் புரியும் புவியாட்சி
நல்லோர் நலிய நடப்பதனால், — எல்லாரும்
ஒன்றி யொருமித் துணர்வை யுறவுறுத்தி
வென்று திருத்தல், விதி!

மன்னனை யுள்ளவன்நம் மைத்துனனே யாயினுமென்
'நன்மை'யை யுள்ள நரிக்குறவன், இன்னனைக்
காண்பித்துக் கொள்ளான்; கயவரைக் கண்டிக்கான்,
வின்பிக்க கொள்ளும், விலங்கு!

# 16. இரத்தபாசம்

"அண்ணனும், தம்பியும் அரசனைத் தூற்றிக்கொள்
ளண்ணாமல் கும்பி யுலர்த்துவதில் —றொண்ணாதே
அட்டவுண வாறியவ லாயிற்றென் றான், பாழு
மட்டவுணர் வூறி மறித்து.

'பெருங்காய மீட்டிருந்த பெட்டி'யெனப் பெண்ணின்
வருங்கால மொட்டியுதிர் வன்சொல் —சுருங்காமல்
வாரி வடித்தின்று 'வாயாடி' யென்றபெயர்
கோரிப் பிடித்தாள், கொடி.

"'அங்கிங்கென் னாதபடி யெங்கும் பரந்தபுகழ்
உங்கள் குடிக்கே உரித்தெனினும் —இங்கிதமாய்ப்
'பார்த்துப் பகர்க பகற்பொழுதில், பாழிருட்சொல்
தீர்த்திடுக!' என்பர், தெளிந்து.

மண்ணாள்வோன் நொந்து மனமெரியச் செய்வதிலிப்
பண்ணாமற் குந்திப் பசியாற்றற் —கெண்ணீர்நீர்!
வம்புவழக் காடும்சொல், வாயில்லாக் கன்றுமுளைத்
தும்பவிழ்ந்தாங் கோடும், தொடர்ந்து!

மன்னனைப் போற்றி மதிக்காத போதுமவன்
இளவனைத் தூற்றி யிகழினுமு —பின்னால்
குறவஞ்சி குந்திக் குறிகூறு மாறாய்
மறுவெஞ்ச முந்தும் மலிந்து.

ஆணாகப் பெண்ணாக —யாராயினும், அந்தோ!
சேணாகும் எண்ணம் செவிவழியாய் —நாணாகிக்
காணாது வந்து கழுத்திறுக்கிக் காக்குமுயிர்
கோணாது சிந்தும் குலைந்து.

'வேப்பமர வீடே! விதைராகி வெங்களியே!
காப்பான காடைக் கறிக்குழம்பே! —சாப்பிடத்தான்
இன்னுமவள் கொண்டுவர வில்லை'யென எருழவன்
தன்னொடுதான் விண்டான், தவித்து.

ஒரே குழவ னுளக்கருத் துற்றோர்ந்த
யாரோ வொருவ னடுத்துப்போய்ப் —பூராவும்
உற்றான்போல் கூறியொருங் குன்டெடுத்துச் சென்றானாம்,
இற்றானே மாற இகழ்ந்து.

'நல்லோர்கட் கென்றுமே நாடுபகை யாகு'மெனும்
வல்லோர்சொல் கொன்று வசைபாடும் —எல்லார்க்கும்
வீடு விளங்காது; வேதனைகள் தீராது
கேடுவிளை விக்கும் கிளை!

உண்டுவந்து நேசித் துறங்காயு ளன்றூரில்
கண்டதைப் பேசிக் கருத்திழந்து, —கொண்டாள்
பசியோர்ந்து பாராப் பதியாயின் பையக்
கசியாமல் தீராது கள்...."

"குழந்தைகளொ டுண்டு குலவியிருந் தங்கே
யெழுந்துவந்தே னண்ணா னிங்கே —கழிந்ததுமற்
றின்பமாய்க் கால மிரண்டுமணிக் கூறென்றான்,
அன்புமயச் சீல னடுத்து.

அல்லதொன் றில்லா அறிவுரைமற் றஃதன்றேல்
நல்லதொன் றில்லா நகையுரையென் —றொல்லஇவன்
கேட்டெழுந்தான், கேடு கிளறாது சென்றமர்ந்தான்
வீட்டிலெழு மூடல் வெறுத்து.

## 17. பேசாவிரதம்

நிலத்தியல் புற்ற நிறம்திரிந்த நீராய்க்
குலத்தியல் புற்ற குணத்தால் -தலத்தியல்பில்
தாழுமது பெற்ற தமகன் தனிப்போக்கில்
பாழுமதி யுற்றாள், படிவு.

ஏறிட்டு நோக்கான், 'இதுயா தெ'னவினவான்;
சோறிட்டு நாக்கின் சுவையறியான்; -கூறிட்டுக்
கோபமும் காட்டான்; குறைகாட்டான்; கொண்டமனத்
தாபமும் காட்டான், தனித்து.

அவசிய மாயிருந்தும் ஆடும்சொல் ஆடான்;
தவசியெனத் தன்மானம் தாங்கி -கவசமெனப்
பேசா விரதமிது பேணிப் பியக்கறுப்பான்,
ஆசாபா சம்தீர்த் தவன்.

தன்னால் விளைந்த தவறென்று தானறியாள்,
முன்னால் வளைந்து முறுவலித்தாள், -பின்னாலே
சென்றாள்; சினந்தாள்; செயிர்சிந்தை செய்யாது
நின்றாள், நினைவு நெகிழ்ந்து!

ஒப்புக் கொருசொல் உரையானா யுண்டெழுந்தான்,
செப்புச் சிலையானாள் செல்வமகள், -தப்புக்குத்
தந்ததனித் தண்டனையோ? தார்மிகனி னுள்ளத்துச்
சிந்தனையோ? -தேராச் செயல்!

அருமை யறிவான்; அறிவதறிந் தாள்வான்
பெருமை யறியாத பேதை -'ஒருமையாய்ப்
பேசா திருத்த'லெனும் பெட்பின்பே ருண்மையறிந்
தேசா திருத்த -விலிது!

"கள்ளன், கலைப்புருகன், காமுகன்மற் றின்னபிறர்க்
குள்ளதைச் சொன்னா யடலெரிச்சல்; -தெள்ளத்
தெளிந்தார்க் குடலெரிந்தால் தேசத்தில் தெய்வம்
விளிந்தாங்கா" மென்றாள், விசித்து.

கைபூசி வாய்பூசிக் கையிற் படிந்திருந்த
நெய்பூச வாய்க்கா நிலைதனிலே -மைபூசும்
கண்ணாள், அணிகாட்டிக் 'கண்மலர்ச்சி காட்டீரேல்
நண்ணாதி'. தென்றாள், -நலிந்து!

அரிப்பதனை தீர்த்தற் கறிகுறியா யன்று
சிரிப்பதனைச் செய்யாது சீறி-எரிப்பதெனப்
பார்த்தொன்றி வாராப் பசுங்கிளியின் பாவனையைத்
தீர்த்தன்றித் தீரா திடர்!

சொல்லொன்று சொல்லாது சோமு சுறுசுறுப்பாய்க்
'கொல்'லென்று சொல்லாது கொல்லுங்கண், -அல்லொன்று
கூந்தலான் முன்றானை கொண்டுடைப் பான்கையைத்
தான்துடைத்து விட்டாள், தவித்து.

'தோல்வியோ தோல்வி தொலையாத தோல்வி'யென
வேல்விழிக்கு வெட்கம் விளைவித்து -நூல்வில்லை
நாவேற்றிச் சொற்கணை நாடிநலி வெய்தவிடா
ஆவேற்றைக் கண்டா ளணங்கு!

குறையற்ற வீரம் குடிகொண்ட வுள்ளம்
நிறையுற்றுத் தீரும் நிலையில், -முறையுற்றிங்
காகும் கொழுநன் அகத்தினின்தா னாதற்குத்
தாகுற்றுச் செய்தாள், தவம்!

## 18. தவிப்பு

நசிநீங்கி நிற்கும் நிலையிலே நேர்ந்த
பசிநீங்கி நிற்கப்பைங் கன்று, -விசிநீங்கித்
தாம்பகன்றா லன்றித் தவிப்பு மகலாதால்,
ஓம்பகன்றா லொன்றா துவப்பு.

கன்றும் பசுவும் கதறுவது காதடைத்தாங்
கின்றும் இசிவா யிதமறவே -குன்றலும்
சோமலின் ஒன்றாத் துயரமறத் தம்பியும்வந்
தோமெனவே நின்றா னுயர்ந்து.

"துக்கமய மாயின்று மூக்கம் தொலைந்திரவு
சக்கையாய்ச் சாறு பிழிந்ததெனை; -மிக்கிதனின்
ஆவுங்கன் றும்சேர்ந்திங் றாறாது செய்யுமகத்
தேவலனில் லாதிங் கிடர்!

பாலைக் கறக்கும் பணியொன்று நீமுடித்தால்,
காலைத் துயரம் கரைந்துவிடும்; -மாலையில்
மற்றதனைப் பற்றி மனமுவந்து சாவிடலாம்,
உற்றதிது" வென்றா னுலைந்து!

'பாலெ'ன்ற சொல்காதில் பட்டதும், பாசத்தால்,
மேலொன்றுஞ் சொல்லி மெலிக்காது, -சேலொன்றும்
கண்ணாள்சொல் பாங்கும் கருதிக் கறந்தளித்தான்,
என்னாள்கன் றேங்க இணைந்து.

தமயன் தவிப்பதனைத் தம்பிமனந் தாங்கிச்
சமயம் தவிர்க்காது சார்ந்து -'நமதெ'னவே
பண்ணும் பணிகள் பலவும் பசுத்தொழுவில்
திண்ணமுறச் செய்தான், தெளிந்து.

'இவ்வாறு செய்'யென் றியம்பா திலங்கிடவே
எவ்வாறு தன்தமயன் செய்வானோ -அவ்வாறே
செய்நேர்த்தி யாய்ச்செய்தான்; சேர்ந்தானில், நீராடி
மெய்நேர்த்தி யாக, மிளிர்ந்து.

"அன்னைறி வித்தபணி யத்தனையும் செய்துமுடித்
துன்னும் பணிமுடிக்க வுட்கார்ந்தேன், -அன்னநான்
தன்னரை வேண்டித் தலைதாழ்த்திக் காத்திருக்கும்
பண்ணைப் பயிர்போல் பணிந்து!..."

"தும்பறுத்துக் கொண்டு தொலையுமிளங் காளைதலை
கொம்புறுத்திக் கொண்டு குலைகிறதோ? -கம்பொடுகை
யாய்வருவே னாற அமர்ந்திருசற் றங்"கென்றே
ஒய்வுருவாய் மாறும், ஒலி!

வெட்டொன்று துண்டிரண்டாய் வீழ்ந்தசொல் வெய்யதெனப்
பட்டென்று காதடைக்கப் பட்டாலும், -மட்டொன்றி
உள்ளேயோ ருண்மை யுரிமையுள வுள்ளதனைத்
தள்ளாது கொள்ளல் தகும்!

'தண்ணீர்மைத் தாய்த்தோன்றும் தாமரைபோ லன்றேலவ்
விண்ணீர்மைத் தாய்த்தோன்றும் வெண்மதிபோல் -பெண்ணீர்மைக்
கன்னி யொருத்திக் ககலத்தொப் பில்லை'யென
எண்ணினா னேமுற் றிவன்!

போற்றத் தகுந்தவிதம் பூசல் புரியும்சொல்
வாற்ற லறிஞர்க் கடுப்பதுதான்; -சாற்றினது
வெவ்வேறு வாறு விருப்பம் விளைவித்துச்
செவ்வாறு மாறும், சிறந்து!

# 19. கிண்டல்

"'அன்ன மிருங்கை யன்புக்கை யென்பதனை
யுன்னி யொடுங்கி யுகப்பேன், நான் - மன்ன!
கவறுகள், காமம், களவு, பொய் யின்ன
தவறுகள் செய்யா தவன்" ....!

"வீட்டுக்கும் நல்லோன், வினைக்குநல் லோனெனினும்
'நாட்டுக்கும் நல்லோன்நா னெ'ன்னும் சொல் - மீட்டுக்கொள்;
நம்பவே - நம்பேன்நா" னென்றாள், நகைத்தவளாய்த்
தம்பிமுகம் வெம்பத் தனிந்து.

"ஆசி யருளுக, அண்ணீ!" யெனத்தம்பி,
'மூசி மருளல் முறையன்றெ'றன் - றேசியவன்
நல்லவித மாயட்ட நாட்காலைச் சிற்றுண்டி
ஒல்லவிருந் திட்டா னுவந்து.

"'அன்னாவின் தம்பி அசகாய சூர'னென
மன்னோவிட யந்து மதித்தாலும், - என்னேக், மற்
றுள்ள மொளித்தொழுகி யூராள்வோ ருண்மையில்
கள்ளர்தா" மென்றாள், கடிந்து.

"மெய்யின் விளைவு மிகுந்தபுகழ்; மேவாத
பொய்யின் விளைவு புகழழிவு, - செய்யின்
விளைவோ விதைவிளைவு; வேட்கைவெளிப் பாட்டின்
விளைவோ விதியின் விளைவு!

சிற்பக் கலையில் சிறந்திருந்தும், சீர்சாலும்
பொற்புக் கலையில் புகழிழந்தாய்! - தற்பொழுதும்
ஐந்திற் கிரண்டவல மாயிற்றுன் சொல்"லென்றாள்,
நைந்தவன் நாண, நகைத்து.

தம்பி தலைதாழ்த்த லாயிற்று; தாமரையில்
தும்பி நுழைந்ததேன் துய்த்தென்னக் - கொம்பொத்துத்
தானெங்கோ செய்த தவறறிந்தா னன்னியென
மானங்கே டெய்த, மலைத்து.

"இருகையும் சேர்ந்தாங் கிசைந்தன்றி யென்றும்
ஒருகையிக் கோசை யுதிக்காதென் - வருகையதன்
காரணமே யாகும்; கனிந்தஎம் காதலதைப்
பூரணம்செய் வீர்கள், புரிந்து!

"ஆசி - அதனைவிட அண்ணீநீ ரன்புடனே
ஏசி விதைய மிகிக்கிறதால்! - மாசில்லா
உள்ளமே தெய்வமென ஓர்ந்தே யுபநிசத்தில்
கொள்ளவும் செய்தார், குறித்து!

'வாக்கில் பெயரடக்கம்; வாக்குமனத் துள்ளடக்கம்;
நோக்கில் மனமடக்கம்; நோக்கம்மற் - றாக்கத்தில்;
ஆக்கம் இயக்கில்; இயக்கம்மெய்ஞ் ஞானத்தில்'
ஆக்கிவை தானாத் மிகம்! ..."

"சட்டியிலே சாறடக்கம்; சாற்றிலே சோறடக்கம்,
வட்டியிலே யிட்டால்நம் வாயடக்கம் - விட்டால்
வயிற்றடக்க மாம்; வயிறு வாழ்வடக்கம்; வாழ்வோ
பயிற்றியடங் காது படித்து!"

என்றுதன் அண்ணி இனிமையாய்ச் சொன்னதமே
நன்றிதென் றுன்னி நகைத்தவனும் - 'இன்றிதயம்
கொண்ட துரைத்துநான் கோமாளி யானே'னென்
றண்டடெழுந்து சென்றா னுவந்து!

# 20. காமரந்தி

அலைகளெனச் சாலையில், ஆவினங்க ளாற
மலைகளில் மேய்ந்துவரும் மாலை,--நிலைகளுக்குக்
கால்வீசிக் கன்றுகளைக் காணக் கடுநடையாய்க்
கோல்வீச விஞ்சிக் குவிந்து.

இலைக்கன்று சேரா தியங்கிடுமா மந்தை
வலங்குன்றா வாற வயங்கக்--கொழுங்குன்றம்
வீழ்ந்தபுல் மேயத்தந் தாடுகளை நீரருந்தி
வாழ்த்தி யனுப்பும், வழி!

சுவைகுறு வொன்றிச் சுரந்தநீ ராறாகி,
மலைகுறு வொன்று மகிழ்ந்தோடி,--விலைகுறு
வொன்ற 'விதி' யென்றில் வுலகுய்யு மாறனுப்பும்
என்றுமிதம் குன்றா இறும்பு!

வருந்தவே பற்றி வருத்தும்நோய் நீக்கற்
கிருந்தவப் பெற்ற இயல்பில்,--மருந்தா
யருந்தவேர், பூ,பிஞ் சருந்தழை,கா யின்ன
பரிந்துபார்த் தியும், பறம்பு!

வேறுநிறம், வேறுருவம், வேறுகுணம், வேறுமணம்
நாறுதலா லின்புறுத்தும் நாள்மலர்கள்,--தேறலென
ஈக்களை யீர்த்தெடுப்பித் தீயச்சேர்ப் பித்துநமைக்
காக்கவே பார்க்கும் கடம்.

யானை, கரடி, குரங் காடு, முயல், மானயில், நாய்,
பூனை, புலி, பன்றி, புசங்கமெய--ஏனை
மயில், புறா கோழி மரங்கொத்தி, மற்றும்
குயில், குருவி வாழும் குவடு.

கானகத்தில், ஆற்றங் கரையகத்தில் காலமெல்லாம்
மனகத்தைப் போற்றி யுவந்திருந்து--வானகத்தில்
பாடிப் பறக்கும் பறவைகளைப் பாங்குபட
மூடிச் சிறக்கும், முகில்.

'செந்தமிழ் கற்றுத் தெளிந்தவனே! தேசத்தை
யந்திக்கு விட்டின் றகலுகிறேன்;--நொந்தவர்கள்
நிந்திக்க நேருமினி நின்றால்நான்; நாளைக்குச்
சந்திப்போ' மென்னும், சுடர்!

காட்சியது காட்சி! களிப்பிக்கும் காட்சியது!
மாட்சியது மன்னும் மனத்திற்கு!--நீட்சிமய
வண்ணச் சுடர்கள் வகைகோடி வாய்ந்ததுவான்,
கண்ணிற் படரும், கவின்!

கல்லாத பொல்லாக் கயவருளம் போலவிருள்
நல்லோர் நயப்பை நலிவித்துக்--கொல்லா
நியற்கையினி தேற்றும் எழில்மதியை! ஏனைச்
செயற்கையொளி, ஆற்றச் சிரித்து!

'இரவும் பகலு'மெனும் இவ்விரண்டும், என்றும்
வரவும் செலவுமென வாழ்வில்--விரவும்
ஒழுக்கம், உயர்வுதாழ் வுண்மைபோ' லொன்றி
வழக்கமாய் வைகிடும், நாள்.

'கோல மலையின் கொடை'யெனக் கூறிடும்
நீர்வாய்க் காலின்நீர் நெல்விளைக்கும்--வேலி,
பரந்த வயல்வரப்பும் பார்த்துவந்த பொன்னன்
அருந்தினான், அந்தி வயிற்று!

# 2. சகோதரத்வம்

## 21. வைகறை

பருதியுறா தில்லை பகலும்; பகல்போல்
சுருதியுறா தில்லை சுகமும்; -கருதிப்
புறத்தும் அகத்தும் புகழுறார்க் கில்லை
பரத்தும் இகத்தில், மதிப்பு.

கூகையும் காக்கையும் கொத்திக்கொள் ளும்வாழ்வாய்
யோகசுகத் தாக்க முளத்திலறச் -சோகத்தில்
ஓயா துழன்றோரா தொப்பாறி யிட்டொடுங்கி
வீயா தழுவர், வெறுத்து.

புல்லாய்ப் பொருந்திப் புவியிற் பிறந்திருந்தால்
இல்லாய்ப் பசுவிற் கிரையாகி-வல்லேயே
பாலாய்த் தயிராய்ப் பருகும்மோர் வெண்ணெயென
மேலாய்ப்பா ராட்டுறல் மெய்!

காக்கையும் காவில் கருங்குயிலும் காணவே
யாக்கைநிறம் மேவி யமைந்திருந்தும் -காக்கை
இளவேனில் கேட்க இசைபொழிந் தின்பக்
களிவாயில் கூட்டாது காண்!

'பாழிரவு நீங்கிப் பகல்வரவு காணுறி' தனக்
கோழி துயில்நீங்கிக் கூவிடவே -தாழிசையாய்
நோய்மாய்த்துச் செங்கமலம் நாறிதழ்க ளாய்மலர
வாய்வாய்த்து வாழ்த்துங் குயில்!

'சோகம் கரைந்து சுகங்காண நேர்ந்த' தெனக்
காகம் கரையக் களிவண்டு-போகுங்கால்
பாக்கண்டு துய்க்கின்ற பண்புத் தமிழ்மகன்போல்
பூக்கண்டு துய்க்கப் புரிந்து!

'நாவல் கனிக்கு நறும்பூந்தேன் ஈடாமோ?
காவில் மிழுக்கும் கருவண்டே! -பாவிற்குள்
வெண்பாவுக் கீடோ விருத்தம்? விளம்பென்றே,
பண்பாயும் பச்சைக் கிளி.

கோலக் குளத்தருகில் கூவிரத்தில் கோப்பியமாய்ச்
சீல மறிந்துறையும் செம்போத்தும்- 'ஞாலத்
திருள்நீங்க வந்தா யிளங்கதிரே!' யென்று
மருள் நீங்கும், முந்தாய் மகிழ்ந்து!

'ஓமெனுஞ் சொற்பொருளை யுற்றோர்ந்து கொள்ளாது
நாமசங் கீதத்தில் நாள்கழிக்கும்-பாமரர்போல்
பற்றோர்ந் துளராது, பைங்கிளியும் பண்ணுதெ'னும்
உற்றோர்ந் துணர்த்துங் குயில்.

'பழகும் மொழியிலாப் பாவிக் குயிலே'ன்
றழகுக் கிளிமொழிக் கன்புற் -றொழுகும்புன்
காக்கை கடிந்து', கா கா 'வெனவே கற்றகுயில்
போக்கிற்போய்ப் பூழும் புதர்.

குடிகனம் தாங்கும் குமரன்போ லன்றேல்
முடிகனம் தாங்கும் முனிபோல் -மடிகனம்
தாங்கிப் பசுவழைக்கும் தன்கன்றைக் கன்றுபசி
தாங்கா துழைக்கும், தவித்து!

விண்காட்சி யாகி விடிந்து, செடிகொடிப்பூ
மண்காட்சி யாகி மலர்ந்துகவின் -கண்காட்சி
யானதுகாண்! ஆக மனவான வெய்யோனால்
போனதுகாண், போக்கற் றிருள்!

## 22. விழிப்புறல்

காலைக் கமலம் கதிரோன் வரவேற்கச்
சோலைக் குயில்வாழ்த்தக் கூக்குமமாய், -மாலைக்
கலையைத்தன் காதலிக்குக் கற்பித்தான் கண்கள்
தொலையாய்த் தொலைக்கும், துயில்!

களிவுறுத்தும் காதல் கலைக்கவின் காட்சி
நினைவுறுத்தும் நெட்டிரவு நீங்கி-நலவுறுத்தும்
தோட்டம், துரவு, வயல் தோப்பு, தொழுத்தொடர்பை
யூட்டியுற வாக்கிற் றளம்!

மாதர்கள் மாந்தி மகிழ்மெழுகின் மார்புக்குள்,
'தீதரும் பாத திருக்கமலப் -போதரும்பிப்
பூக்கப் பொலித'லெனப் பொன்னிதயம் பூத்தபுகழ்
மூக்கப் பொலியும் முகம்.

செங்கமலம் தெய்வச் சிறப்புறவும், செங்குமுதத்
துங்கமுகம் தொய்வுத் துயருறவும்-கங்குலறக்
கொங்கு குலவும் குளம்நாடும் தம்பியெனப்
புங்கவனும் போனான், பொலிந்து!

கன்று கறவை களிகூறக் கால்மாற்றித்
துன்று தொழுவம் துலக்குவித் -தொன்ற
எருவிட்ட வைப்பா விருபோகம் காவிக்
குரவிட்டு விப்பா உழு.

பார்ப்பசியைத் தீர்க்கும் பசுமாட்டுச் சாணம்; மற்
றோர்ப்பசியைத் தீர்க்கும் எருதுகளும்; -ஊர்ப்பசியை
நீக்கச் செழித்த நிமிரும்நெல்; நெல்பசியைப்
போக்கப் பொழியும் புயல்!

உரம்பற்றி யூற்ற உழவொடுநீர் பற்றி
வரம்புற்று முற்றி வளர்ந்த-கரும்பொற்றறைக்
காவியொரு நாறுபொதி காணும்; கவின்கதலி
கோனியது கொள்ளாக் குலை!

முக்காணி நட்டுமணி மொய்த்து முதிர்ந்திருக்கும்
மக்காணி மட்டும் மதியாமரைக் -கொக்காணி
காட்டிக் களிக்கும்; கதிர்மணி முதிர்த்தகளம்
கூட்டிங்குன் றாகும், குவிந்து!

தென்னை, கமுகு, பனை, தேமா, திரண்டபலா,
கொன்னை, கொடுக்காப் புளிகொய்யா - இன்ன
பயன்தரத் தக்கதரு பண்ணைப் பயிராய்
நயன்தரக் காத்தான், நயந்து.

பற்றாகப் பாங்குதனைப் பற்றப் பயின்றவனை
யுற்றாரு மோங்கி யுயர்வுற்றார்; -முற்றாய்ப்
பயிரும், பசுவும், பலவும்பன் பொத்தான்
துயரும் வசமுற் றுணர்ந்து.

நாறு நினைவுகளும், நாறாறு வேலைகளும்,
ஏறுமா றாகிநேர்ந் தெய்திடினும்-வீறுற்
றுழவனும் மோயா துலகமொருங் காணும்
மழவனுமும் மாயும், மலைத்து!

மூடர் முறுவலிக்க மூத்தோர் முகஞ்சுளிக்க
நாடு நரகமாய் நாசமுறும், -ஏடனைத்தும்
மெய்ம்மையைப் போற்றி மிளிராது, மென்மேலும்
பொய்ம்மையைப் போற்றப் புவி!

## 23. உபநயனம்

நல்லகத்தி லுள்ள தலைத்தமயன் தம்பிக்குப்
பள்ளிப் பதியப் பகர்ந்திடுவான்; -அன்னை
அருமை மகன்பசியை யாற்றுமா றன்பார்ந்
தரிமையா லொன்ற உளத்து:-

"சின்னஞ் சிறிய சிலந்திவலை பின்னுவது
சின்னஞ் சிறியகொசு ஈக்களுக்கே; -சின்னஞ்
சிறியதேன் சிட்டு செயலிழத்தல் சிந்தித்
தறிவதறி யாத தவறு.

'நீல மணிகளெ'ன 'நித்திலங்கள் போலு'மெனக்
கோலமலர்க் கூந்தல் கொடியிடையாய் -ஞாலத்தாய்
சூடிக் களிக்கின்ற குக்குமத்தைப் பாவலர்கள்
பாடிக் களிப்பர், பரிந்து!

ஏரிதா னாயினுமென்னு? 'இன்னுயிர்க்குத் தன்னையளித்
தாளரையே யுய்விக்க வுள்ளதெனும் -நீரின்மேல்
விண்ணையெழில் செய்துதிக்கும் வெய்யோன்போல் செங்கமலம்
மண்ணையெழில் செய்யும், மலர்ந்து!

ஒன்றி யுடலில்தா னுள்ளுயிர்; உள்ளமும்
ஒன்றி யுடலில்தா னுள்ளதுமற் -றொன்றியே
வுள்ளத்தில் உண்மையும் உள்ளதெனில் தெய்வமவ்
வுள்ளத்தில் உண்டென் றுணர்.

காசுநே சித்தோன் கடவுளைக் காணான்காண்;
மாசுநே சித்தோன் மடையன்காண்; -ஆசில்சீர்
தேசுநே சித்தோன் தெளிந்தோன்; திருக்குறளை
மூசிநே சித்தோன் முனி!

தார்மீக வுண்மை தழைக்கத் தவிர்த்தால், நம்
பார்மூக மாய்வாழ்வு பாழாகும்; -வேர்மீது
'ஊடான நீரே சுகமாகு' மென்னா ற்றில்
கேடெய்தித் தீரும் செடி.

தூயவுளம், தூயவுரை, தூயசெயல் வல்லோர்க்குத்
தூயவொரு தெய்வம் துணையாகும்; -தீயவர்க்குத்
தீராப் பகையாகித் தீராத் துயர்செய்யும்
பேராத் தொகையாம் பிணி.

பொய்யர்கள் மிஞ்சிப் பொருள்மிஞ்சிப் போவதனால்
மெய்யர்கள், நெஞ்சு மெலிகின்றார்; -செய்யர்கள்
பண்படுத்திப் பாங்காய்ப் பயிர்பண்ணாப் பண்ணையெனப்
புண்படுத்தி ஏங்கப் புலந்து.

சாதி மதம்பெருகிச் சார்புகளும் பல்வேறாய்த்
தீதுநன் றோர்ந்தொழுகாத் தேசத்தில் -நீதி
நிலைதவற நேருமெனில் நேருவதெல் லாம்தீதாய்த்
தலைதவற நேரும், தலத்து.

சத்தியம் சாரச் சமத்துவமாய் வாழ்ந்திருந்தால்,
உத்தமர் சேரு முலகாகி -நித்தியமாய்
இன்பம் பெருகி இசைபெருகி வாழ்க்கையிலே
அன்பும் பெருகு மமைந்து.

பேசவும் பேணவும் பெற்றபெண் ணாளெனவே
பாசமும் பாங்கும் படிந்தவராய் -நேசமுறச்
சாத்மீகம் சஞ்சீவி யாகவே சாரவரும்
ஆத்மீகம் மிஞ்சு மகத்து!

## 24. சிந்தனை

வீட்டி லிருந்ததாம் வெள்ளிச்செம் பொன்றதிலே
ஓட்டை யிருந்ததாம் ஊசிபுக; — 'ஈட்டியநீர்
நேரம் கழிவதுபோல் நீங்கிற்'றெனவி ருந்தும்
பாரில் கழிவோர், பலர்!

உள்ளத்தில் உண்மை யொளிரு முணர்வூட்டாப்
பள்ளிப் படிப்பு பணிப்படிப்பாய்த் — தெள்ளும்
கலையறிவு காட்டாது காசறிவே காட்டின்
தலையறிவு கூட்டா தகம்!

'சிட்டுக் குருவிதலைத் தேங்காய்ச் சுமை'யெனவே
பட்டம் பதவிப் படிப்பிதுகாண், — எட்டுணையும்
தூய்மையுறா துள்ளம்; தொடர்ந்து துயர்க்கிடமாய்
வாய்மையுறா தென்றும், வதைத்து!

தேசக்காய் வாழ்ந்து திகழுவது தேராது
காசுக்காய் வாழ்ந்து கழிகின்றார்; — மாசுக்காய்த்
தாழ்கின்றார்; தாழ்வால் தமைவெறுத்துத் தாசராய்
வாழ்கின்றார், வாழ்வை வதைத்து!

'ஆணொடுபெண்' ணென்ற அமருச் சிலைகட்குப்
பூணொடு வொன்றப் புனைவித்துப் பேணிடவே
மக்கட்குக் காட்டி மதிமயக்கி மாய்க்கின்றார்,
துக்கத்தை கூட்டித் தொடர்ந்து.

'காசிக்குள் வாழ்ந்தும் கலிநீங்க வில்லை'யென
வாசிக்க வாய்த்தும், வகையறிந்து — நேசிக்கார்ப்
பாசுரங்கள் நம்மைப் பணித்ததுகாண், பக்தியெனப்
பூசுரர்கள் தம்மைப் புனைந்து.

வாய்வார்த்தை யில்வாய்மை வைக்காது வாழுகிற
பேய்வார்த்தை பேசிப் பிழைத்தவராய்த் — தாய்வார்த்தை
தட்டித் தருக்கித் தடுமாறித் தாழ்ந்தோம்நாம்
நட்டம் பெருக்கி நலிந்து.

'ஆலா யமகா யகன்றகழ்ந் தாராய்ந்து
ஆலம் முவழும்சொல் நோலாதார், — மாலாகிச்
சொந்துசுகச் சாமிகதைச் சொல்நோற்றல் சோகத்தின்
வித்துசகத்' தென்னும் விதி!

'அருமைக் குரியதொன் றாத்மாவஃ தன்றி
ஒருமைக் குரியதொன் றில்லை. — இருமைக்கும்
போதும், புவிமலரப் போது'மென வேதாந்த
நாதம் நவிலும், நலம்!

மனமயமாய் மன்னும் மனிதனையும் மண்மேல்,
'புனித'னென வுன்னிப் புகழ்தற் — கினிய
உறவாயு முள்ளமைந் தொன்றியு மொன்றா
அறிவாயு முள்ள தகத்து.

உடலெனினு மாகா துயிரெனினு மாகா
துடலுயிர்மற் றன்றெனினு மாகாக் — கடலாய்ப்
பரந்தமனப் பொற்பே பரம்பொருளாய்ப் பாரில்
நிரந்தரமாய் நிற்கும் நிலை!

உருவவழி பாட்டுக்கு மொப்பாதல் கோரும்
அருவவழி பாட்டுக்கு மொப்பா தொருவியொளி
றாத்மாவே தானென் றறிந்தமர னாகத்தான்
சாத்மிக னானால், சரி!

## 25. ஆத்மீகம்

'அன்னை'யெனப் பெண்ணின்றி 'அப்ப'னென ஆணின்றித்
'தொன்னை ஒரோணலுக் கன்னை'யெனப் - பன்னுகிற
பக்காப் படுபொய்யால் பண்பாடே பாழாகித்
துக்கம் தொடர்கிறது மெய்!

'கட்டுக்கல் சாமிகளால் கன்னித் தமிழ்நாடும்
கெட்டதெ'னில் காதுதனைக் கேளாது; - 'அட்டதிக்குப்
பாலகரால் நாடு பலப்பட்டு விட்டதெ'னில்,
'சாலவுவந் தாடும்', சகம்!

'சாமி'யெனச் சாற்றிச் சடத்தை யலங்கரித்துக்
காமக் களியாட்டம் காண்பித்துத் - தூ மமொடு
பூசைபுரிந் துய்யப் புகழ்ந்துவிழா போற்றிடினும்
ஆசையறச் செய்யா தகம்.

புள்ளிச் சிறுத்தைப் புலிபுதரில் புக்கதுபோல்
உள்ளம் மறைத்தோ ரொலிகளினால் - கொள்ளை, கொலை,
கள்ளம், கபடம், கயமையொடு கற்பழித்தல்,
எள்ளலுழ லெல்லா மிழிவு!

வெண்ணெயை வைத்திருக்கும் வீட்டாரும் வீதியிலே
எண்ணெய்க்கா யேங்கித் திரிவதெனப் - புண்ணியமாய்
உள்ளத்தில் தெய்வ முடனிருப்ப தோராதார்
புண்ணொத்துப் போவார், புறத்து.

நீரில் நிலைத்திருந்து நீந்துமீன் நேர்கோலில்
சேராப் பிடித்த சிறுதூண்டில் - ஆரவே
பற்றுங்கால் பற்றும் பரதவனைப் பார்த்திவர்கள்
கற்றார்கொல் தெய்வக் கலை!

அறிவில் சிறந்தவன்தா னாகா தகத்தில்
உறுவ தனைத்தும்தா னுற்ற - மறவனவன்
மன்னனே யானாலும் மன்னுலகந் தன்னிலறம்
துன்னாமல் துன்னும் துயர்.

பிறவிப் பிணிக்குப் பெருமருந்துப் பேறாம்
அறிவுப் பொருளே யவனென் - றுறவுதனை
யோம்பி யுலகத் துயர்ந்துவந்து வாழாதார்
தேம்பியழத் தீரும், தினம்!

'சத்தியமே தெய்வ'மெனச் சாற்று முபநிடதத்தின்
புத்தமுத மெய்தாப் புதிராக்கிப் - 'பத்தெ'ரனச்
சோற்றுக்கு வாழ்ந்து 'சுவாமி'யெனக் கும்பிடுதல்
கூற்றுக்கு வீழ்த்துங் குறி.

'ஆத்மாவை யாராய்ந் தறமறிந் தாற்றுவதே
ஆத்மீக' மென்னு முபநிசத்தும்; - ஆத்மாவைக்
காணாதார் கல்லைக் கடவுளெனக் காட்டுதற்கு
நாணாதார் தான்நாத் திகர்.

'சத்துசித் தானந்த மானதே சைவ'மெனச்
சித்தாந்தம் செய்யும் தெளியாதே - அத்தாவோ?
மூலப் பருப்பொருளை முன்வைத்துச் சேவித்துச்
சீலமறச் செய்வோர், சிலர்.

அருமைத் தமிழகமே! ஆத்மாவை யாராய்ந்
துரிமையோ டொன்றியுயிர்க் கொப்ப - 'இருமைக்கும்
ஏற்ப திது'வென் றிதயமின் புற்றதுவாய்
நோற்பினது நோன்மை யுடைத்து!

## 26. சுவர்க்கம்

'சுவர்க்க' மெனும்சொல் -சுயநலமா சொன்றா
நவர்க்குரிய தான தனிச்சொல்; -உவர்க்க
இடப்பெயர்க் கிட்டுநமை யேமாற்றி யென்றும்
மடப்பெயர்க்காட் செய்யும் மதம்.

தன்னை யறிந்து தலைவனையும் தானறிந்து
மன்னி மகத்தாகும் மானிடனை - அன்னோ!
சிலைவணக்கம் செய்வித்துச் சீரழித்துச் சிந்தை
மலைவிணக்கம் செய்யும், மடம்.

மெய்ம்மைமேற் கொண்டொழுகும் மேல்நிலையை மேதினிமேல்
பொய்ம்மைமேற் கொண்டொழுகப் போதித்து -நொய்ம்மையால்
மக்கள் மடம்படவே மாண்பை மறக்கடித்தார்,
துக்கம் தொடரத் துணிந்து.

நீர்திருத்த மாகும்; நிலம்திருத்த மாகும்; நேர்ந்
தேர்திருத்த மாகு மெனவெண் 'ணிப் - பார்திருத்தும்
யார்திருத்தம் செய்தாலும் ஆத்மாவை யாய்ந்தறியார்
சீர்திருத்த மெய்தார், செரித்து.

உண்மை யுணரான் உடைமைகொண் டூராளல்
பெண்மையைப் பேயாகும் பெற்றிமையாம்; -மண்மீது
தீராத சூது, திருடு, பொய், தீயகொலை
பேராத பீதிப் பிழைப்பு.

சிந்தனை செய்யாதான் சீமானே யானாலும்
நிந்தனை செய்யும் நிலைக்களமாய் - நொந்தும்
சினங்கொண்டு துள்ளிச் செயல்படுவா னன்றி
மனங்கண்டு கொள்ளான், மனம்!

'சொல்வான்வோர் சேர்க்கை 'சுவர்க்க'மெனும் சொல்லிதனைக்
கல்லான்வோர் சேர்ந்து கரந்துடனே - இல்லான்வோர்
ஏமாறு மாறா யிடப்பெயர்க் கிட்டழைத்தார்,
தாமாறு மாறாய்த் தமித்து.

அரைக்கால்பொய், கால்பொய், அரைப்பொய் யனைத்தும்
நிரைக்காநீர்; ' நேமிநே ரென்னக் - குரைக்கும்
முழுப்பொய்யில் வீழ்ந்துகண் மூடியநம் நாடு
விழிப்பெய்த லென்று விடிந்து?

அண்டத்தி லுள்ள தனைத்தும் ஒருமனிதப்
பிண்டத்தி லுள்ளதெனும் பெருண்மை - கண்டறிந்தும்
மாயத்தில் வாழ்வோன் மறைத்துரைக்கும் சொல்நம்மைச்
சூனியத்தில் வீழ்த்தும் சுழித்து.

மன்னும் மறப்பண்பு மங்காத மாநிலத்தில்
பின்னும் பிறப்பவரால் பேணவே - துன்னும்
அறப்பண் படிப்படையா யாளும்பே ராற்றல்
புறப்பண் படிப்படைப் பூண்!

போரில் புறங்கொடான் பொன்றிங்கல் நட்டவனைப்
'பாரில் திறமிதை'யப் பாராட்டல் - பேரியல்பாய்
வீரத்தின் மாட்சி விளக்குவது, வெய்யசமர்ச்
சாரத்தின் சாட்சி சகத்து!

'நல்லதனை நாடிக்கொண் டல்லதனைத் தள்ளுவதே
வல்ல'தெனும் சொல்லின் வழிபட்டில் - வில்லிதனில்
உள்ள உயிரோம்பி யுண்மை யுணமோம்ப
வள்ளலென வாழ்த விழு!

# 27. ஆற்றாமை

அறிவுதா னாராய்ந் தமைந்ததெனின், மற்றவ்
வறிவுதா னுருவது மாகும்; – அறிவறியார்
கல்லையும் செம்பையும் காட்டிக் 'கடவு'ளெனச்
சொல்லுஞ்சொல் சூதான சொல்!

தெய்வ மறிவாயின் தேகமே கோவிலென
வுய்வ தறியா தொழுகியுளம் – நைவதெவன்?
சாதி, சமயங்கள், சாமிசதிச் சச்சரவாய்ப்
பேதம் தமதாய்ப் பிடித்து.

கன்னக்கோற் பைகையில் காசிபன்வே சம்மெய்யில்
சின்னக்கோ லச்செயல்கள் செய்வதுமேன்? – தன்னை
யறிந்தொழுகி யாத்மிகஞா யாற்றுமற மாற்றான்,
இறந்தழுகிப் போகா திருந்து.

'காமம், வெகுளி, மயக்க மிவைமூன்றின்
நாமம் கெடக்கெடும் நோ'யெனவே – சேமக்
கலனெற்றும் வள்ளுவனார் கற்கண்டுச் சொல்லைப்
புலனுற்றுக் கொள்வான், புகழ்!

கோட்டத்தில் குந்திக் குறளை விரித்துரைத்துக்
கூட்டத்தில் வந்தனை கொண்டாலும் – நாட்டத்தில்
வள்ளுவம் வைத்தொழுகான் வாய்ச்சொல் வரையாது
தள்ளியே வைத்தல் தகும்.

சொல்வேசம் போடும் சுயநலமி, சோற்றுக்குப்
பல்வேசம் போடும் படிமத்தான், – கல்வேசம்
ஏழை எளியோரை யேமாற்றும் எல்வேசக்
கோழையுனக் கூற்று கொடிது.

மாசிருக்கத் தக்க மனிதன் மடிதனிலே
காசிருக்க தக்க கனவானாய்த் – தேசிருக்கும்
ஊரிருக்கும் காறும் உலகிலர சாட்சியுடன்
போரிருக்கக் கூறும் புவி!

உளத்தை யொளித்துவைத் துண்மைக்கு மாறாய்
வளத்தை வளர்த்துவோர் வாழ்வில் – புனிதவராய்க்
கோவிலுக்குச் சென்று குவிந்து குழைகின்றார்,
நாவலிக்க நன்றி நவின்று!

சாத்திரத்தைச் சுட்டுச் சதுர்மறையைப் பொய்யாக்கிச்
சூத்திரத்தைக் கண்டு சுகம்பெறார், – சேத்திரத்தில்
கூடிக் குறையிரந்து கொண்டாடல், குற்றத்தை
மூடி மறைக்கும் முறை.

உச்ச வுணர்வுற் றுளத்தூய்மை யுற்றதெனின்,
அச்ச வுணர்வற் றறிவொளிரும், – மெச்சும்
கருத்துருவாய், வாழும் கதியுருவாய்த் தேசம்
திருத்தமுறும், ஊழில் தெளிந்து.

ஆற்ற லெனுமொன் றறிவா றொழுகினகம்
ஏற்ற மடைந்தின்ப மெய்திடலாம்! – சோற்றால்
உடலோம்பி யுள்ள முணர்வோம்ப வுற்றார்க்
கிடலோம்பி என்ன விகந்து!

தன்னை யறிந்து தலைவன்தா னாய்த்தங்கி
அன்னையாய்த் தந்தையா யன்புற்றுப் – பின்னை
யுழுவதற் கன்றி யுதவுதற் கன்றித்
தொழுவதற்கொன் றில்லை, அறிந்து.

## 28. குறிக்கோள்

'உண்மையொன் றல்ல மனத்தை யுயர்த்துகிற
நன்மையொன் றில்லை' யெனத்தெளிந்தான் — கொன்மையென
உன்னதனை யோம்பி, உறவோம்பி ஒத்தாசை
கொள்ளுவது நல்லகுறிக் கோள்.

'அஞ்ஞானம் குன்ற அனைத்தும்நாம் ஆய்ந்தறிதல்
விஞ்ஞான' மென்று விளம்பிடுவார்; — மெய்ஞ்ஞானம்
சாத்மீக மொன்றிச் சமத்வ மதுவொன்றின்
ஆத்மீக மொன்று மகந்து.

'முத்தி'யெனச் சொல்லி முகத்தில் கரிபூசிப்
'பத்தி'யெனச் சொல்லிப் பயில்விப்பர்; — சத்தசத்து
கண்டோர்ந்து காத்துக் கடைப்பிடியார்; கற்கயதுகள்
விண்டோர்ந்து காத்து, விரித்து.

தேகம்தேர்; ஐந்தாம் திகழ்பரிகள்; தீங்கடிவார்
ஆகுமகம்; ஆற்றுப் படுத்துகிற — பாகன்நம்
புத்தியாம்; போற்றிப் புகழுவதி னா ரிந்துசெயும்
சத்தியாம், ஆத்மா சகத்து!

மனமயமாம், மன்னும் மனிதனை மண்ணில்
நிலமுயுமா றன்னத் திகழும் — தனிமையுமாய்
உண்டுயிர்த் தொன்றா உடனுறைவ தோமெ'னவே
முண்டகம் சொல்லும், முறை!

'இந்தஎன் ஆத்மாவே ஈச'னெனும் வேதாந்த
விந்தைக் கருத்து விளக்கமுற — வந்ததுமற்
றோமெனும் ஒற்றை ஒருசொல்; உணர்வேநா
னாமெனும் பற்றை யறிந்து.

அவித்தையி லாழ்ந்தார் அகத்தையறிந் தாளார்
கவித்துவம் கைவந்த தென்றே — செவித்துளைகள்
தாமடைக்கக் கட்டித் தமுக்கடித்து தள்ளுகிறார்,
நாமுடுக்கிக் கொட்டி, நவித்து.

'வேதத்தைக் கற்று விரித்து விளக்கிடினும்
பூதத்தைப் பற்றிப் புகல்வதது; — சாதத்துக்
காவதொரு தந்திரமே; ஆத்மிகமன்' றென்கிறது,
கேனோ வுபநிசத் து!

உன்னத்தி லுண்மை யுளதாயி னாற்றென்ன
உன்னத்தில் தின்மை யுளதாகும்; — 'உன்னத்திற்
குண்மையொன் றன்றி யுறுமுணவே றில்லை'யெனும்
ஒண்மையா லொன்று முயர்வு.

'ஒத்த தறிவா னுயிர்வாழ்வான், மற்றையான்
செத்தாருள் வைக்கப் படு'மென்று — வித்தகன்நம்
வள்ளுவன் சொல்லின் வகையறியா துள்ளவனைத்
தள்ளுகெனச் சொல்லும், தவம்.

ஆற்றற் கரியவொரு ஆன்மீக வாழ்வில்நாம்
போற்றக் கருதல் புகழொன்றே — சாற்றின்
அதுவே அமிர்தம்; அழிவின்மை; ஆயின்
அதுவேநா மாவ தறிந்து.

வால்மீகி பாக்கள் —வனப்பான ராமகதை
ஆன்மீக ராக்கா தனுநம்மைத் — தான்முக
ராக்கி யுருவி வடிவணங்க வைத்தறிவை
நீக்கும், விரவி நிலைத்து!

## 29. சாத்மீகம்

நானாய்த் தனைத்தெய்வ மாக்கும் தகவின்றிக்
கோனாய்த் தனைச்செய்து கொண்டாலும் - தேனாய்
இனிக்கும்தன் வாழ்வைநனி யின்னாத தாக்கித்
தனிக்குதவித் தாழ்வான், தொடர்ந்து.

அன்றே அறிஞர் அறிவித்தார்; அக்கினிகள்
ஒன்றா யுடலில்மூன் றுண்டெனவே - ஒன்றால்
உணவு செரித்தல்; உயிர்காத்த லொன்றால்;
குணம் கூட்ட லொன்றால், குறித்து.

'புகழ்ச்சியுறல், போற்றும் பொருளையுறல், - பொல்லா
இகழ்ச்சியுறல்' என்னுமிம் மூன்றில் - மகிழ்ச்சியுறல்
சாத்மிகம் ராசசம், தாமசம் தானெனவே
ஆத்மிகம் பேசு மறிந்து.

அன்னம் முதலா-யதுவேநம் ஆருயிராய்,
உன்னும் உளமாயுந் துண்மையுமாய்ப் - பன்னுகிற
ஆனந்த மாயதுவே ஆத்மாவு மாயறிந்தால்
தானந்த மாகும் தகவு!

உத்தமனா யிந்த உலகுறை வோனுள்ளம்
சத்துசித் தானந்தம் சார்ந்ததெனின், - நித்தியமாம்
ஆத்மா, ஓம், தெய்வம் அகமதுவே நானென்னும்
சாத்மீக மர்மம், சகத்து.

ஆமனும் கூட உளமுவந்து கொண்டொழுக
ஓமெனும் சொல்லுக் கொருகுறள்பா - வாமெனவே
'வெள்ளத் தனைய மலர்நீட்டம், மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு.

'பிறரை யளச்செய்யும் பேதமை; பேணிப்
பிறர்க்குதவும் பேராண்மை' யென்றிங் - கறிவுறிந்து
கற்றோ ருரைத்த கருத்தகத்தில் வைத்தொழுகான்
உற்றோர்க் குரைத்திடா நோய்.

'சத்தியமே-வெல்லு'மெனச் சாற்று முபநிடத்தின்
புத்தியைப் புல்லிப் புரிந்தொழுகின், - மொத்தமுள
துன்பங்க ளஞ்சித் தொலையத் தொகையாக
இன்பங்க ளெஞ்சு மிகுந்து!

சத்தியத்தைச் சாராச் சழக்கன் சகத்தினிலே
நித்தியத்தைச் சார-நினைக்கின்றான், - புத்தியைப்
பூனைமே லேற்றிப் புறம்போக்கிப் பொய்யுடலை
யானைமே லேற்றி யலைந்து.

கூவி யழைத்தழுது கோவிந்தன் பொன்னடிகள்
ஆவி யழுந்தித் தொழுதிடினும் - பாவியகத்
தாசைவிடா தாகி அரிதில்தான் சேர்த்திருக்கும்
மாசைவிடா தாகும், மனம்.

கத்தி துணையாகும்; காசு துணையாகும்;
புத்தி துணையாகும் போதிலும் - சத்தியத்தை
யுள்ளம் துணையாக்கிக் கொள்ளா தொருதெய்வம்
துன்னினும் கொள்ளான், துணை.

'சாமி'யெனும் சொல்லின் சரியான அர்த்தமது
வோமென் றுணர்ந்தோ ருரைத்தார்மற் - றாமெனவே
சத்தியத்தைச் சார்ந்தொழுகிச் சாமியே நாமாகி
நித்தியத்தில் நிற்க நிலைத்து!

## 30. ஒழுகலாறு

நன்னை யறிந்தொழுகும் கல்வி நவக்கல்வி
அன்னை யறிந்தொழுக லன்னதாம்; —'உன்னுகிற
தெல்லாமும் நல்லதெனின் எய்துவதும் நல்லதெ'ன
நல்லோர் நவில்வர், நயந்து.

'அருள்பற்றும் கல்வி அகம்பற்றி யாற்றாமல்
பொருள்பற்றும் கல்வியே போற்றி — இருள்பற்றிப்
புன்கும் புழுவும்போல் புசித்துறங்கிப் பொன்றிவரெ'ன்
றென்னப் பிறந்தா ரிவர்.

கல்வி கரையற்ற தாயினும் காசினிமேல்
ஒல்வ தறிந்துகற் றோரவே — சொல்வர்;—
புறக்கல்வி போற்றல் புசிப்புக் கதற்குக்
கறக்கல்வி போற்ற லறிவு.

'முகத்தூய்மைக் குண்டு முதன்மை'யெனில் முற்றும்
அகத்தூய்மை தானதற் காதாரம் — இகத்தூய்மைக்
கிவ்விரண்டு மேற்புடைத் தென்றுளம் கொண்டொழுகின்
செவ்வியர்க ளாவோம், சிறந்து.

செல்வியர்தா மாகார், செழித்தோர் சிலரென்றும்
கல்வியரா யாகும் காரணத்தால் — தெவ்வரெனக்
கூடிப் பெருகிக் குடிகெடுக்கும் சூழ்நிலைகள்
நாடிப் பெருகும், நலிந்து.

'வாழ்வினில் வைப்புநிதி வாய்மை'யென அறியார்
தாழ்வினை வைத்துத் தவிக்கின்றார், — ஊழ்வினை
யுற்றோர்ந் தொழிகி லுலகமோர்ந் துய்யுமெனும்
கற்றோர்ந் தொழுகுவோர் சொல்!

'நித்துவத் தாயின் நலிக்குமந்தை சத்தியத்தை
வித்துவத்தில் வைத்து விளக்கோமேல், — 'உத்தமர்கள்
இல்லாத நாடா யிருள்மூடிக் கொல்லு'மெனும்
சொல்லோர்ந் துரைப்பதிச் சொல்.

'சத்தியில் வாது சிவனில்லை' யென்னும்சொல்
புத்தியில் லாதார் புரிந்தொழுகார்; — 'நித்தியமாம்
சத்தியமொன் றல்லாது சாமிவே றில்லை'யென
வித்துவம் சொல்லும் விதி!

உண்மைக்கு மாறா யொழுகா துலங்குறக்
கண்மைக்கு மாறாய்க் கழியாது — திண்மைக்காம்
வன்மை வழுவாது வாழ்பவரை வாழ்த்தியவ்
வொண்மையோர்ந் தோம்பு முலகு.

'பாவம் பலப்பலதான் செய்தாலும் பக்தியொடு
தேவன் திருத்தலம் தேடிப்போய்க் — கவித்
துதிசெய்தால் போதும் தொலைந்து போ'மென்று
சதிசெய்தார் பேதம் சமைத்து.

மெய்வைத்த சொல்லை மெலிவித்து மேதினிமேல்
பொய்வைத்த சொல்லைப் பொலிவித்தார்; — செய்வைத்த
புல்லதுவே நெல்லென்னும் போக்கிலே புராணத்தைக்
கல்லெனவே சொல்லிற் கரந்து!

தன்னிலவில் தம்பி நமயனொடும் பின்னாகிப்
பன்னைப் பணிமுடித்துப் பாதையிலே — கன்னாயன்
முன்னும் மனையோர்ந் துவந்தனராய் வந்தார்தா
மெள்ளியதற் கேற்ப இணைந்து!

## 31. உறையுள்

ஒன்றா, இரண்டா? ஒருநூறு போசனைகள்
என்று மிருந்துகொண் டேயிருக்கும்; — அன்றன்று
செய்வதைச் செவ்வையாய்ச் செய்து முடித்தவந்
துய்வதற் குள்ளதுறை யுள்.

வாசலைக் கண்டு வருவா ரெவர்கண்டு
பாசமும் கொண்டு பழகுவதால், — நேசித்
தெசமானன் வீட்டிலெதிர்கொண்டு நின்று
வசமாயிநா யாட்டிற்று வால்!

பாசமும் பாங்கும் படிந்தமனை பங்கயமாய்
வாசமும் வாய்த்து வனப்புறவே — நேசமது
நீங்காது நெஞ்சில் நிலைத்திடவும் நேர்ந்தின்பம்
வாங்காது மிஞ்சும், வளர்ந்து.

பெற்ற குழந்தைகளைப் பேணி வளர்ப்பதெனக்
கற்ற குணங்களையும் காத்தொழுகி — யுற்ற
தனைத்தும் அறமா யமைந்துவிடின் ஆகும்,
மனைத்தலமே மாயாத் தலம்!

மூத்த மகன்நினைவில், 'முத்தா' எனும்மொழிக்குக்
காத்துத் திறந்த கதவருகில் — பூத்த
முறுவலுற நின்றான் முகந்தொட்டுத் தந்தை
யுறவலர வைத்தான், உவந்து.

'அன்பு கனிந்தொழுகும் ஆர்வப் பரிசமதன்
இன்பத்துக் கில்லை யிணை'யென்பர்; — துன்பம்
அறத்துடைத்தற் குள்ள அமிழ்தா யதுநம்
திறத்துடைத்தா முள்ளந் தெளிந்து!

'நமக்குநிக ரின்றிங்கு நாமேதா' னென்று
தமுக்கறைத லொன்றத் தனயன், — 'சமக்க'வென
வொன்றி யுரைத்தவந் துற்றசிற் றப்பனு
மென்றும்போல் நின்றா னினைந்து.

'பெற்றப்ப' னென்றெதுவும் பேசாளா யுற்றமகள்
'சிற்றப்ப' னென்று சிரித்திடவே — மற்றப்பன்
'உன்னப்பன் நானெ'ன் றுரைத்ததனை யொப்பானாம்
'என்னப்பன் நானெ'ன் றனன்!

'கொல்'லென்றங் குற்றவர்கை கொட்டிச் சிரித்திடவே
மல்லொன்றிச் சற்று மறித்தவனாய் — 'நில்' லென்றே
"அம்மா! வந்' 'தென்னை யழவைக்கா தே'யென்று
சும்மாசொல்" லென்றான், சுதன்.

"வாழும் இளமகவின் வாய்மழலைச் சொல்கேளார்,
'யாழும், குழலும் அமிழ்'தெனும், — தாழிசையும்
இம்மகவின் சொல்லுக் கிணையாகா" தென்றானங்
கம்மாவந் தார்வுற் றணைத்து.

சின்னப்பன் ஈரிரண்டாண் டேற்ற சிறுவனவன்
'என்னப்பன் நா'னென் றியம்பியசொல், — முன்னொப்ப
வேதாந்தம் கூட விரித்து விவரிக்கா
நாதாந்த மான நற்சொல்!

'உறையுமுடல் விட்டுயிர்போ யோரளவு காலம்
இறையுலகு மெட்டியிருந் திங்கு — முறையாய்ப்
பிறக்கவரு' மென்னும் பிழைநீங்கப் பெற்றுச்
சிறக்கவரும் செந்தமிழ்ச் சொல்!

## 32. வேடிக்கை

கல்விக் கடலிற் கண்டெடுத்துக் காட்டாத
நல்லிந்து; — வாழ்வு நலமுறவே — 'செல்வத்துள்
செல்வம் !' எனச் செப்பச் சிறுவன்வாய் சிந்தியசொல்
ஒல்வதென ஒப்பிற் றவம்.

மறுபிறப்புப் பற்றி மறைந்திருந்த மாயம்
அறுபிறப்பில் பெற்ற அறிவா — யுறுதிருப்பம்
பெற்றதவா பற்ற பெருமிதப் பேரொளியை
யுற்றவனை முற்ற வைப்பு !

உள்ளத்தி லோர்ந்த கடவுளோ ரும்வளர்ந்து
கொள்ளத்தான் நேர்ந்து கொடுப்பவனும் — தென்னத்தான்
சொல்லாம வன்று சுவைத்துச் சிரித்தான், மற்
'றெல்லாமும் நன்றெ'ன் றிருந்து.

சிரிப்புற்ற செய்தி செவியுற்றுச் சிந்தை
விருப்புற்றா ரெய்தி விவ — இருப்புற்றுக்
'கல்லாத கல்விலான் கண்டவொரு காட்சியது
பொல்லாத' தென்றான், பொறுத்து !

"பிச்சையெடுத் துண்டு பிழைப்பதே பேறெ'ன்பான்,
கொச்சையினை கொண்டு குடில்தோறும்; — பச்சை
மரத்தடியில் வாழ்வு மலர்ப்படுக்கை கோணி;
கரத்தடியே கழுக்குதவு கள் !

காலைக் கடனைக் கழித்திடவே கற்றாலைச்
சாலைப் புறவெளியைச் சார்ந்தவனும், — மாலைக்காய்ப்
புத்தம் புதிய இசைப் பாடல் புனைந்திடுவான்,
பத்தி ததும்பப் பதித்து.

ஞான முன்னாளும், —ஒன்றையும் கண்கொண்டு
காணாத முன்னித்தல் கைகூப்பி, — ஞானைக்
கவிக் குழைந்து குறையிரந்து கொள்கின்றான்,
தேவனை வென்று, தெரிந்து !

"இருவழியு மில்லாதின் றுள்ளேன்நா வில்லூர்
ஒருவழியு மொழிலா துதால்; — தெருவழியே
காலோயச் சென்று கடுக்கஇனி நில்லாது
பாவியா" னென்று பணிந்து !

'ஞானமே ! இந்த ஒருவரம் தந்துனை
கோணாமல் காத்தல் குறையெ'ன்னக் — 'காணாயே !
வேலூர் வேந்தனது வீட்டில் விருந்தின்று
மாலையுனக்' கென்றுமறு சொல்.

கலிக்குத் தாலாட்டும் கோமானின் குச்சப்பன்,
சாவுக்குச் சாலோட்டிச் சாதிப்பான் — பாலிக்கும்
வேலிக்கா லொன்று விடமாட்டான்; வெள்ளெலியின்
வாழ்க்காய் வாழ்வா னவன்.

"வெள்ளெலிச் சாறும் விரைந்தின் வெலிவளையில்
கொள்முகிற நெல்லைக் குறுணையுற — வள்ளியிலைக்
குற்றி யடுமாறிச் சோறும் குடுகுக்கும்
இற்றைக்குள்" ளென்றான், இரந்து.

காலை யெழுந்து கழனிக்குச் செல்லுங்கால்,
வேலை மெனக்கெட்ட - வேடிக்கை; — மாலையிலும்
நெஞ்சி லிருந்து நினைவுறுத்திற் றி"றென்றான்,
குஞ்சுக 'வோ' யென்னக் குறித்து !

## 33. சூழ்ச்சி

சோற்றுக் குழைத்துச் சுதந்திரம் சூனியமாய்க்
கூற்றுக் கழைப்பும் கொடுக்கின்றார்; — மாற்றுக்குக்
கண்ணிருந்தும் காணாதார், காதிருந்தும் கேளாதார்
எண்ணிருந்தும் எண்ணா திருந்து!

கோவில்கள், சாமி, குரு, கடவுப தேசங்கள்,
ஆவல்கொள் நாம அருச்சனைகள், — காவல்கள் —
எல்லா மிருந்தும் 'இதயத் தமைதி'யென
இல்லா திருந்திறப்ப தேன்?

தன்னை யறியும் தரமிலாக் கல்வியினால்
தொன்மையெனத் தோன்றித் தொலைகின்றோம் — மின்னலை
'மின்ன'லெனச் சொன்னால்நாம் 'மேகக் கடவுளின்
பொன்னுடல்கா ணெ'ன்னும், புவி.

தேசத்தைத் தேராக்கித் தீராச் சுயநலத்தின்
காசொத்த நாராய்க் கயிறாக்கி — நாசத்தை
நோக்கி நகர்த்துவது நூலோ ருணர்ந்திருந்தும்
வாக்கு வலுவற்ற தேன்?

வீட்டை விளக்கும் விடிவெள்ளி யாமுபநிசத்
தேட்டை விளக்கா தெடுத்தொளித்து — நாட்டைவெறும்
பூசை புனைவுமிழாய்ப் புன்மைப் புகலாக்கிக்
காசைக் கவஞ்செய்வ தேன்?

காசுக்குக் கற்பிக்கும் கண்ணற்ற கல்வியினால்,
மாசுக்குள் வாழ்மக்கள் மாய்ந்திடினும், — 'யோசிக்கும்
நேரம்சா ராது நிற்கிறதி'; தெ'ன்பார்கொல்
ஒருமனு லோரா தவர்?

கள்வன், கயவன், கருணையிலாக் காதகனும்
பள்ளயம் வைத்துப் பணங்கொட்டிக் — கொள்ளுகிற
தெய்வம் சிலையெனில் தேசத்தில் மக்கள்வாழ்
வெய்துவது மெவ்வா றினி?

தேவியவில் மன்பதைகள் தென்றலிங்க ளின்பமுறத்
தாலுவு மன்பிழையத் தண்மதிபோல் — ஞான
நலம்பயக்கும் கல்வி நயவாதம் நாடு
பலம்பயப்ப தில்லை படித்து.

முந்தமிழைக் கற்று முறையறியா முன்னோர்தம்
சிந்தமொழி யற்றுச் சிறந்தாழ்ந்து — தொந்துகளாய்ப்
பந்துஅ நான்கு பரர்பாரை யாண்டதான்
பந்தவதா ரத்தின் பயன்.

அன்மையிலு மாராய்ந் தறிந்து ரறிவித்தார்:—
'உண்மையே வாழ்வி னுயிர்ப்பென்றும் — வன்மையே
வன்மைக்குக் காப்பெ'ன்றும் காந்திக் கமழ்ந்தபுகழ்
தின்மையில் தெய்வம் தெளிந்து.

ஒனானைக் கும்பிட் டொருகுருடன் வாழ்ந்ததுபோல்
காணாத தெய்வக் கதைகற்று —- வீணானோம்,
உண்மை யொதுக்கி யுடலோம்பி யுள்ளத்தில்
வன்மைவளர்த் தாமல் வசித்து . . ."

"செய்வ தறிந்ததனைச் செம்மித்துச் செல்வம்சேர்த்
துய்வ துணர்த்தி யுலகாளும் — தெய்வத்
தமயனும், தம்பியும் தவஞ்செய் தின்றும்
சமயமிது" வென்றான், சதி!

## 34. ஒன்றிப்பு

காணாத காணும் கவின்மிக்க காட்சிகளைப்
பேசாத பேசிப் பெருமிதமாய்க் - கோணாது
ஒன்றுறவு காட்டிக் களிப்பிக்கக் காத்தனகாண்,
மன்றுறவு கூட்டும் மலை!

மானும், மயில், முயலும் மல்கி மகிழ்ந்திடவே
வானமுதாய் நொய்யல் வளம்பெருக்கும் - கானமுறை
கோழி, புறா, கொக்கு, குயில்கிளியென் றின்னஇவை
வாழி! யிவன் நோக்கில், வரைந்து.

மாட்டுத் தொழுவம் மறைவிடமாய்ச் சிற்பங்கள்
தீட்டும் கருவிகளைத் தேர்ந்தெடுத்து - நாட்டமுறத்
தேக்குமரங் கொண்டு நினைக்கும் கலைபிணையை
யாக்கற் கமைத்தா னகம்!

சிற்பத்தின் மேல்வைத்த சிந்தை சிதறாமல்
உற்பத்தி செய்தற் குறுதுணையாய்ப் - பொற்பொத்தாங்
கொன்றினா வுள்ளங்க ளுற்ற வுருவுளத்தில்
நின்றது நீங் காமல் நிலைத்து!

நேரம்போம் போதும் நினைவுபோ காதநிலை;
பாரும்பார்த் தொன்றிப் பரவசமாய்த் - தீரும்போல்
ஏறுபிணை காத லிலங்கு மெழிலிணைந்த
வாறுபுனைந் தாதல் வடிவு!

தோழமையுற் றத்தொன்ற தொட்டுமிவை கானகத்தில்
வாழுமியல் பொத்து வயணமொடும் - ஏழமைய
வுள்ளத் துணர்வொன்றி யொன்றா வுடலொன்றிக்
கொள்ள வுணர்த்தல் குறிப்பு!

தோற்றப் பொலிவில் தொடங்கித் தொடர்காத
லேற்றப் பொலிவு மிசைந்திடவே - போற்றும்
நயப்பாக்க மாய்ப்பெய்து நம்முன்னத் தோன்றி
வியப்பாக்கச் செய்த விருந்து!

உள்ளத்தி லெவ்வா றதிந்ததுவோ அவ்வாறே
பன்னம் படுகையில் பார்ப்பதுபோல் - கொள்ளவே
கல்விழிப் பார்வையொடு காது, கண், கால், கொம்பு
வின்ன வியலா விதம்!

கற்பனையைக் கண்காணச் செய்யும் கலைஞனுக்
கற்பொழுதும் எற்பொழுதே யாகுங்கொல்! - வெற்பாம்
அலையாசைக் குண்டுகரை; ஆராப்பே ரார்வக்
கலையாசைக் குண்டோ கரை?

அற்பத்தி லாசை யடங்கா அருங்கலைஞன்
உற்பத்தி செய்யு மொருவடிவு - கற்பித்தாங்
குற்றவரும் நோக்கி வியப்புள்ள முற்றதெனில்
மற்றதுசா வற்ற மதிப்பு!

செய்யு மெதுவொன்றும் செய்பவனை யேற்பித்தா
லய்யு முலகை யுவப்பிக்கும்; - மெய்யாய்க்
கலையின் வரலாறே காலத்தை வெல்லும்
நிலையில் நிறுத்தல் நெறி!

செய்து முடித்துத்தன் சிந்தைகளி கூர்ந்ததன்பின்
பெய்து முடித்தமுகில் பெற்றிந்தாய் - எய்திக்
கழனி, கவின்கானல் காட்டாறும் காணப்
பொழுதுவந்து போக்கினான், போய்!

## 35. சிற்பச் சிறப்பு

வல்லவன்-பாநுமதி வந்ததும் தன்மகனைப்
புல்லிப் புணைந்து புளகம்போர்த்-தொல்லவே
பொங்கு முவகையொடு போய்ப்புகுந்தார், பூவையர்.தம்
கொங்குலவும் கொல்லைப் புறம்!

அழுந்தமெய் புல்லி, யகம்புல்லி யார்வம்
பொழிந்துகலை யொன்றிப் பொலிதல்-கொழுந்தனின்
கைத்திறலில் கண்டார் கலைத்திறனைக் கண்களதன்
மெய்த்திறனை யுண்டு மகிழ்ந்து!

கூர்ந்தமதி கொண்டவன் கோமதிதான்; கூர்ந்துற்றுப்
பார்த்தறிந்து கொண்டவள் பாநுமதி! -'நேர்த்தி'யென
உன்னிடும் போதுண்டு பண்ணினோ ருள்ளத்தில்
மன்னிடும் தோது மடுத்து.

"'கற்பித்த கல்வியே கைகொடுத்துக் காக்கு'மெனச்
சிற்பத்தில் தீட்டித்தன் சிந்தைநிலை-சொற்பத்தில்
காட்டினான், தம்பி; கடினத்தை நாமினிமேல்
கூட்டினோ மாக்கல் குறிப்பு!.."

உற்ற வயதுக் குரிய வுணர்வனைத்தும்
மற்றவர்க் குய்த்துணர்த்தும் மாயமான், -சற்றுமினிக்
காலம் கடத்தல் கருதாது கல்யாணக்
கோலங் கொடுத்தல் குணம்!.."

"உள்ளத் துள்ள துரைப்பதோ குறன்றே;
உள்ளத் துள்ளதே யுண்மையெனில் -என்னுளம்மற்
றேற்றுக்கொள் ளாதெ"ன்றா னென்றுமே தன்னுளத்தை
மாற்றிக்கொள் ளாதயட மான்!

"உள்ளத்தி யுள்ள யுரைத்தேன்;" உரைத்ததனைக்
கொள்ளத்தான் வேண்டுமெனக் கோரேன்நான்; -தெள்ளத்
தெளிந்தார்க்குத் தேறார் தெரிவித்தல், தெள்ளப்
பிளிந்தார்தற் கெ"ன்றான் பிடி.

"காதலகத் தொன்றல் கருதுவதற் காவதனு
சாதலகத் தொன்றல் சரியன்று; -போதும்,
நமக்குள் ளிருத்துவோம், நம்மகத்துச் செய்தி
உமிக்காரி யொப்ப ஒளித்து!

"சிந்தித்துப் பேசிச் செயல்படார்க் கென்றேனும்
நிந்தித்துப் பேசும் நிலைநேரும்; -சொந்தத்தில்
பாராட்டல் நந்தப் பரிவிழக்கச் செய்யும்;கண்
நீரீட்டிச் சிந்தும், நிலத்து!"

பக்காப் படுசுட்டி பாநுமதி யாயினுமென்?
அக்காளின் அன்புக் கடக்கம்தான்; -சிக்கியபின்
காட்டானை காட்டும் கடுமை கழிந்திடவே
நாட்டானை காட்டும், நயம்!

"கான்கோழி பாடிக் களிக்கிறதாம்; காத்திருந்த
வான்கோழி யாடிக் களிக்கிறதாம்! -கோன்கோழி,
'கொக்கரைக் கோ'வெனக் கூவும் கேளாதாம்,
அக்கரையில் லாத அகத்து!"

'படுகெட்டிக் காரி பதம்பார்ப்பா' னென்று
முடிகொட்டு மாறு முவைவன்-நொடிகொட்டித்
தீர்த்தவனாய் வந்து திடுக்கிடவே நிற்பதனைப்
பார்த்தனப் பாவையர் கண்!

## 36. பரவசம்

தன்னை மறந்தான்; தனைத்தெய்வ மாய்க்கொண்ட
பொன்னை மறந்தான்; புனைவொன்றி—மின்னைக்
கடிந்த இடைக் காரிகையும் கண்மறையக் கண்டான்,
படிந்தமட மாக்கள் பதிவு!

"தம்பியென் றால்தம்பி தான்; தம்பி கைத்திறனைக்
கம்புவியி லொப்பொன் றறியேநான்;—நம்புங்கள்
மங்கைகளே! காண்க, கலை-மாண்களெழில்,—மாக்கலைஞன்
செங்கைகளே பூண்க, சிறப்பு!"

"தம்பியகப் பாங்கு தமயனே பாராட்டற்
கம்புவியி லொப்பொன் றறியென்நான்,—நம்புங்கள்;
நன்மான்கள் தந்தநம் நம்பிக்கோர் நங்கைதனைச்
சன்மானம் தந்தால் சரி!"

"என்னடி சொன்னாய் இளங்கிளியே! என்றெனை
உன்னடீ! உன்னி யுரையடீ!"—என்னஅவள்
"காதல்நோய் சிற்பத்தில் காட்டுவாள் கண்ணுக்கு
மாதல்ல தில்லை மருந்து!"

"கொலைஞர்கள் னோட்டம் கொடும்பகைமேல்; கூடின்
வலைஞர்கள் னோட்டம் வலைமேல்!—கலைஞர்கள்
வைப்பு வனப்பின்மேல், வாயாடிப் பெண்ணின்கண்
வைப்பு வழுவை வரைந்து!.."

"'சட்டியிலே அட்டதுதான் வட்டிலிலே இட்டதெனப்
பட்டியிலே வுள்ளோர் பறையடிக்கும்—'கெட்டதெ'னத்
தன்னுவ ராயின், தவறாகும்; தாமாரால்
என்னவும் நேரு மிருந்து!

'முன்னங்கி யொத்திருக்கும் முத்தங்கி' யென்பவர்க்
குன்னதைச் சொன்னா லுடலெரிச்சல்—கொன்று'மெனத்
தென்னைத் தெளிந்தோர்சொல் தேர்; திகைத்தென்சொல்
தன்னுவது சாலத் தவறு!.."

மூத்தான் முகஞ்சுழித்தும் மூவா முதல்காளி
யாத்தா னெனச்சொற்க ளான்வான்மேல்—கோத்தானைக்
கண்டு சிரித்தவளைக் கண்டுசிரித் "தென்சொல்லில்
உண்டுண்மை" யென்றா ருரைத்து!

"உயிருடைய தென்ற வுணர்வூட்டும் சிற்பம்
'செயிருடைய' தென்றெவரும் செப்பார்;—அயரடையக்
காரணமே இல்லை; கருத்தி லிருந்தகலாப்
பூரணமாயப் புல்லும் புகழ்!

கலையின் கவினுயிர்ப்பு கண்ணுறவே காட்டும்
நிலையில்நம் நெஞ்சம் நெகிழ்ந்தால்—அலையலையாய்
மக்களெல்லாம் வந்து மனமுவந்து கண்டுசெலத்
தக்கதெனச் சாற்றத் தகும்!

சிற்பமும், சித்திரமும், சிந்தை தனைக்கவரும்
கற்பனைக் காட்சிக் கவிதைகளும்—பொற்பொதுக்
காலத்தை வென்று களிப்பிக்கும், நல்லகலை
மூலத்தை யொன்றி முடிந்து!"

ஒன்றாக் குணமுடைய கோமதியின் கூற்றுவத்தி
லொன்றாயுற் றுண்மை புணர்த்திடவே—நன்றோர்ந்த
பாலுமதி சோமு பரவசமாய்ப் பாங்குபட
வானமுதே யாயின் வழக்கு!

## 37. மைத்துனன்

அற்பர் பெருகி, அறிஞ ரருகியகக்
கற்பும் கருகிக் கழிசடையாய்ப் —பொற்பழிந்தால்
தற்பெருமை பேச்சாய்த் தருமம் பெருமூச்சா
யிற்பெருமை யேச்சா மிகத்து!

மைத்துனனாம் மான்பற்ற மன்னன் மறவன்கை
வைத்தனுப்பித் தந்த வரவழைப்பு —கைத்ததுகாண்,
'சோமப்பன் நாளைச் சுடர்சொரு முன்வருக
தாமதம்செய் யாமல், தனித்து!'

தந்தஇச் செய்தி தரப்பெற்றுக் கொண்டுமே
சிந்தைநோ யெய்திச் சிலையானான்; —நொந்தவனைக்
கூலி யழைத்துக் குணப்படுத்து வானன்றோ
ஆவ தறிந்தொழுகு வான்?

'மன்ன'னென மண்ணில் மறையோர்சூழ்ந் துள்ளஇவன்
'இன்ன'லெனப் பன்னும் இடக்கழியன் —'சின்னத்
தனமென்ப தெல்லாமும் தன்ன'தெனப் பன்னும்
கனமென்ப தில்லாக் கசடு!

'சூதாட்ட மாடான் சுகப்படா' னென்னும்சொல்
நாட்டு மென்று தெரிந்திருந்தும் —காணாட்டிச்
சீமாக்க ளைச்சேர்ந்துச் சீட்டாடு கின்றஇவன்
பூமான், நாம் போற்றும் புலிக்கு!

'பொய்புகல அஞ்சின் பொருள்புகவும் அஞ்சு'மென
மெய்புகல அஞ்சி மிழற்றிடுவான்; —மொய்புகல்போல்
ஆயிரமை யாயிரமா யன்றன்று கைமாற்று
நேயரிடம் நீட்டுவான், கை!

காலையில் கள்ளும் கறியும்; கடும்பகலில்
நாலையும் கற்றோன் நளபாகம்; —மாலையில்
சீமைச்சா ராயம், சிறுபுறா வூன்வகைகள்
சாமியின் சாப்பா டிது!

பரிசுச் சுகமாய்ப் பகட்டுமொழிப் பாழும்
கரிசனக் காட்சிக் கவினாய்த் —தரிசிக்கும்
ஆரு ரணங்கின் அடிவருடும் ஆண்டகைக்குப்
பாரோரைக் காத்தல் பணி!

தீதன்றி நன்றொன்று தேராதான், தேர்ந்தெடுத்த
மாதொன்றி நின்றும் மரித்தான்போல் —பாதகனின்
மெய்மறந்து தூங்கும்; விழுக்கி யவனிதயம்
பொய்மறந்து நீங்கும், புரிந்து!

'மனிதரெ'ன, தானிருக்கும் மண்ணின்மேல் மன்னும்
'புனிதனெனத் தானெ'ன்னும் புல்லன் —கனவிதெனின்
'மன்னன் வழிபாடே மக்கள் வழிபாடெ'ன்
றுன்னி யழிவோ ருளர்!

நொந்தவன் நெஞ்சு நொறுங்கவே நோய்கூட்டித்
தந்தனுப்பும் வஞ்சத் தறுதலையன் —சொந்தமென
ஒன்றிருந்தும் ஒன்றா உடன்பிறப்புக் காயொருகால்
சென்றுவர ஒன்றும் செயல்!

உடைவீர ராகி யுரையுமொரு கூறு
கடைவீரர் காவல் கயவன் —குடைவீரன்
'வட்ட'மென மண்ணு வையத்தில் கையகலம்
மட்டுமில லாக்கின்ற மன்!

## 38. புழுக்கம்

'எழியற்ற மாவை எருமையேற் றுக்குப்
பழியற்றப் பற்றி யளித்த—விழியற்றோன்;'
என்றுநொந் தற்றா ரிகழ்ந்த—சொல் லின்றும்மற்
றொன்றிநொந் தற்ற துளம்!

'கூடப் பிறந்த குலக்கொடியிக் கோமானைப்
பேடிப் பயலுக்குப் பெண்டாட்டி;'—ஓடிப்போய்க்
கன்னத்தில் பற்கள் கழன்றதிரு மாறறையா
திண்ணுயிலைத் துன்னதென் கை.

'பச்சைப் பசுங்கிளியைப் பாங்காய்ப் பழம்,கொட்டை
யிச்சித்துத் தின்னும் இளமையிலே—துச்சனிடம்
கன்னியை வைத்துக் கலங்கப் பிடித்தளித்தான்
அன்னை'யென் றென்னிற் றயல்!

வாழும் குடிமகளை வாழ்த்தி வரவழைத்துக்
கோழிக் கறியால் குடிபழக்கிப்—பாழுக்குக்
காசைக் கறந்தபின் காட்டுநா யாய்விரட்டும்
வேசைக்கொப் பான விலங்கு!

துள்ளி விளையாடித் தூய பசும் புல்லார்ந்து
பள்ளச் சுனைநீர் பருகுமெழில்—புள்ளிமான்
கூட்டத்தில் பாயும் குறுங்கால், நகம்பல்நீள்
வேட்டத்து வெங்கை யிவன்!

காமாந்த காரன்; கடைத்தேற்றம் காணாதான்,
சீமான்தா னாயின் சிதையும்சீர்;—ஏமாந்து
சேமம் குறையும்; சிறுமை மிகப்பெருகிச்
சாமம் பரப்பும், சகம்!

'அலையெழுத் தெ'ன்ன அறிவறியார் சொன்ன
தலையெழுத் தென்னும்சொல் தாங்கி—சிலையெழுத்தாய்
நேர்குலைந்து தீர்ந்தார் நெடுங்கணக்கி லின்றிலனும்
பேர்குலைந்து சேர்ந்தான், பிறந்து!

'விடியாத வெள்ளி விரும்பாத கஞ்சம்;
படியாத பாவிகைப் பற்ற—முடியாதெ'ன்
றெண்ணி யியம்பினா னென்தங்கை; எற்குமெனப்
பண்ணிவேன், நானே பணிந்து!

முட்டாளும் செய்ய முடியாத குற்றத்தைக்
கட்டாய மாய்ச்செய்து காட்டிவன்,—'கெட்டாலும்
மேன்மக்கள் மேன்மக்க ளே'யென்று மெல்லியலாள்,
தான்மிக்க ளானாள், தணிந்து!

தரும மறிந்தான்; தலைதாழ்த்தித் தாங்கி
வருமம் வளர்த்தாது வாழும்—கருமத்தில்
கல்லாகிச் சென்றான்—கவலையொடும், கன்றுருகிப்
புல்லாகி நின்றேன், புலன்!

ஒற்றைக் கொழுமுந்தை யுண்டா யுதித்ததுவும்
மற்றை மறுநாளே மாய்ந்தது;பின்,—இற்றைவரை
காயாப் பசுங்கொடியாய்க் காலம் கழிக்கின்றாள்,
'தாயாகே'வென்று தனித்து.

'தந்தையே பிள்ளை'யெனத் தாயத்தார் தாழ்த்திடவே
நொந்தார்க்கு மேலுமொரு நோயாய்நான்—சொந்தத்தில்
பிள்ளையைப் பெற்றெடுத்தல் பேறாநோ யாமெ'னவே
விள்ளவும் கற்றாள், வெறுத்து!

## 39. ஊர்மன்றம்

'கோனான வெய்யோன் கொடியசினம் கொண்டதனால்
வானம் வியர்த்து வடியுதே'னச் -சோலைமழைத்
தூறதனுள் வாச்சோமு துன்னினா னூர்மன்றம்,
ஆறுதலைக் காண அகத்து.

என்று மொருசிலர்மற் றேறுமா றின்றியிருந்
தொன்றியுரை யாடுமிடம் ஊர்மன்றம்; -நன்றன்றிச்
சண்டை வழக்கு, -சகலமும் சொல்வடிவம்
கொண்டு முழக்கும், குடில்!

பள்ளி பயிலும் பருவத்துப் பிள்ளைகளின்
உள்ள முவப்பிக்க வுள்ளவிடம் -தெள்ளி
நலன்பொலனை நாடி நவிலுமிடம்; நல்லோர்
புலன்நலனைத் தேடும் புகல்!

கோலி விளையாட்டுக் கூச்சலொடு கோமாளிக்
கேலி விளையாட்டுக் கெக்கலிகள், -கூலிகளாய்
வேலைக்கு வந்தயலார் வேசாறும் வீடெனவே
மாலைக்கு மாறும், மறித்து!

கொதிப்புக் குரியசொல், கோல்மால்பொய், குற்றம்
பதிப்புக் குரியதெனப் பட்டால், -மதிப்புக்
குரியவர்க ளோர வுரைக்கவுணர்ந் துள்ளிப்
புரியவைப் பார்கள், புகன்று.

உள்ளத்தி லுண்மை யொளிரா தொழுகுபவர்
கொள்ளத்தான் பொய்ம்மை குலவுதெனத் -தெள்ளத்
தெளிந்தோர் தெரிவிப்பர் செந்தமிழில், தேனைப்
பிளிந்தோர் புரையப் பிரித்து.

நேருக்கு நேசமாய் நித்தமும் சத்தியத்தைச்
சீருக்குப் பேசிச் செயலாற்றப் -பாருக்குள்
ஊருக் கொருவ ருளத்தொளிசொல் லாயொலித்தால்
போருக் குயிர்போம், புலந்து.

சோமுவின் சொற்கள் சுகம்தருமென் றுற்றோர்ந்து
பூமியில் கற்றோர் புகழ்ந்திடவே -நேமமெனக்
காதாரக் கேட்பார்போய்க் கண்ணாரக் காண்பார், மெய்
சேதார மின்றிச் சிரித்து!

மன்னனைக் காண மறுநாள்தான் செல்லுவதைத்
தன்னிய நண்பர்க்குத் தானுரைத்தல் -நன்னயமென்
றெண்ணினா னன்றி இதயத்தில் வேறெதுவும்
கண்ணினா னன்று கணித்து.

இன்பமென என்னும்நா ளெய்திடினும், ஏலாத
துன்பமென என்னும்நாள் தோன்றிடினும -அன்புமனம்
ஆதவனைக் கண்ட அரவிந்த மாய்மலரும்
மாதவனைக் கண்டான், மகிழ்ந்து.

குளமுவக்கும் நீர்கொண்ட போதும், கழனி
களமுவக்கும் நெல்கண்ட போதும் -உளமுவக்கக்
கொண்டவர் போலுமது போலாதேல் கொண்டதனை
யுண்டவர் போலு முவப்பு!

பொன்னைப்போற்றுப் பொலிந்து புகழெய்தித்
தன்னைப்போல் மற்றவரைத் தானெண்ணி -மின்னைப்போல்
அஞ்ஞானம் நீக்குவோ ராவார்; மற் றானார்காண்
விஞ்ஞான நோக்கில் விளக்கு!

## 40. நட்புரிமை

'கண்டு களிக்கும்தன் காதலனைக் கண்டு,தனை
யுண்டு களிக்க வுதவுகிற—பெண்டெ'னவே
வண்டு வரவும் வதனம் மலர்ந்ததவள்
தண்டா மரைக்கும் தகும்!

'தீதனைச் செய்யத் தெரியாது, தேவைக்காம்
போததனைப் பொய்த்தல் புரியாது—மேதகைய
மாதவன், சோமன் மலர்மணம் போல்வரெ'னும்,
ஓதுவன ஓதினா ரூர்!

நல்லோ ருளமொன்றி நண்பரா வாராயின்
'வல்லோ ருளரெ'ன்ற வைப்பினில்—பொல்லார்
வளைக்குள்ளே மூசிகமாய் வம்புவழக் கின்றித்
திளைக்குமூர், நேசம் திகழ்ந்து.

'நல்லோர்க ளில்லாத நாடே நரக'மெனச்
சொல்லோர்ந்த எல்லாரும் சொல்விடுவர்;—நெல்லும்நீர்
காணாது, சோகம் கலந்துவிடும்; காடுகவின்
பூணாது, மேகம், புலந்து!

'ஏது'வெனக்கொண் டிதயத்தில் வைத்துள்ள
மாதவனைக் கண்டு மகிழ்ந்தவனாய்ச்—"சாதுவென
நீதி நிலையறிந்து நிற்பவனே! நின்னாலென்
போதுநல மெய்தும் பொலிந்து!.."

"ஆற்றல்சால் புன்னோ ரகிலத் துளரெனினும்,
'போற்றல்சால் புள்ள புனித'னெனச்—சாற்றற்
கொருவன்நீ! உன்னை யுறுதுணையாய்க் கொண்டு
மருவியதென் வாழ்வில் மணம்!

நெல்லிக் கனிக்கு நிகர்மன்நான்; நீயென்னை
அல்லிருள் நீக்கும் அகலாக்கி—ஒல்லும்
திரியென்னெய் நீயாய்த் திகழுமொளி தேங்க
எரியுண்ணச் செய்தா யெழில்!

'சத்தியமே போற்றுகிற சாமி'யெனச் சாற்றியதென்
புத்தியுள மேற்றிப் புகழ்பெற்ற—உத்தமனாம்
சோமனைச் சுற்றிச் சுடருமொரு நாள்மீன்நான்
பூமியில்மற்" றென்றான், புகழ்ந்து!

"நாடுநலி வெய்திற்று நண்பனே! நாம்பட்ட
பாடுபய னெய்தாது பண்பறவே—ஏடுகளில்
பொய்ம்மையைப் போற்றிப் புகழ்பாடிப் போதிப்பர்,
மெய்ம்மையைத் தூற்றி மெலித்து.

உண்மை யுணரா ருளத்தி லொளிகுன்றித்
தின்மை திணரத் திகைத்தவராய்—மண்மேல்
வளம்பற்றி வாழ்வார் வறட்டுவாய்க் கூச்சல்
களிம்புற்ற வாளின் கதை!

ஒழுக்கத்தை யோம்பி யொழுகாதா ருள்ளம்
பழக்கத்தை யோம்பிப் பதன்கெட்—டிழுக்கத்தால்
புண்ணாய்ப் புலம்புகிறான்; புத்தமுத வாழ்விழந்து
கண்ணீர் அலம்பக் கலுழ்ந்து!

'சத்தியம், ஞானம், அனந்தம் பிரம்மமெ'னும்
புத்தமுத முண்ட புனிதனே!—சித்தமதில்
உன்ன வுரைத்தினிநா னூருக்குப் போய்வருவேன்,
புன்னைநாட் காலைப் பொழுது!"

# 3. சுதந்திரம்

## 41. மாண்பு

"தன்னை யறியாதான், தன்னாசைக் காளான
மன்னன் மறந்து மதித்தழைத்தான்;—என்னை
விருந்தாளி யாக விரைந்துவரு மாறாய்த்
திருந்தாளி யாகித் தெளிந்து!

பேணார்க்குப் பின்னை பிறந்தென்ன? பேரழகு
காணார்க்குக் கின்னை கரந்தென்ன?—மாணார்க்கின்
காட்சி யமைந்தும் அறமமையா தாள்வதனால்,
மாட்சி யமையாது மண்.

பசியாகி நொந்த பறவையைப் பார்த்துக்
'குசியாகி வந்து குழுமி வசி'யெனவே
காயாய்க் கனியாய்க் கருணையொடு காத்தளித்துத்
தாயாகித் தாங்கும் தரு!

சோலைக் குயில்வாழ்த்தச் சொக்கப்பொன் னொக்கும்புன்
மாலைக் கதிரோன் மலைமறைந்து—காலை
கடுகிவரல் போலும்நாள் காவலனைக் கண்டு
முடுகிவரல் சாலும் முறை!"

ஏதமொன் றில்லா விதயத் தியல்பெல்லாம்
மாதவனைப் புல்லி மகிழ்விக்க,—"நீதியிதை
யாற்ற லறமாகும்; ஆற்றா திருந்தால்பின்
ஊற்றலறு" மென்றான், தொகுத்து.

ஓதுவன வோதி யுணர்ந்தோ ருரைத்தகலச்
'சாது'வெனும் மேதை சமர்த்தறிந்த—மாதவனும்,
உள்ளி-யுவந்தான்; உடல்புளக முற்றுளரப்
பண்ணவும் செய்தான், பரிந்து!

"புனிதன் புனிதனெனப் போற்றிப் புசிக்கும்
மனிதனிவன் மாண்பு மகத்தாம்!—பனியிலும்
வெம்மை விளைவிப்பான்; வெம்மையிலும் தண்மையின்
செம்மையினை வைப்பான், சிறந்து.

'வானி லொளிருமிள வண்ணப் பிறை'யென்ன
வூனமில் லாதா ர் ஒளிர்விப்பான்—ஞானியிவன்
கால்பட்ட மண்ணும் கமழும்; கமழும்மெய்
மேல்பட்ட விண்ணும், மிகுந்து!

உச்சி யுருப்பத்தி லுள்ளமுவப் பிக்கவரும்
மெச்சுமிளந் தென்றலாய் மீளா ரிவான்,—அச்சம்
அணுவளவு மில்லான்; அறிவதறிந் தாள்வான்,
துணிவுளம் கொள்ளத் தொடுத்து!

பூஞ்சோலை போலப் புலனின்பம் பூப்பிப்பான்,
மாஞ்சோலை போல மகிழ்விப்பான்;—ஒஞ்சோலை
மீட்டாருக் கெல்லா மிதயமிக் கச்செய்வான்,
கெட்டார்க்குக் கேளா யிவன்!

வாழ்வை யமைத்தான், வாலிய வாயில்லூர்
தாழ்வைத் தவிர்த்தான்;தவசியென—வீழ்வை
விரட்டினான், வீரம் விளைத்துத்தன் வெற்றி
திரட்டினான், தீரத் தெளிந்து!

கண்ணைக் கவர்வான் கமலமாய்க் காதுகளைப்
பண்ணாய்ப் பரவசம் பண்ணிடுவான்;—புண்ணுக்கு
மாமருந்து மாவான்; 'மனமாட்சி மெய்திமகிழ்ந்
தோமெ'னவே கூறுமில் லூர்!"

# 42. நிலைவலைகள்

பண்ணிய பாவம், பரிகாரம் பண்ணியபின்
புண்ணியர்க ளாகும் புதுமையது—நண்ணவே
கோவிலைக் கட்டிக் கொடுத்தாராம், கோமானும்
ஆவலைக் கொட்டி யகத்து!

பாவத்தைப் பற்றிப் பயமின்றிப் பக்தியொடும்
சேவித்த பற்றுச் சிலகணங்கள்—நாவொத்துப்
பாடிப் பரவிப் பகவதியே பன்னலமும்
தேடித் தருமாம் தினம்!

கோடு கிழிக்கத் தெரியாத கோமாளி
நாடு கொழிக்கும் நலனறியான்;—காடு
கடுக்கவே செல்வான், கவுதாரி, காடையைப்
பிடிக்கவே கொல்வான், பிணித்து.

அரசி னொழுக்க மறியா வரசனுமாய்
முரசு முழக்குகிற மூடன்—விரசமெனப்
பட்டும் திருந்தான், பழக்கத்தால் பாழாவான்;
கெட்டும் பிரிந்தான், கிளை!

பண்டமிடாப் பாத்திரத்தில், பாவையாய்ப் பால்சோற்றை
உண்டு முடிப்பதுபோ லுண்டாக்கில்—கொண்டபசி
ஆறுவது முண்டோ? அறிவறிந்து கூறுஞ்சொல்
ஏறுவது முண்டோ செவிக்கு?

உள்ளங்கை நெய்யை யொழுக்கிப் புறங்கையை
எள்ளவே நக்கு மிழுக்கனிவன்—'தொள்ள'வெனக்
கொள்ளுவது கொள்ளான்;-குணமறியான், சுக்குரலில்
ஒள்ளியது கொள்ளா துயர்வு.

தன்முகத் துள்ளதைத் தான்காணான், தாம்காம
"உன்முகத் துள்ள தழுக்கெ'ன்பான்;—'என்முகத்தை
நான்கழுவிக் கொள்ளாத நாளில்லை', யென்பேனேல்
கான்கழுகாய் வீழ்வான், கடுத்து!

'காட்டான் கடித்தால் கலங்கிடுவா' னென்றெண்ணி
நாட்டான் நடித்து நகர்ந்திடுவான்,—கோட்டான்
பகல்வரவு கோலப் பயப்பட்டுப் பம்மிப்
புகல்விரவல் போலும், புகுந்து!

'ஆடிப் பருவமழை யற்றதெனின், ஆலயத்தில்
கூடிப் பகவதியைக் கொண்டாடின்—நீடாது
மூடி முகில்மாதம் மும்மாரி பெய்யு'மெனும்
பீடையிவன், நாட்டுப் பிணி!

விண்ணெலாம் தோற்றி விளக்கு மிளம்பிறையை
மண்ணெலாம் போற்றி மகிழ்ந்திடவே—கண்ணிலான்
காட்டிக் கழறலைக் காணாதான் கற்சிலையைக்
காட்டிக் 'கடவு' ளெனல்!

பூசைநெறி யாகா தறிவுநெறி யாயொழுகி
மாசையறச் செய்து மகத்தாகிப்—பூசை
புறத்தெய்வம் போற்றல் புரியாது, பூப்போ
லறத்தெய்வ மாற்ற லழகு!

'மூட வரசாண்டு முன்னுக்கு வந்தவொரு
நாடுண் டெனநவிலும் நாவுண்டோ?—பாவுண்டோ
பாடாகிப் பட்டதெலாம் பாழாகிப் பார்முழுதும்
காடாயிற்' றென்னும், கதை!

# 43. புறப்பாடு

'அமிழ்ததனை யாராதா ரெல்லை, அருமைத்
தமிழ்திறனை யோராது தாழ்ந்தார்; கமழ்தருநன்
னாள்முகத் தொன்றி நழுவலி நகராதிங்
கான்மிகும் குன்றி யகத்து.

'சாப்பாடே வாழ்வெ'ன்று சாற்றுகிற ஊர்களிலே
குப்பாடும் வாழக் குடிகொள்ளும்; —எப்போது
தீராத துன்பம்; திகைப்பு, தெருச்சண்டை
பேராத பிள்ளைப் பிணி.

'எதிராளி யாரா லெவெ'ன் றியம்பாப்
புதிராளி யானோன் புரவி, —கதிராரும்
வானமும் தாழ்ந்து வழியலதன் காலொலியைக்
'கானமெ'ன வாழ்த்தும், களித்து.

மன்னர் மனங்கவரும் மாண்தகுசீர் மாறாத
நன்னர் நலியும் நயப்பித்துத் —அன்னியுளம்
போற்றவே நோற்றுப் பொலிவித்தான், போகவர
ஆற்றுமதை யாற்ற லறிந்து!

தோற்றப் பொலிவே துணையாகும்; தூயவுட
லேற்றப் பொலிவோ டிணைந்தியல்பாய்ப் —போற்றும்
நடைப்பொலிவு நெஞ்சை நயப்பிக்கும்; நல்லிப்
புடைப்பொலிவு மிஞ்சும், பொலிந்து!

காராரும் மின்னல் கவினார்ந்து காய்பதென
ஊராரு முள்ளி யுவந்திடவே —சீரார்
பயணத்திற் கேற்ற பரியாகிப் பார்க்கும்
வயணத்திற் கேற்ற வடிவு!

துரகமீ தூர்வோர்க்குத் தொய்வுமினி தோன்றாச்
சரகதியாய்ச் சாலையைச் சார்ந்து —வருகதியைப்
பார்ப்போர்தம் உள்ளம் பரவசமாம் பாராதோர்க்
கீர்ப்புற விஞ்சும் இயல்பு.

'முப்பதுகல் தூரத்தை மூன்றுகல் தூரமெனச்
செப்பவே செய்யும் பரியிது'வென் —றொப்பவே
யூரா ருரைப்பா ருவந்தா லுயர்வதனைப்
பாரில் பதியப் பகுத்து!

ஏரிருந்தா லில்லை யிருள்மற் றிதயம்
சரியிருந்தா லில்லை சமர்கள்; —பரியிருந்தால்
இல்லை, பயணத்தி லேதமித மொன்றிருந்தால்
இல்லை, 'யை யோ'வென்னு மில்!

மனமே பரியாய் மனிதாபி மானக்
கனமே கடிவாரராய்க் கண்டுங் —கினிமேல்நாம்
வாழ்வுப் பயணத்தை வாடிக்கை யாய்வைப்பின்
தாழ்வு தவிர்க்கும், தடம்!

சாமி யிதுவொன்று, சங்கீதம் மற்றொன்றால்
பூமியில் வாழ்வுப் புனிதம்போம் —காமக்
களியாட்ட மாகிக் கசிந்தழிவு மாயிற்
றொளியூட்ட மாகா துளம்!

அக்கிரமத் துக்கெல்லாம் அக்கிரமம், ஆலயத்தில்
விக்கிரகம் வைத்துவிலை யாடுவதே —அக்கிரமத்தை
யார்புகுத்தி னாரோ? 'அயம்ஆத்மா பிரம்ம'மெனப்
பார்புகுத்திப் பாரார், பயந்து!

# 44. சாலைப்புறம்

'படபடப' டென்று பரியின்கால் பட்டுத்
'திடுதிடுதி' டென்று தெறிக்கக்—கடகடென
நீண்டுயர் வேலி நெடுஞ்சாலை நேர்மாறாய்
மீண்டுயன் றோடும், முனிந்து.

வேலித் தழைதின்னும் வெள்ளாடு கன்வேகம்
காலுக்குக் கற்பித்துக் கத்தலொடும்—சாலைக்குள்
மூலைக்கொன் றோடும்; முயன்று முனைந்திடையன்
கோலைக்கொண் டோட்டக் குலைந்து.

மறியூட்டிக் காட்டும் மகிழ்ச்சிநிலை, மாறிக்
கொறியாட்டுக் கூட்டம் குலைந்து,—'வெறியூட்டி
விட்டவா றெ'ன்ன வெளியெலா மோடிவெருண்
டொட்டாமல் துள்ளிற் றலைந்து.

விலங்குகளி வஞ்சி விலகாமல் மேய்
நிலங்குனிந்த நெஞ்சுரம் நீங்கிக்—கலங்கி
எருமையும் முந்தி யிடம்பெயரச் செய்யும்
அருமையுடைத் தந்தப் பரி!

காதிருந்த தால்கேட்டும் கண்ணிருந்த தால்கண்டும்
எதிருந்தத் தால்விலகி யேற்றுச்—சாதிப்
பசுமாட்டுக் கூட்டம் பரபரப்பாய்ப் பார்த்துக்
குசியூட்டிக் காட்டும், குவிந்து.

நிந்தையில் லாதிந் நிலத்தில் நிலைத்துழைத்துத்
தந்தையாய்த் தாயாய்த் தளர்ந்தோர்தம்—சிந்தையில்
'என்றும் மறக்க இயலாத காட்சி'யென
நின்றனர், நெஞ்சு நிறைந்து.

இடுப்புக் கிரண்டுமுழம் ஏசிடும் கந்தல்
உடுப்போ டிருண்ட வுடலர்,—அடுப்புப்
படிப்பு முடித்துப் படியாளாய்ப் பண்ணைப்
பிடிப்பில் துடிப்பார், பிறந்து.

ஏவலர் பாட்டில் எசமான னாவவர்க்குப்
பாவலர் பாட்டில் பகவானாய்—நாவலரால்
சாமிகதை, சங்கீதம்; சாதிசம யப்பேச்சில்
பூமிகதை போகும், புதைந்து!

சிற்றூரும், பேரூரும்—செல்லும் வழிமுழுதும்
உற்றோர்கள் ஊரார்க் குரைத்திடவே—கற்றோர்ந்தார்
மற்றோர்க் குரைத்து மனத்திலது மங்காது
பற்றாக்க வுற்றார், பகுத்து!

'ஆடாது வல்லே அசுவத்தின் மீதமர்ந்து
வாடாது செல்லும் வடிவழகன்—நாடாளும்
மன்னன்கா' னென்பர்; 'மதிவதன னென்பார்'மற்
றன்னியுவந் தன்புற் றனைத்து!

'பிறப்பிப்போன், பேணுவோன், பேருலகில் வாழ்ந்தோய்ந்
திறப்பிப்போன், ஏழுபற்றிருப்போன்,—சிறப்பிப்போன்,
மன்னும் மனிதன்; மனம், வாக்கு, காயமெனத்
துன்றுமியல் புள்ளி யுணர்ந்து!

ஏவலனும், காவலனும் எப்போதும் தானாகி
நாவலனாய் நற்சொல் நவின்றுடலில்—நோவிலனாய்
ஆழ்ந்தறிந் தாண்டடங்கு வானாயி னானாங்காண்,
மாய்திருந் தீண்டு மகத்து!

# 45. மந்தைவெளி

தொழுவும் தொழுவும் தொகைதொகையாய்த் தொக்குக்
குழுவும் கடாரிபசு, காளை—புழுவந்
தெளியோரே மெய்ப்பா ரிவைபெருகக் கண்ணீர்த்
துளியோராய்க் காப்பார், தொடர்ந்து.

'ஆடொருகண், மாடொருகண் வண்டைகளுக்'கென்று ரார்
வீடொருகண் வாடி விரும்பிடுவர்;—'ஆடிக்குச்
சோறும் கறிச்சோறும் சோடிப் புதுத்துணியும்
பெற'வே கூறும் பிழைப்பு.

இடலோம்ப லேற்கா எசமான்கள் மந்தை—
கடலோம்ப லேற்கும் கரைபோல்—உடலோம்பி
மெய்ப்பதற் கென்றும் மிகையென்பர் கூலி, உயிர்
மாய்ப்பதற் கின்றி மருந்து.

கல்வியில் லாது, கருணையுமில் லாதுகளம்
செல்வரொல் லாத செருக்குடைய—வல்வயிறர்
வேந்தனுடன் சேர்ந்திருப்பர், வேறாயும் வேறாகாக்
காந்தமுடன் சேர்ந்தாங் கயம்!

'விந்தை'யென மக்கள் விரும்பி விளைப்படுத்தும்
சிந்தையிலிக் கற்தக்க செய்யாராய்—நிந்தைக்
குரியவவே லுற்றோர்ந் தவந்தரைத்துச்—செய்யும்
பரிவுயாங் கற்றோர் பலர்.

பயிராய்ப் பயில்வோர் பயன்படுவர்; பாரில்
செயிராய்ப் பயில்வோரின் சேர்க்கை—துயராய்க்
களையுமா றின்றிக் கசிந்துருகிக் கண்ணீர்
விளையுமா றொன்றும் ~~[illegible]~~ விதி.

'மன்னனொரு கோநாயாம், மந்திரிகள் பூனைகளாம்,
இன்று மிருப்போ ரெலிக'ளெனப்—பன்னிடவே
'தம்முடைய தேநீதி, தவறே பிறர'தெனும்
இம்மடையர்க் கில்லூ றிடம்.

ஆத லறியான் அரசவைக் கூட்சியிலே
நீதி யறியான் நடுபதி;—வாது
வழக்கறியான் நான்குற்ற வாளி; வரிக்கோ
குழக்கறியான், யாவழ வன்.

மாசுடையோன் நெஞ்சில், மடியில் மலைபோலும்
காசுடையோன் கஞ்சன் கவலாமற்—றேசுடையான்
வாழும் வகையறிந்து வாழ்பவனை வற்புறுத்தித்
தாழவகை செய்தல் தகவு!

பாராண்டான், பண்பு பகையாகப் பல்லாண்டு
போராண்டான்; பொய்மையைப் புசித்தான்;—ஏராண்டா
னில்லை; யிர மில்லைமது மில்லையிது யதுதமைதி;
யில்லையுயர்க் கெல்லை, யிகத்து.

தருமம் தவிர்த்துத் தரணியான் வானை
வருமம் தவிர்க்காது வைத்துச்—சுருமம்
உரித்துப்புத் தேய்த்துலர்த்தி யோயா தொலிக்கத்
தரித்தடிக்க வேண்டும் தமுக்கு.

தன்னை யறிந்து தருமம் தலைதாங்கி
மன்னுயிர் காத்து மகிழ்ந்திடவே—பன்னும்
புடவி பொதுவாக்கிப் போற்றப் பொலிவோன்
கடவுளெனப் பட்டான், களித்து!

## 46. மறக்கம்

இன்பங்க ளெஞ்சா திடம்பெயர; எய்த்திருந்த
துன்பங்கள் மஞ்சாய்த் தொடர்புறவே—அம்பகத்
தற்பமா யாவை யதிகரித் தாக்கமறக்
கற்பமுபொய்த் தெய்வக் கதை!

மச்சொன்று கட்ட மடிகனமில் லாமனிதன்
குச்சொன்று கட்டிக் குடிகொள்ளா—தச்சோ!
திருவோ டெடுத்துத் திரிகின்றான், தேரா
வுருவோ டுடலைச் சுமந்து!

பாடுபட்டுத் தேய்ந்து பழுத்தபழ மாய்க்கிழவன்
கேடுகெட்டுச் சாய்ந்து கிடக்கின்றான், —கூடுவிட்டுச்
'சீவனே செல்லெனவும் செப்புகிறான், சேர்ந்தோர்தம்
ஏவவுள் சொல்லா லிடிந்து!

கூட்டுக்கல் லம்மிக்கல் லார்வமாய்ச் செய்தளிக்கும்
நாட்டுக்கல் கொத்தன் நலிவுற்று—'வீட்டுக்குள்
புக்க வறுமைபுறம் போகவே இல்லை'யென
ஒக்கலொடும் சொல்வான், உயிர்த்து!

'தாழ்வைத் தவிர்த்துத் தகவு தழைத்தோங்க
வாழ்வை வளமாக்கி வைப்பதே—நம்முறை'யென்
றெண்ணாத—மன்ன னெமனெ'ன் றிகழாதோ,
புண்ணாகி யுள்ளும் புவி!

சிறுமை விளைவிக்கும் சீமான்செல் வாக்கே
வறுமை விளைவிக்கு மென்று'—பொறுமையாய்ச்
சிந்திக்கக் கோரும் சிலர்பலராய்ச் சேர்ந்தரசை
நிந்திக்க நேரும் நிலை!

அரசுமுறை யோரா அவனியிலே மக்கள்
முரசுமுறை யோர்ந்து முழக்கிப்—பரசுமுறை
கோவிலுக்குச் சென்று குழுமித் தொழுமது
காவலுக் கொன்றாத கல்!

'அகத்திலொளி ராத்மாவே ஆண்டவனெ'ன் றோர்ந்து
முகத்திலொளிர் சாத்மீகம் மொய்க்க—இகத்திலொளி
ராக்கமா யென்றும் அறிவதறிந் தாளாரை
ஆக்கும்நா ளொன்றிடின், நோன்பு!

பாரில் பரிவுறவே, பாமரர் கண்படினும்
சேரப் பரியைச் செலுத்துவான், —நேரிலது
போவதனை யோர்ந்து பொழுதோர்ந்து போயங்கே
ஆவதனை, யோர்ந்தா லகத்து!

காவேரி யோட்டம் கருகிவந் துற்றக்கால்
நோவாற மேட்டூர் நுழைவதென—மாவாறும்
வேந்தனை யோர்ந்துரை வேளா ரைச் சேர்ந்தவுடன்,
சாந்தனை யூர்ந்த சலிப்பு!

'பரியாய்ப் பிறந்துபயன் பட்டநாள் நன்றெ'ன்
றரிய வுடல்மறந் தோடி,—'அரிய
பயணம் முடிந்த'தெனப் பாங்காய்க் களைத்த
வயணம் வழுத்தும் வகை!

களைத்தவொலி காது கருகக்கை கப்பி
மனைத்தலக் காவல் மனிதன், —நினைத்ததுபோல்
வாசல் கதவை வசமாய்த் திறந்தான்காண்,
பாசம் பதியப் பணிந்து!

## 47. அன்புத்தங்கை

பல்வேறு பட்ட பலர்க்கும் பகையானோன்,
சொல்வேறு பட்ட சுயநலமி; — இல்வேறு
பட்டிருந்த மாவல் பதறுயிரா னாயுற்றான்,
கட்டிருந்த காவல் கடந்து!

திருக்குறள் கற்றுந் தெளியாதான் சிந்தை
செருக்கிருள் பற்றிச் செறிந்து — கருக்கிருளாய்
வீடெங்கும் வெட்கம் விளைவித்து விட்டுவதால்
நாடெங்கும், நட்பு நலிந்து.

அன்ன மருந்தி அயர்வகற்ற ஆர்வமொடும்
மன்ன விருந்த மயக்கறிந்து — பின்நடந்தாள்,
அன்பு மறவா அறிவுசால் தன்தங்கை
துன்பம் துறவா இடம்!

'குன்றருகி லென்றோ கடப் பிறந்தவுற
வொன்றியதில்' கென்றாள் குவிந்தவளாய் — நின்றான்மன்,
போதிவிக்கக் காட்டிப் புலவிக்கத் தோழியுந்தன்
காதிலிக்க வூட்டக் களித்து!

'அண்ணா' எனுமார்வம்; 'அண்ணா' எனுமவள்வாய்;
'அண்ணா' எனும்பெண்மை அன்புள்ளம்! — 'அண்ணா'வென்
றின்ப மிதயமுற, ஏற்ற மிகுத்திடுறப்
புன்முறுவல் பூக்கும், முகம்!

'அண்ணாவி னன்பே அரியவுயிர்க் காதர'வென்
றெண்ணா திருக்க வியலாமல் — உன்னாடிச்
செய்திருந்த சிந்தனையோ, சீர்சால் செயலியல்போ!
எய்தியதி: தெல்பா ரெவர்?

பங்கயத்தைப் பார்க்கும் பாரவுதமிழ் பாவலனாய்த்
தங்கமய மாயொளிரும் தா யவிழ்த் — தங்கைதனை
ஒத்தொன்றிப் பார்த்தான்; உவத்துறுகண் தீர்ந்தாள், பின்
முத்தொன்றப் பூத்தாள், முகம்!

அறிவொன்றை யன்றி யரண்மனையில் வேறு
குறைவொன்று கூறுவதற் குண்டோ? — உறவொன்றி
அண்ணனுக் கான தனைத்தும்செய் வித்தாள், தான்
எண்ணியதற் கேற்ப, இருந்து!

அன்னியர் மெய்நலம் ஆர்வமாய்க் கேட்டாள், பின்
பன்னி வினயகுரல் பாவைகள், — அன்னவை
புன்னியத்தில் தோன்றிப் பொலியும் புதல்வனைக்கேட்
டெண்ணியதில் தோன்றிற் றிகம்!

ஊர்நலம் கேட்டுவந்தாள்; உற்றபசு மாடாடோ
டேர்நலம் கேட்டா ளியல்பாக, — நீர், நிலம், நெல்
காவலும் கேட்டுக் கடைசியாய்க் கேட்டாள், தன்
நாவல் மரத்தின் நலம்!

ஆவல் மிகுத்தன் அறியாப் பருவத்தில்
நாவல் விதைநட்டாள் நாகமணி! — காவிலு
மரமாகி மாந்த மலிந்துகனி நல்கும்
தரமாயிற் றின்றத் தரு!

நாவல் மரத்தின் நலம்பற்றித் தன்தங்கை
ஆவல் உரைத்ததற் ககமகிழ்ந்து, — "காவலன்நான்
இன்னுமந் தங்கே யிருந்துகனி யீன்றாய்
மன்னியெமக்" கென்றான், மகிழ்ந்து!

## 48. உரையாடல்

"தங்கைநீ யங்கு தருவா யிருக்கின்றாய்;
இங்கிவ் வுருவா யிருக்கின்றாய், —பங்கயமே!
உற்றகுறை யுண்டோ வுரை"யென்றான், உற்றாரைப்
பற்றுமுறை கண்டோன், பரிந்து.

'குறையுளதேல் கூறுகெ'னக் கூறக் குரிசில், —
நிறையுளதேல் கோர நினைத்தாள், —"முறையுளதால்,
கூறுவதற் கென்றே குறித்து வரவழைத்தேன்,
தேறுவதற் கெ"ன்றான், தெளிந்து.

பொலிவுலவு புன்முறுவல் பூத்தமுகம் நோக்கி,
நலிவிலதச் செய்தியென நம்பி—நிலவும்
உளவறிய "உட்கார்ந்து ரை"யென்றான், உண்மை
அளவறியும் ஆர்வ மகத்து!

"உண்டு பசியாறி யோய்வெடுத்துக் கொண்டதன்பின்
கொண்ட குறிப்புணரக் கூறுகிறேன் —கண்டேன்
மரங்களிக்கு மாறே மனைகளிக்கும்; மற்றும்
இனங்களிக்கு"மென்றாள், இருந்து.

"பெண்ணென்ற போதும் பிடித்ததுசா திக்குமநீ
மன்னொன்றி யாளும் மனைக்கரசி! —அன்னான்;
ஆயினுமவ் வாணையை மீறுவதற் காகாது,
ஞாயமுமன் றெ"ன்றான், நகைத்து.

நகைமுகத்தி லொன்ற நவின்றதனா லிச்சொல்
பகைமுகத்தி லொன்றாத பாவை —தகைமகத்தாய்
அன்று மலர்ந்த அரவிந்த மாயமைய
ஒன்றி மலர்ந்தாள், உளம்!

"'அரண்மனைச் சோற்றுக் ககத்திலவா வற்றோர்
மருண்மனை யுன்மத்த ரென்பார்;' —பரண்மனையில்
வாழுகிற தாபதர்க்கும் வாயில்நீ ரூற்றொழுக்கித்
தாழுகிற தாக்கும், தவம்!

சோற்றுக் கவையூட்டிச் சொத்துக் குரமூட்டற்
கேற்றவனா யென்னை யியக்காதே, —சாற்றுகிறேன்;
உன்னை யுடலுறுதிக் கானதஃ துள்ளத்தை
நன்னாத தெ"ன்றன், நயந்து.

"மன்னர் குலத்துதித்த மங்கைநா னாயிருந்தால்,
இன்னசொல் சொல்ல வியல்பெனலாம்; —அன்னோ!
உழவர் குடியிலுதித்தவளென் னுள்ளம்
இழிவு படையா திகத்து!"

'ஆடம்ப ரத்துக் கவசியமா யுள்ளதெலாம்
வீடும் பரத்தி விளக்கமுறத் —தேடுவதே
ஆட்சியழ' கென்னும் அரச ரரண்மனையின்
காட்சியழ கென்னுமிக் கண்!

'மன்னனா லாளப் படுவதிம் மண்'ணென்பர்;
'மன்னனை யாளும் மது'வென்பர்; —'மன்னனெனும்
சொல்லும், சுடுகாடும் சோகத்தை யூட்டுமிடம்
இல்'லென்பர், இல்லா தவர்.

மதுமயக்கம் மாயுமுன்- மைத்துனனைக் காணும்
புதுமயக்கம் புந்தியிற் புக்கு —விதிமயக்கும்
மன்னனும் வந்தான்; மலர்ந்துமட மங்கைமுகம்
துன்னிற்றால் தூய வொளி!

## 49. நோயாளி

வேந்தனைக் கண்டோர் விரைந்தடிமேல் வீழ்ந்தெழுதல்
மாந்தர்தம் கொண்ட மரபெனினும், —வேந்தன்தான்
வந்தின்று வந்தவனை வாழ்த்தி வணங்குவது
தந்தொன்று வைத்தல் தவம்!

மெய்ம்மை மெலியாது மேதினியின் மேன்மிளிரும்;
பொய்ம்மை பொலியாது பொன்றிவிடும்; —'நொம்மையின்
மாற்றுக்கு வாய்த்த மருந்துமெய்'தா னென்னும்
கூற்றுக்கு வாய்க்கார் குரல்!

மன்னனைப் பார்த்த மடமான் மதித்தெழுந்து
புன்னகையும் பூத்துப் பொலியவே, —"என்னுயிரே!
அன்னாவும் நீயும் அவைவராய் காய்வந்தில்
கெண்ணாது செய்தே விடர்!"

"வேனல் விளைவிக்கும் வெப்பத்துக் கின்மருந்தாய்
மோனப் பனையின் முதிராக்காய் —கூவலொளி
வான்வாங்கும் நுங்காகி வாய்த்தவந் திருங்கள்
தாந்தாங்கும், என்றன் தலை!

அறிவினை யாய்ந்தகத் தாகுவீ ராகி
மறவினை மாய்த்த மனித —வுறவினர்!
உங்கள் முகத்தி லொளிரு-முனைத்தொளியே
எங்கள் சுகத்துக் கிணைப்பு.

திறந்தெரிந்து வாழும் திறவிதனைத் தீர
அறிந்திருந்து மூமா லகத்தை —மறந்திருந்து
முன்னைநா னான்டேன்; மனத்தைந் ராகுகிறீர்,
கன்னியமா யான்டும் களித்து.

ஒழுக்கத்தை யோம்புவோ ரானீர்நீர்! ஒராப்
பழக்கத்தை யோம்பினேன் பாழாய், —முழக்கத்
தறியாதார் தம்மை யடக்கி யறிவாளச்
சிறியேன்யா" னென்றான், சிவந்து!

கூடிக் குறையாக் கோளாய்க் குணங்கொண்ட
கூடவனாய்த் தோன்றி யரசாள்வான், —நாடின்
வதங்கி வளப்பிழந்து வாய்நுரை வந்தும்
ஒதுங்க நினைத்த தனம்!

உடலிருந்து மில்லை யுறுதியதில்; உள்ளே
குடலிருந்து மில்லை குணமும்; —கெடலிருந்த
தெல்லாமும் செய்தா லிதென் றலையின்று
பொல்லாத செய்யும் புகுந்து!

'மூச்சு விடவும் முடியாது; முனைந்துள்ள
பேச்சு விடவும் முடியாது —போச்சு'தென
மஞ்சலில் மெல்ல வுட்கார்ந்தான், ஓய்ந்தவுடன்
பூஞ்சலாய்க் கொல்லப் பொரிந்து.

பகலாற்றி வந்திருந்த பாழுவைப் பாவம்
முகிலாற்றி வந்திருந்த மூடப் —புகலாற்றி
மாலை மலையின் மங்கி மடிந்தது —போன்ம்
சீலமில் லாதான் செயல்!

'ஒள்ளியதொல் லொன்று முனைமுற்றா லவ்வுள்ளத்
துள்ளியதொவ் வொன்று முயர்ந்துறவு —கொள்ளு'மெனும்
மெய்க்கதை கற்று மிளிராதார், மென்மேலும்
பொய்க்கதை கற்பர், புனைந்து!

## 50. ஏறுமாறு

மன்னன் மயக்கம் மறக்கும் மறுமொழிக்காய்த்
தன்னை யறிந்தோன் தகவுரைத்தான்;—"மன்னவனே!
என்னை யொருபொருட்டா யெண்ணி வரவழைத்தீர்க்
கென்னசெய வேண்டுமினி நான்?"

"'மூன்றாம் பிறையெனவே மூதறிஞ ரின்முகமும்
சான்றோர்க்குச் சாந்தி தரு'மெனவே—ஈன்றோர்
உரைத்தசொல் லொன்றென் னுளத்திருந் தூக்கி
இரைத்தனா" லென்றான், எரிந்து!

"அரசிக் கடியேன்நான்; அண்ணன்நீ ராகிப்
பரசும் படியுறவு மானீர்!—தரிசிக்க
எண்ணி வரவழைத்தே" னென்றா னிதயத்துள்
புண்ணை வரவழைப் போன்!

கஞ்சாவும் கள்ளும் கலந்த குடிவெறியில்
நெஞ்சாற என்றும் நெடுமொழிகேட்—டஞ்சாது
சோமன் வெறுப்புகுக்கச் சோதரிகண் ணுருக்கக்
காமுகனும் மூடினான், கண்!

மூடனைப்போ லன்றேல், முழுமூட னைப்போன்ற
நாடனை யென்றும் நயவாதான்,—வாடி
வருந்தும்தன் தங்கை வதனத்தைப் பார்த்தான்,
புரிந்துகொளக் கங்குல் புதிர்!

'கத்திமுனை பட்டதிலே காரமும் பட்டதெ'ன
முத்துதிரக் கண்ணில் மொழியுதிர்த்தாள்,—உத்தமியின்
கோவை யிதழ்குழலாய்க் கொள்கை குழலிசையாய்த்
தேவையைத் தீர்க்கத் தெளிந்து!

"உண்ணா துறங்கா துரையா துயிர்சுமக்கும்
பெண்ணாய்ப் பிறந்ததைப் போலில்லத்—தண்ணா! நான்
எண்ணாத தில்லை; இயம்பாத தில்லை; யிதம்
பண்ணாத தில்லை, பரிந்து!

பச்சைப் பசுங்கிளியைப் பார்வேந்தர் பார்த்துருகி
நச்சி நயங்காண நாடியும்—அச்சோ!
குணங்காணக் குந்திக் குறிப்புணரக் கோரின்
மணங்காண முந்தாள், மதித்து!

'தேமாங் கனி'யென்று தேர்ந்'திவளென் தேவி'யெனக்
கோமான் மனத்துள் குடிவைத்தும்—ஏமாந்தாள்,
பொற்றட்டை வைத்துப் புசிக்க வுணவிடின்நாம்
கற்றட்டில் வைக்கிறாள், கை!

ஆற்ற விருந்தும் அணங்கா மவளைமனம்
மாற்ற லறியேன்; மனம்மறுகித்—தேற்றமினி
யாதென்று தேர்தற்கா யண்ணா! உனையழைத்தேன்,
தீதொன்று தீர்க்கத் தெளிந்து!

ஓவியம் தீட்டும் உளங்கொண்டாள், ஒண்தமிழில்
காவியம் தீட்டும் களங்கண்டாள்;—நாவியெனத்
துள்ளி மகிழ்வாள், துயர்துடைக்கு மாறறியா
துன்னதென் உள்ள முடைந்து.

கூடப் பிறந்த குலக்கொடியைக் கோமகனும்
நாடிப் பிறர்க்களிக்க நாடாவேல்—நீடியே
'செய்வதினி யென்ன'வெனச் சிந்தை தெளியாது
நைவதிலும் காணேன், நலம்!..."

## 51. மனோநிலைகள்

"'வாருதியில் சங்கு வைத்திருக்கும் முத்தெ'ன்னக்
காரெதிரும் கூந்தல் கயற்கண்ணி—நேரெதிர்ந்தாங்
குள்ளத்தில் வைத்துள்ள உத்தமனார் பேரென்ன?
தெள்ளவுரை" யென்றான், தெரிந்து!

"காவலன் கண்காணக் கண்கவரும் காட்சிகளாய்
ஓவியம் சிற்ப முருவாக்கக்—கோவிலில்நம்
தம்பி யுடன்தருணி தங்கியதால் வந்தவொரு
வம்பிதுமற்" றென்றான், வகுத்து.

"உழவ னுடனுதித்த வுண்மைமனம் கொண்ட
மழவ னுடனுதித்த மங்கை!—அழியா
வடிவெய்த வாய்த்து, வளமையும் வாய்த்து
விடிவெய்த வைத்த விளக்கு!

கையில் கனிநழுவிக் கண்கலலை காட்டும்முன்
நெய்யில் விழுந்தவொரு நீர்மைத்தாய்த்—தையல்நம்
இல்லத்திற் கேற்ற இளங்கிளிதா" னென்றான்காண்,
சொல்லொத்தங் காற்றிச் சுகித்து.

"நீண்டநாள் நெஞ்சில் நிலைத்த நினைவிதுதான்;
'ஆண்டகைக் கான அணங்கொருத்தி—யான்முனை'ன்
றோயாதென் னுள்ளம் உறுத்திக்-கொண் டுள்ளதனை
நீயாகித் தீர்த்தாய், நினைத்து.

விலையுருவம் நிற்கும், விலைப்பொருளில்; வேட்கும்
கலையுருவம் நிற்கும் கவினில்;—நிலைஞானச்
சிற்பிமே லாற்றல் செல்வியுள முற்றதெனில்,
'பொறுபெனவே போற்றும், புவி!

'சேயின் சிறப்புக்குச் செய்வதனைத் தும்செய்யும்
தாயின் தகைமை'யெனத் தான்செய்தாய்;—ஆயின்
தமயன்நான் செய்யத் தவறியதைத் தாங்கித்
தமக்கைநீ செய்தாய், தனித்து!

அன்னைக்கு நன்றி யறிவித்தார் யார்? யாரே
முன்னைக்கு நன்றி முறைவைத்தார்?—தொன்மைக்குள்
நெய்போல மின்றென்நினைவில் நிலைத்தாய்—நீ!
செய்போல முன்றன் செயல்!

"சிக்கலிலும் சிக்கலிக் காதல்; சிறுவானிக்
'கிக்கரைக் கக்கரை' யென்றுளது;—தொக்கிடவே
கண்ணளவில் காணேன், கனிப்புறநா னக்கரையைப்
பெண்ணளவிற் கென்றான், பிரித்து!

'தம்பியைப் பற்றித்தன் தங்கை தரும்தகவல்,
கம்பனும் பற்றாக் கருத்தெ'னவே—நம்பிச்
செயத்தக்க தாக்காது செப்பினான்: சிந்தை
வியத்தக்க தாக்கி விரைந்து!

"ஓதலை வைத்தான் உபநிசத்தில்; உள்ளத்துக்
காதலை வைத்தான் கலைமீதில்;—கோதிலனால்!
வாதனைத்து மோரான்; வளவைக்கொப் பாவெ'ன்றான்,
தீதனைத்தும் தேரான், திகைத்து!

சிற்பக் கலைச்செம்மல்; சிந்தை சிதறவிடாப்
பொற்புக் கலைஞன்; போகமெனும்—அற்பப்
பொருளின்பம் போற்றான்; புனிதவதி காதல்
மருளின்பம் போற்றான், மதித்து!"

# 52. தாங்காமை

"அகத்தூய்மை யாக்க லறிவென்ப ரான்றோர்,
முகத்தூய்மை யாக்கல் முறையென்பர், -இகத்தூய்மைக்
கிவ்விரண்டு மேற்புடைத் தென்றறிந்தா னென்தம்பி
செவ்விபெரி தென்றான், சிரித்து!

கோவில் சிலையாய்க் குறுநகைபோய்க் குன்றியுளம்
சாவில் தலையைச் சரிந்ததுபோல் -கேவலொடும்
பேச்சடங்கும்; சீலத்தைப் பேணுவோன் பேச்சால்பெண்
மூச்சடங்கும் போல வுயிர்ப்பு!

சங்கீரும் குன்றாத் தகைமைசால் முத்தென, நீர்
செங்கமல மன்ற சிதறிற்றால், -கொங்குபுகழ்
நேரிழையாள் நெஞ்சுறுதி நேயம் நெகிழ்ந்தின்று
பாரிழையா யெஞ்சப் படிந்து!

'ஈரம் இகலா யிருந்தவிற கில், தீயின்
வீரம் மிகவாய் விளைந்த'தென -நேரம்
கழியத் துயர்கழியக் கல்லுருகக் கன்னி
மொழிய முயன்றாள், முனைந்து!

கொங்குத் தமிழர் குலக்கொடியின் கோலவிழி
செங்குமுத மொப்பச் சிவந்துசிவம் -'தங்குமெழில்
மாமதியும் தட்பம் மறந்ததெ'னச்=சொரிந்தாள்,
தாமதியாத் திட்பத் தழல்!

"வீட்டிருளை நீக்கும் விடிவிளக்கை வேண்டாத
காட்டிருளை நீக்கக் கவிழ்த்திட்டீர்! -காட்டிலிருள்
நீங்கவே சாது நிலையிலது நேர்ந்தெரிந்தும்
ஆங்கதனால் யாது பயன்?

ஆணாத் காகும்-அணிகலனை யார்வமொடும்
பூணாக் காகப் புனைவித்தீர்! -பூணான்
அருமை யறியா தணிகலன்வீ ணாக்கிப்
பெருமை யுகுத்தான், பிரித்து!

நன்செய்க்குப் பாயும் நதிநீரை நாடாது
புன்செய்க்குப் பாயப் புரிவித்தீர்! -என்செய்யும்
விண்ணீர்க்குக் காக்கும் விடுநிலம் வீணாக்கிப்
புன்னீர்போல் போக்கும் புறம்!

இன்பக் கடலில் இணைந்துவிளை யாடிடநான்
அன்புக் கடலா யயர்ந்திருந்தேன்; -துன்பக்
கடலாகிச் சார்ந்து கலங்கரையே காணாத்
திடலாகி நேர்ந்த தெனக்கு!

அண்ணனும், தம்பியும் ஆண்டகைக ளாயிருந்தும்
பெண்ணொருத்தி வெம்பும் பிறப்பானேன்; -கண்ணீரால்
உள்ளத் துயரை யுலகுணரு மாறென்றும்
விள்ளத்த காது விரித்து.

தங்கையின் தொல்லைக்குத் தங்கையே தான்கர்த்தா
பங்குக்கட் கில்லை பகிர்ந்துகொளக் -கங்குலிலே
'எல்லாம் தலைவிதி'யென் றெண்ணியித யம்புவனாய்ச்
சொல்லா துலைதல் சுகம்! . ."

குடிகொண் டிருந்ததுயர் கோபமாய் மாறி
வெடிகுண்டு போலும் வெடித்துக் -கடிகொண்ட
அண்ணன் செவியை அடைத்ததுகாண், ஆருயிர்தான்
விண்ணென் றவிய விழுந்து!

## 53. பரிவு

"'காமம், கள், சூது, களவு, கொலையெனுமிந்
நாமங்கொள் தீது நவிற்றிச் -சேமங்கொண்
டுய்யுமிடம் ஆள்வா ருளெ'மன் றுரைத்திடுவர்,
துய்யவுட லாள்வார், துணிந்து!

'அறிவுக் கடலிலமிழ்ந் தாராயினோ மாயின்,
பெறுவதமிழ் தெ'ன்பர் பெரியோர்; -உறுவ
ததற்கு ளொருவழிமற் றன்பர் துயர்கண்
டிதற்கியைந் சேல், நீ' யெனல்!.."

சோகம் படர்ந்துமுகம் சூழாது சுந்தரியின்
தாகம் படர்ந்தகமும், தாழாது -யோகம்
படர்ந்துமுகம் பற்றப் பயில்வதகம் பற்ற
அடர்ந்துசகம் பற்று மறிவு!

வெல்ல விரும்பாத வில்வீரன் விட்டகணை
புல்ல விரும்பாத போர்வீரன், -கொல்ல
முயலா துருவ முனியாவா றன்னன்
அயலா யிருந்தா னமைந்து.

'மயக்க மளிக்கின்ற 'மண்பெண்பொன்', மான்பை
இயக்கு மிழுக்குக்கென் றெண்ணி-வியக்கச்
செய்தான்தன் தம்பி'யெனச் சிந்தை செருக்குறவே
எய்தியதன் பெண்ப திது!

தவறன்று தங்கைசொல்; தன்னிதயத் தன்மை,
தவறென்றும் தாங்கத் தயங்கும்; -'தவறெ'ன்று
பொன்மீது பொய்முலாம் பூசுவது புன்மையெனத்
தன்மீது வைத்தான், தவறு!

சிந்தா குலம்மிக்க செல்வியின் செவ்வரிக்கண்
நந்தா விளக்காதல் நாடியெழுந் -'தந்தோ'வென்
றங்கையைத் தங்கைதலை மீதுவைத் -'தஞ்சியகம்
பங்கமுறே' லென்றான், பரிந்து.

பற்றியெரி நொய்தாய்ப் பரவிப் பதைக்குமுன்
உற்றமுகில் பெய்தாங் குதவிடவே -முற்றி
உயிர்போக்கும் தீயின் உயிர்போன தொத்துத்
துயர்போக்கும் தோகை யுளத்து!

"கூடப் பிறந்து குறையற்றுள் ளேன்நான்; நீ
மூடித் திறந்த முளரிமலர் -நீடியே
தேனொழுக்கல் போலத் திருநெடுங்கண் நீரொழுக்கித்
தானழுதல் சாலத் தவறு!

உன்னுளத்தை யோரா தொருதவறு செய்ததனால்
என்னுளத்தை யீர்ந்த எறியீட்டி -மன்னியுள
தின்னு மொருதவறு செய்ய இனியிதயத்
துன்னின், உகுமென் உயிர்!

'கொம்பினில் குந்திக் குயிலிசை கூட்டுங்கால்
அம்பினை யுந்தும் அரக்கவெ'னத் -தம்பியுளத்
துள்ள முணரா தொருதலையா யொப்புவதும்
எள்ளத் துணியும், செயல்!

'சிந்தை செயலற்றால் சீருமறும்; சீறியெழும்
நிந்தை நெறிதவிர்க்க நேரு'மெனும் -தந்தை
தழல்கண் தனிச்சொல் தரித்திருந்தா லின்றுன்
எழில்கண் இறைத்திரா நீர்!

## 54. நேர்பாடு

*பசிக்காத போதுநாம் பால்சோறு வைத்தும்
புசிக்காது போதுமெனும் பூனை—வசிக்காது,
'வாவாவா' வென்று வருந்தி யழைத்திடினும்
'வேவே'யென் றேகும், விரைந்து!

தமயன்சொல் தட்டாத தம்பிதான்; ஆயின்,
சமயம்சொல் தட்டவும் சாரும்;—இமயத்தின்
உச்சியில் உள்ளவனை 'ஓடிவா' என்றால்நான்
'பிச்சனிவ' னென்பார், பிறர்!

வந்தனையும் வாழ்த்தும் வழங்கவே வாய்த்தவாய்
நிந்தனையி லாழ்த்தல் நெறியன்று;—சிந்தனையைத்
'தாயெ'ன்பர் ஆக்கச் செயலுக்குத் தாங்காமை
நோயென்பர், நோக்கோர்ந் தவர்!

'உற்ற உறவிலும் உற்றோர்த் துணைமொன்றக்
கற்ற கலையறிவு காப்பெ'ன்பர்;—மற்றும்
உடலோ டுயிரொன்றி யுள்ளதொத் துள்ளம்
மிடலோ டுயர்த்தும், மிகுந்து!

மலைக்கழகு மாணும் மயிலுமெனில், மாந்தர்
நிலைக்கழகு நேர்கொண்ட நெஞ்சம்;—கலைக்கழகு
உண்மையை யோர வுணர்த்தல்; உவப்பித்தல்
பெண்மையின் பேரா அழகு!

காணவே கண்ணைக் கவரும் கவின்கலையைப்
பேணவே பண்ணும் பெருமையைப்—பூணவே
சிற்பத்தில் வைக்கின்ற சிந்தை சிதற இனி
அற்பத்தில் வைக்கா தகம்!

ஓராது செய்த வொருதவறென் உள்ளத்தைப்
பேராது பிய்த்துப் பிசைகிறது;—தேராது
மேலு மொருதவறு மேவாது செய்தாலிஞ்
ஞாலமுயிர் வாங்கும், நலிந்து.

ஆயினும் தம்பி யகமமையு மாயினித்
தாயினும் நம்பித் தயவுடனே—'ஓ'யெனும்
நேரத்தில் செய்து நிறைவேற்றி நீக்குகிறேன்,
ஆரத்தி லுய்த்துன் துயர்!

*'பிறவிப் பயனாய்ப் பெறும்பேறக் கன்றிப்
பறவை பசுவெனஇப்-பாரில்—உறவுற்
றுடலோம்பும் வாழ்வுக் குயிரோம்பே' வென்றே
அடலோம்பு கின்றா னவன்!

'என்ன இருந்தாலும், என்ன இழந்தாலும்
மன்ன னுடன்பிறந்த மங்கைக்குச்—சின்ன
மனிதனை மாப்பிள்ளை யாய்மதித்தா லன்றே
எனதுயிர்போ' மென்பா ளிவள்!

அன்ன மெடுத்தநிலை யாயின் அறிவுநிலை!
மன்னன் நிலையோ-மரபுநிலை!—பன்னின்
உடும்புப் பிடியா யுயிர்போக, ஒன்றா
திரும்பிலைக்குக் கில்லை யிடம்!

ஆதலா லன்னத்தை யாதாயி னும்புக!
காதலால் தம்பி, கடத்தினனாய்ப் போதல்
அறிவுடைமை 'யென்றென் அகமுரைக்கு மென்றன்
உறவுடைமை செய்தா னுரைத்து!

## 55. புளகாங்கிதம்

அடக்கும் நிகழ்ச்சியிஃ தாகா தருகில்
நடக்கும் நிகழ்ச்சியே யாகிப் –படிக்குமெழில்
காட்டுக் கிளியுடனாய்க் காத்திருந்தாள், காவலர்பால்
விட்டுக் கிளியும், விரைந்து!

'தன்னியிங் மாட்சிக் ககத்தூ யிமை காரண'மென்
றெண்ணியிங் புற்றிய மேழுமால்! –மன்னில்
அரசனோ, ஆண்டியோ, –ஆன்மீகரா னோர்தம்
நாசனமே வேண்டத் தகும்!

'தனக்காக வாழ்தல் தரித்திரம்': தென்றும்
இனிக்காதெ'ன் றெண்ணவும் செய்தின் –றனக்காகக்
கன்னி ருகுத்துக் கருத்தை வலுவுறுத்தும்
தன்னியோ தெய்வ அமைப்பு!

ஏறுமா றாகி யிரவுபக லாயெதிர்க்கும்
கூறுமா றாகாக் கொடுமைகளை –ஏறுமா
றாதிருந் தாற்றி யகத்தமைதி யாகுபவன்
மாதரிம்மா சற்ற மணி!

ஆங்க ளிருவர்; அவருங்கொருத்தி யன்னி, அரும்
பூங்க வையாப் புனிதவதி! –யங்களிடம்
சொல்லாடான்; சோம்பியிரான்; சொக்கிச் சுதந்திரமா
யில்லாடும், ஏழுத் திசைந்து!

கோயில் குளமறியான்; கூடிக் கெடுத்தறியான்;
வாயில்பொய் வார்த்தை வரவறியான்; –நோயில்
படுத்தறியான, பாரில் பயமறியான்; பாங்கில்
கடுத்தறியான், காட்சியிற் காண்!

ஆவைம் காணேன், நான்; ஆற்றாமை யுங்காணேன்;
கோனுவது காணேன்; குறிப்போர்ந்து –காணுவது
அவ்வாறக் கண்டாள்; கடவுளையும் கண்டான்போலும்
மன்னாரும், விண்டார், மகிழ்ந்து.

பொன்னை மதியார்; புவியை மதியார்; மற்
றென்னை மதியா ரிவராயின், –பின்னை
'மனித'ரென மாட்டேன்; மனிதராய் வாழும்
புனிதரெனக் காட்டும், புலன்!

படலியி ருள்ளவரை யுன்னைத் தொனித்தென்
முடவுறைய வுள்ளவர்க்கன்றி –மடம்படேன்,
கொம்பு முளைத்தவொரு கோமான்வந் தாரிபுகுந்த
தம்பித்த போதும், தளர்ந்து.

பிறப்ப தொருமுறை, பேரெய்திப் பேணி
யிறப்ப தொருமுறைதா னென்றால் –சிறப்ப
தனைத்தும்நன் காற்றக் கறிந்தாங்கை பற்ற
நினைத்துநெறி நிற்பேன், நிலைத்து!

பெற்றோர் விருப்பம் பெரிதும்வே றென்றாலும்
உற்றோர் வெறுப்பை யுகுத்தாலும் –கற்றோர்
கருத்தில் கடைத்தேற்றம் காண்பதுமெய் யாயின்
விருத்திவிடை தேற்றம், விதி!

இபான்னன் புகழே புளகிக்கப் போது"மென
வுன்னி வுளங்குளிர்ந் தொன்றினான், –அன்னம்
மதவிமன மாற்றத்தில் மாமனிதன் தோற்றம்
புதுமைமெனப் போற்றிப் பொலிந்து!

## 56. கிளிமொழி

தேமொழிப் பேச்சு தெளிவுநிலை யெய்தியதும்
சோமனின் சொந்தச் சுகதுக்கம், —கோமதிபால்
மக்கள் மகிழ்ச்சி, மனநலன், மற்றுமுள
ஒக்கலெலாப் புக்க துவந்து!

வயலும் செழித்து வளர்ந்திடவே வாய்த்துப்
புயலும் பொழிந்து புனலாய்ப்—பயிரும்
சுனைகள் சுரந்து, சுகப்படவே நொய்யல்
வினைகள் பரப்பும் வெளி!

நீதி நெறியறிந்து நிற்காது; 'நீச'ரெனச்
'சூதுச் சுயநலமே சூத்திரமாம்—வாதம்
வழக்கு வளர்த்துவதால் வையம்பா ழெ'ன்று
முழக்க முயலுமவன் வாய்!

"சத்தியமே மண்ணில் சரியான சக்தி'யெனும்
உத்தமரி னெண்ணம் உளங்கொளார்—வித்தகராய்ச்
சாதிப்ப தொன்றும் சகத்தினில் இல்லையெனப்
போதிப்ப தொன்றும் புலன்!

காடு கடந்தவொரு காரணமாய்க் கார்முகிலும்
ஓடி யுலகை யுலர்த்துமென—நாடியினிச்
செய்வதனைச் சிந்தித்தான்; செந்தமிழைத் தன்செவியில்
பெய்வதெனப் பேசும் கிளி!

'உள்ளத்தை யள்ளிக்கொண் டோடி ஒளிந்துள்ள
கள்ளனைக் காட்டிக் கொடுப்பார்க்கு—வள்ளத்தில்
தங்கம் முகந்து தருவாம், பரிசெ'னவே
கொங்கறியக் கொட்டும், பறை!

ஆசையை மூட்டி அறிவை அறவொழுக்கி
ஓசையைக் காட்டா தொளிந்துள்ள—'கோசைக்குப்
பாசமும் இல்லை; பரிவுபாங் கில்லை'யென
ஏசுகாய், செல்லக் கிளி!

'பாலும் பழமும் படைத்துப் பசியாற்றிச்
சில மறிந்தொழுகும் செல்மகள்—கோலமுகம்
கண்டுற்றுப் பாசக் கவலை களைந்திடவா,
என்றுற்'றென் றேசும், கிளி!

'முன்புத்தி யில்லை'யென மூத்தோர் முகஞ்சுழித்தும்,
'என்புத்திக் கில்லை யிணை'யென்பான்—'இன்பத்துக்
காதலனே! வந்து கடிமணம் காணிற்
றீதிலனா' யென்னும் கிளி!

'காவில் உலவும் கனிவண்டே! காதலன்னை
வாவிக் கமலம் வழிபார்க்கும்;—பூவில்
பொருந்திப் புதுமதுவைப் பூசித் தருந்தித்
திருந்தவா', வென்னும் தெளிந்து!

'உன்வரவுக் காக உயிர்சுமந்தே னொன்றாயேல்
என்வரவு காப்பா னெமனெ'ன்று—பின்வரவு
வேண்டாது தீஞ்சாற்றுச் செங்கரும்பு வேம்புகாண்
உண்டானை' யென்னும், அது!

'வாழப் பிறந்த வனிதை வளப்பனைத்தும்
தாழப் பறந்த தருகணனைச்—சூழப்
பிறந்தவனே மாறாய்ப் பிரிப்பா'னெனப்பேச
அறிந்ததுகா ணீறாய்க் கிளி!

## 57. சுடரும்பொன்

"வீட்டுக் கிளியின் விருப்பம் வெகுவாகக்
காட்டுக் கிளியும் கருத்துற்றுக் – கேட்டறிந்து
காதலிக்கப் பேசிக் களிப்பித்த தெ"ன்றாளும்
மேதினிக்கண் மேலோன், மிகுந்து!

சோகமணி யெனும்தன் சோதரன் சொல்லோர்ந்து
நாகமணி தானும் நயந்தவளாய் – "மேகமணி
கீற்றுப் பிறையாய்க் கிளுகிளுப் பூட்டிடவும்
நோற்றனன்நன்" னென்றாள், நொடித்து!

"கற்ப தனைத்தும் கசடறக் கற்றறிந்த
சிற்ப மெனத்தக்க செல்வமகள், – பொற்பாய்
மணக்கும் மகிழமலர்; மனத்தை மகிழ்விக்கும்
குணக்குன்று கானக் குயில்!

வெண்கதிர் வெப்பம் விளைப்ப தியல்பாயின்
தண்கதிர் தட்பம் தரலியல்பே! – பண்குதிரும்
மாங்குயிலாய், மானாய், மலராய், மலர்மணமாம்
பாங்கியற் பாவை படிவு!

"'பொருளொன்று மட்டும் புகலெ'னப் போற்றல்
மருளெ'ன்று தட்டி மறுப்பாள்; – அருளொன்றி
ஏற்றற் குரிய அறிவமைதி யன்புடையாள்,
போற்றற் குரிய பொருள்!

காத லெனுமதனைக் காத்துக் கடைப்பிடித்தும்,
ஆத லுறுதலதை யாராய்ந்தும், – பேதமில்
நோதல் குறைந்துரிய நோற்றல் நிறைந்திருந்தால்,
போதுமிது, போற்றும் புவி!

பானுமதி போலப் பயமறியாள்; பண்புகளால்
ஞானமதி போலும் நடைநயங்கள் – வானமதி
நாணி, எழிலிக்குள் 'நங்கை யெழில்முறுவல்
பூவே' யெனப்போய்ப் புகும்!

மண்ணிடும் மண்வேண்டாம்; மாடு, மனைவேண்டாம்;
பொன்னில் புனைபூணும் வேண்டாம்மற் – றன்னம்
அறிவொன்று கொண்டே அகிலத்தை யாளும்
திறனொன்று கண்டாள், தெளிந்து!

பனியிரா வுற்ற பருதியொளி பட்டால்,
முனியிரா வுற்ற துலைவி – தனியிரா
ஞா சிறா லாலி யுறவொன்றி யோர்ந்தொழுகின்,
தேனுறா றாகும், தினம்!

வானோக்கிச் சென்றகல் வையத்தில் வந்துவிழத்
தானோக்கி நின்ற தவச்செல்வி – மேனோக்கும்
நம்பிக்கை நைந்தால் நலமாகக் காக்குமுயிர்
வெம்பிவெளி யேறும், விரைந்து.

தொகுத்துரைத் தாலும் தொடர்கதையாம்; சொல்லை
மிகுத்துப் பெறுவதொன் றில்லை, – அகத்தில்,
மலப்பற்றொன் றின்றி மனமாட்சி மல்கும்
கலப்பற்ற தங்கமிது காண்!"

அன்னத்தைத் தம்பி அணுகாத காரணத்தை
இன்னதென நம்பி இதயத்தோர்ந் – தன்னி
மொழிந்த தனைத்தும் முறையாகி உள்ளத்
தழுந்தப் பதிந்த தது!

## 58. அறிவிப்பு

'செம்பொன் னுருக்கிச் சிறக்கவார்த் தன்னகவின்
வம்புலாம் பொய்கை வதியன்னம் — தம்பியைப்
பார்க்க விரும்புகிறாள், பானுமதி! பாங்காய்நம்
ஆர்க்கனுப்பிடு' முன்னி யுணர்ந்து!....'

ஆனமுத லப்பொழுதே ஐந்துமடங் கானதுபோல்,
பானுமதி ஓலை படித்தவுடன் — 'ஞான'மிதென்
றுள்ளமும் பூரித் துடல்பூரித் துச்சிகுளிர்ந்
'தொன்னியதிடு' தெ'ன்றான், உரத்து.

தம்பியும் வந்து தனிமகள்தன் அன்னிமுகம்
தும்பியும் வந்து துவைந்துமலர்ப் — பம்பியவா
றற்றநற் செய்திதனை யோர்ந்து கொளவுற்றான்,
பற்றுபரி வெய்திப் பகுத்து!

கொழுந்தன் முகமதியைக் கூர்ந்துணர்ந்து தன்னி,
"இழந்த தெதிர்கொண்ட தென்னப் — பழந்தனமாய்த்
தேடி வரவுனது, தேர்ந்தெடுத்துத் திறனுனை
நாடிநம் வீடு நயந்து!

காலத்தில் முற்றிக் கனிந்திடின்று கன்னிமனம்
ஞாலத்தில் மற்றோர் நயந்திடினும் — சீலத்தில்
ஓங்காரை யொட்டா தொதுக்கி யுனையெதிர்பார்த்
தேங்கிடுதா மெட்ட, இசைந்து!

'அன்ன'மெனில் வானிற் கழகளிக்கும் அஃதொன்று,
'அன்ன'மெனில் ஆகார மஃதொன்று, — 'அன்ன'மெனில்,
'இன்னுமொன் றெ'ன்ன இருந்தின் றழைக்கிறதாம்,
தன்னிடத்துக் குன்னைத் தனித்து!

கோவைக் கனியிதழாய்க் கூர்முல்லை யேபல்லாய்
நாவில் கவிதை நலமெய்திக் — கோவில்
குடிகொண்ட சிற்பமுயிர் கொண்டுன்னைக் கண்டு
பிடிகொண்ட தாக்கப் பிணித்து.

உள்ளமதில் காத லொளித்துக்கொண் டுற்றார்க்குப்
புள்ளிமா னாக்கிப் புலப்படுத்தும் — கள்ளுக்கங்
கக்காவும், அண்ணனும் ஆசிகூர்ந் தாரெனவே
ஒக்கவுவக் கின்ற துளம்!

சென்றுவா தம்பீயுன் சிந்தைகளி கூர்ந்திங்கு
நின்றுவீண் செய்யாது நேரத்தை — என்றென்றும்
நல்லவர் குன்றார்; நலமறியா ரொன்றார்; நீ
செல்லலா "மென்றாள்", சிரித்து.

பூசி மெழுகிப் புகழாதும், போதுமென
ஆசி யொழுக அகழாதும் — பாசமெனப்
பேசியும் பெற்றுப் பெருமையுறல் பேரன்பின்
மாசுமறு வற்றார் மனம்!

"தாய்செய்த நல்ல தவப்பயனாய்த் தானிருந்து
நோய்செய்த தெல்லாம்நன் நோன்பாக்கிச் — சேய்செய்த
தத்தனையும் மன்னித் தறிவூட்டி யாட்கொள்ளும்
உத்தமியுன் சொல்லென் உயிர்!

ஆழ்த்தும் அவலத்தை ஆசியத் தாலகற்றித்
தாழ்த்தும் தவறு தவிர்த்தென்னை — வாழ்த்தும்
அன்னிநின் வாக்கை யகத்தில்வைத் தங்கிநான்
நன்னுவனிந் நாள்நல்ல நாள்!

## 59. அறிவகம்

'தாமரை யல்லி தளையவிழ்ந் தங்கொளிரும்
தேமருவும் நல்ல திருக்குளம்போல் — கோமதியின்
இல்லமிங் குள்ளதனால்' 'எங்கணும் இன்ப'மெனச்
ஒல்லுமென உள்ளதவ் வூர் !

உண்மையும் தானும் 'உயிரும் உடம்பு'மெனப்
பெண்மையைப் பேணிப் பெருமிதமாய் — வண்மையொடும்
வாழ்கின்ற கோமதியின் வாய்வழங்கும் வாழ்த்தினையும்
சூழ்குன்றா தற்றான், உவந்து.

'பொய்யொன்று சொல்லிப் பொலியாது, பொய்ச்சொல்லை
மெய்யென்று புல்லி மெலியாது — செய்யொன்றி
வைகுந் தலத்தில் வளம்பெருக்கி வாழ்பவனில்
வைகுந்த' மென்பர், வசித்து.

புகலப் புகின், புலனில் பொய்புகுதல் போலப்
பகலியும் பொய்புகுந்து பாரில் — முகிலும்
பொழியாது பொய்புகுத்தின் போற்றும்நம் வாழ்வில்
வழியாது வைகு முயிர்க்கு?

முற்றத்தில் சால முனைப்பாக நின்றிருந்த
கொற்றக் குதிரை குறிப்போர்ந்து — பற்றறவே
ஏறி யமர்ந்தான்; இதமா யிணைந்திமேல்
வேறுமனை வேண்டி விரைந்து.

'அஞ்சாமை, யாக்கம், அறிவடக்க மன்பமைதி,
அஞ்சாமை யூக்கம், துணையாகி — மிஞ்சாமைக்
கூரிங்கண் இல்லை யொருவனென, ஊர்ந்தான்காண்
பாரிங்கண் சொல்லைப் பதித்து !

'பொன்னன் புரவி புதுமைப் புரவி'யென,
'மின்னின் விரைவு மிகு'மெனப் — பன்னிரால்
கன்னலும், செந்நெலும் காத்துக் கழனிகளும்
தன்னியமைப் பானர், தமித்து !

நேரமும் நீங்கும்; நெறிநீங்கும்; நேரெதிர்ந்தான்
கோரமாய் நீங்கா துயிர்நீங்கும்; — ஊ ரமிசி
நீங்காது நிற்கும் நிலையில்லை; நேர்ந்தநிலம்
தங்காது தாவும், பரி!

'பாங்கான வூர்தி பரி'யெனவே பார்த்தவர்கள்
நீங்காது நின்று நெகிழ்ந்துரைப்பர், — தேங்காது
பேறு பதினாறும் பெற்றிருக்கும் பேரறிஞர்க்
கூறுவரா தென்ப துணர்ந்து !

'சிறுவாணி நீர்போல் செயல்படும் செல்வ'ரென
உறவோருக் கீர்போ லுதவ — மறவானைக்
காவக்காத் துள்ள கவிக்குயிலைக் காண்பான், போய்
புணக்காத் துள்ளம் புரிந்து !

கண்ணும் இவன்மீது; காதும் இவன்மீது;
எண்ணும் இதய மிவன்மீது; — மண்ணும்
மறுகி, மனமாழ்கும் மங்கைக் குருகிக்
குறுகக் குறையும், வழி!

வீசிக் கமழும் விளைவில்லை; வித்தகியும்
மூசிக் கமழும் முழுரோசா! — நாசிக்கு
நல்ல விருந்தாகும்; நாளைமண மாலையெனப்
புல்லவும் கூடும், புனைந்து !

## 60. மலரும்மணமும்

ஆவ லகத்தி லரும்பிப்போ தாயன்னம்
பூவில் முகத்தைப் பொலிவிக்கக்—காவல்
கடந்தறிவில் காத்துக் கமழ்ந்திடவே, காலம்
நடந்தறிவில் பூத்ததந் நாள்!

'தோழி துயருறவும் தொகை யுயிருறவும்
நாழி நயந்துநா ளாகியொரு—ஊழியெனக்
காத்திருந்த காரிகையைக் காண வருக'வெனும்,
கூத்திருந்த தாய்குழுமி யூர்!

குவளைவிழி கூர்ந்து, குதிரைவரக் கண்ட
பவளவிதழ்ப் பாவைமுகம், பைய—அவிழுமெழில்
செந்தா மரையாய்ச் சிவந்து மலர, "அவர்
வந்தார்!" எழுமவள் வாய்!

"இருளஞ்ச வந்த இளஞ்சுடரே! என்றன்
மருளஞ்ச வந்த மதியே!—அருளெஞ்ச
வந்தீர்! வருக! வதன மலர்மணக்கத்
தந்தீர், தவிர்க்கா துயிர்!

கைகுவித்துக் கால்தொட்டுக் கண்கலங்கி முத்துதிர
மைகுவித்த கூந்தல் மலர்குவிய—மெய்குவித்த
பொன்னணிகள், மின்னப் புலன்மின்னப் "போவோம்நாம்
மன்னவனே!" என்றாள், மகிழ்ந்து!

"காய்ந்த கழனியிலே கால்வாய்நீர் கண்டாங்கென்
ஓய்ந்தவுயி ரோடாமுன் உற்றீர்நீர்!—ஆய்ந்தில்
வணிமாலைப் போழ்தி வணிவித்தே விஃதென்
மணமாலை" என்றாள், மலர்ந்து!

மணம்சாட்சி யாக மணந்தோம்நாம்; மற்றும்
இனம்சாட்சிக் கிண்டியுள ரேற்றோர்!—தினம்சாட்சி
திங்கள்; செந் தேனாய்த் தெவிட்டா இளமாலை!
கங்குல் கவினார்ப் பிறை!

வரகும் தினையும் வயிறருத்தி வாழ்வேன்
மிருகமென மீளென்மற் றிங்கே,—நரகிலும்
தாழுமிடம்; இங்கினிநான் தங்கி யுயிர்தரியேன்,
வாழுமிடம் செல்வோம், வரித்து!

அன்னத்தின் பேரன் பமிழ்தா யகம்பற்றி
மின்னொத்தின் பெய்த மிளிர்ந்திடவே—பொன்னப்பன்
கண்ணொளிரக் கன்னிகையின் கண்ணீர் துடைத்தெடுத்துப்
பண்ணொளிர வைத்தான், பரிந்து!

காணத் தகுந்தவொரு காட்சியது; காலமெலாம்
பேணத் தகுந்தவொரு பெண்ணுடனே—சேணத்தில்
தானு மமர்ந்தவனாய்த் தாவுகெனப் பாயுதுகாண்,
மானனைய மேனிப் பரி!

தங்கை தமயனுடன், தன்வீட்டுத் தாங்காமை
கங்கையறச் சாற்றும் சமயத்தில்—அங்கையிலே
நெல்லிக் கனியெனவே நேர்ந்த நிகழ்விதையார்
சொல்லவுளர் சோகம் சுமந்து?

வாழி மணமக்கள்; வாழி யவருர்தி!
வாழி வளமாயிவ் வையகமும்—வாழியரோ
சாத்மீகம் சத்துசித் தானந்த மோமெனவே
ஆத்மீக மாகி யகத்து!!